

# தமிழரசு

16-5-1992 ரூ.1

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

# தமிழரசு

வைகாசித் திங்கள் - 3

மலர்:22 இதழ்:22

திருவள்ளுவர் ஆண்டு 2023 16-5-1992


## இந்த இதழில்...


அரசு வழங்கும் உதவிகளின் பலனைப் பெற நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின்கீழ் வர வேண்டும்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 2

'நீங்க நல்லா இருக்கனும்' தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத் தொடக்கவிழா —மாண்புமிகு முதல்வர் உரை ... 6

செய்யும் தொழில் அனைத்திலும் நெய்யும் தொழில் நிகரற்றது. —மாண்புமிகு முதல்வர் உரை ... 11

இராமேசுவரத்தில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு ... 15

தூத்துக்குடி விமான நிலையத் தொடக்க விழா —மாண்புமிகு முதல்வர் உரை ... 17

வீடு கட்டுவதற்கு முன் கவனிக்க வேண்டியவை ... 24

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் குடிநீர்த் திட்டப் பணிகள் ... 27

வாழ்வு தரும் வசம்பு ... 29

ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப்பதே என் வாழ்நாள் நோக்கம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

செயற்கைக்கோள் மூலம் ஒலி ஒளி தொலைத் தொடர்பு ... 38

சேலம் மாவட்டம்: பாலமலைப் பழங்குடி மக்கள் ... 43


மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டப் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டார் (11.5.1992).





# அரசு வழங்கும் உதவிகளின் பலனைப் பெற நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின் கீழ் வர வேண்டும்!

மிகுந்த எழுச்சியோடும், ஏற்றத்தோடும் இன்று நடைபெறும், அகில இந்தியக் கைத்தறி நெசவாளர்களின் மாநாட்டைத் தொடங்கி வைப்பதிலும், நெசவாளர் உடன்பிறப்புக்களை நேரில் சந்திக்கிற வாய்ப்பு பெற்றதிலும், நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.

வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்து, நமது மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை வழங்குகிற பெருமை, நெசவுத் தொழிலுக்குத்தான் உண்டு. அதனால்தானோ என்னவோ, ஏறத்தாழ ஒரு வாரக் காலத்திற்குள், கைத்தறி நெசவாளர்கள் சார்ந்த இரண்டு விழாக்களில், நான் கலந்து கொள்கிற சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளேன். இது கைத்தறி நெசவாளர்களுக்கும், எனக்கும் இயற்கையாகவே ஏற்பட்ட இணைப்பு.

தொன்மை வாய்ந்த இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான சகோதரர்களும், சகோதரிகளும், இன்று ஏழ்மையிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கின்றனர் என்ற உண்மையை, நான் நன்கு அறிவேன். அதனால்தான், தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, முழு முயற்சியுடன் எங்கள் அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி, அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி வருகிறது. உதாரணமாக, ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், சென்ற ஆண்டு நூலின் விலை, மிக அதிக அளவு உயர்ந்த நிலையில், பல நெசவாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபொழுது, குறைந்த விலையில் அவர்களுக்கு, 2,000 பேல் நூலினை வழங்க

ஆணையிட்டேன் என்பதை, நீங்கள் அறிவீர்கள்.

அவ்வாறு உங்களைத் துயர் வந்து அணுகும்பொழுது, தயங்காது முன் வந்து, உதவிக் கரம் நீட்டும் அரசாகத்தான், எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது; தொடர்ந்து செயல்படவும் தயாராய் இருக்கிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உடுத்தித் தெரிந்துகொள்ள வேண்டிய இந்தத் துறையின் பெருமைகளோடு, படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளும் பல உண்டு. மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறும், பொருந்துவதாகவும், தங்கள் தயாரிப்புகளை மாற்றிக்கொண்டால் தான், எதிர்காணும் தொழில் போட்டிகளில், கைத்தறி நெசவாளர்கள் வெற்றி காண முடியும் என்பதை, நெசவாளப் பெருங்குடி மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவேதான், நெசவாளர்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் புதிய ரகங்களைத் தயார் செய்யவும் உதவும் வகையில், நவீன யுக்திகளைக் கையாள, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம். அவர்களுடைய தறியில் சிறு மாறுதல்கள் செய்து, உற்பத்தித் திறனையும், தரத்தையும் உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விஞ்ஞானம் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிற இந்தக் காலத்தில், கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்காக, விசைத்தறிகளின் வளர்ச்சியைத் தடுத்து, நிறுத்தி விடவும் முடியாது. ஏனெனில், விசைத்தறிகளின் வளர்ச்சி, நவீன காலத்தின் கட்டாயமாகும்.

ஆனால், அதற்குப் பதிலாக, நமது கைத்தறி நெசவாளர்களின் உயர்விற்கு, என்ன என்ன சிறப்புத் திட்டங்கள் வகுத்து, எப்படி எப்படி அவர்களுக்கு ஊக்கம் தந்து, உதவிகள் புரியலாம் என்கிற சிந்தனையின் அடிப்படையில்தான், நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அந்த முயற்சியின் விளைவே, கைத்தறி நெசவாளர்களில், விசைத்தறி வாங்க விரும்பி முன் வருவோருக்கு உதவும் திட்டமாகும். தற்போது கைத்தறி நெசவாளர்களைவிட, மற்றவர்கள்தான் வியாபார ரீதியாக விசைத்தறிகளை அமைத்து, முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள்.

எனவே, எங்கள் அரசு வகுத்துள்ள திட்டத்தின் கீழ், விசைத்தறி அமைக்க முன் வருபவர், கைத்தறி நெசவாளராக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் மேலும் அதிக அளவில் பயன்பெற வேண்டும் என்பதற்காக, கைத்தறி வைத்துள்ள நெசவாளர்களுக்கு, இதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், எங்கள் அரசு முடிவு செய்துள்ளது. இந்த எண்ணத்தின் செயலாக்கமாகத்தான், எதிர் வரும் 10 ஆண்டுகளுக்குள், தமிழகத்தில் உள்ள 37,500 கைத்தறி நெசவாளர்களுக்கு, 75,000 விசைத்தறிகள் வழங்கும் திட்டத்தை, சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

நாள்தோறும் உழைத்தும், நெசவாளர்கள் ஈட்டக்கூடிய ஊதியம், மிகக் குறைவாக இருப்பதாலும், உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகள் உரிய தரம் இல்லாததா முடியும் என்ற உண்மையை உணர்ந்து, அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். அதே நேரத்தில், மக்களைக் கவரும், அவர்களால் விரும்பி வாங்கப்படக்கூடிய துணி ரகங்களை நெய்யும் கைத்தறிகளை மாற்றும் எண்ணம், எங்கள் அரசுக்குச் சிறிதும் இல்லை. அத்தகையோரின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களையும், அரசு கவனத்தோடு செயல்படுத்துகிறது என்பதை, இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கைத்தறிகளின் செயல்பாடுகள், நெசவாளர்களின் அணுகுமுறை பற்றிய சில கருத்துகளும், என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில், 3.27 இலட்சம் கைத்தறிகள், கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்குகின்றன. அவ்வாறு ஒரு அமைப்பின் கீழ் அவர்கள் இருப்பதால், அவர்களின் நலனைப்

# அனைத்திந்தியக் கைத்தறி நெசவாளர் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை

லும், போதிய வருவாய் கிடைக்காது அல்லலப்படும் நெசவாளர்களுக்கு, இத்திட்டத்தின் மூலம் விசைத்தறிகள் வாங்க உதவிகள் செய்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பது தான், எங்கள் அரசின் நோக்கமாகும். எங்கள் அரசைப் பொறுத்தமட்டில், நெசவாளர்களை எங்கள் அங்கமாக நாங்கள் காண்கின்றோம். அவர்களது வாழ்க்கையை எப்படியும் உயர்த்த வேண்டும், என்று உறுதி பூண்டுள்ளோம்.

எனவே தான், கைத்தறியையே நம்பி, அவர்கள் தயாரிக்கும் பழமையான துணி ரகங்கள், விலை போகாத நிலையில், விரும்பி வாங்கப்படாத நிலையில், வறுமையில் வாடும் அந்த நெசவாள உடன்பிறப்புக்களுக்கு, கைத்தறிக்குப் பதிலாக, விசைத்தறிகள் வழங்கிக் கை கொடுத்தால் தான், அவர்களை ஓரளவு உயர்த்த பேணிக் காப்பதில், அரசு நேரடிக் கவனம் செலுத்த எளிதாக இருக்கிறது. ஆனால், கூட்டுறவுக் குடையின் கீழ் வராத கைத்தறிகளுக்கு, அரசு நேரடியாக உதவுவதில், சில நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. சில காலகட்டங்களில், அவர்களுக்குக் கொடுக்கும் உதவிகள், அவர்களைப் போய்ச் சேராத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் அனைவரும், கூட்டுறவு அமைப்பின் கீழ் முழுமையாக வர வேண்டும் என்ற என் எண்ணத்தை, இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்குக் கைத்தறி நெசவாளர்கள், தங்களது ஒருமித்த ஆதரவினைத் தருவார்கள் என்றும் நம்புகின்றேன்.

அரசு வழங்குகிற ஆதரவினை, உதவிகளின் பலனை, நீங்கள் முழுமை

அனைத்திந்தியக் கைத்தறி நெசவாளர் மாநாடு 9.5.1992 அன்று சென்னைத் தேனாம்பேட்டைக் காமராசர் திடலில் நடந்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்து, நவீன மயமாக்கப்பட்ட கைத்தறியை நாட்டுக்கு அர்ப்பணித்தார். மறைந்த சரவண பவானந்தர் அறக்கட்டளை சார்பில், நலிந்த எட்டு நெசவாளர் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கினார். முன்னதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கை ஏற்றி வைத்தார்.

மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு அசோக் கேலோத் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், 'நெசவாளர்களுக்குத் தேவையான நூல் குறைந்த விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நூல் வியாபாரத்தை அதிகரிக்க இவ்வாண்டு ரூ.90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது' என்றார்.

கைத்தறித்துறை வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ராஜீவ்காந்தி உள்ளிட்டவர்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்து, மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் திரு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் பேசுகையில், 'கைத்தறித் துறைக்கும் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் துறைக்கும் இடையே உறவு தேவை. இதற்கு உதவும் வகையில் தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதி ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அங்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதிக் குழுவின் கிளையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்ட தமிழ்நாடு இ.காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு வாழப்பாடி கே. ராமமூர்த்தி அவர்கள் பேசுகையில், 'கைத்தறிக்கென 22 ரகங்களை ஒதுக்குவது குறித்து உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை விரைந்து முடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

மாண்புமிகு தமிழகக் கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், 'தமிழகத்தில் இதுவரை 500 கைத்தறிகள் நவீனமயப் படுத்தப்பட்டுள்ளன' என்றார்.

விழாவில், கேரள முன்னாள் ஆளுநர் திரு. பா. இராமச்சந்திரன், திரு நல்லி குப்புசாமி, கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவின் தலைவர் திரு. எம்.பி. ராதாகிருஷ்ணன், அகில இந்தியக் கைத்தறி சம்மேளனத் தலைவர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர். மாண்புமிகு அசாம் கைத்தறித்துறை அமைச்சர் திரு பரூவா அவர்கள் விழாவில் கலந்து கொண்டார். முன்னதாக, மாநாட்டு வரவேற்புக் குழுவின் செயலாளர் திரு ஆர். தாமோதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாக்குழு சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

—செய்தித் தொகுப்பு: - பி.வி. கிரி.


யாக அடைய வேண்டும் என்றால், நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின் கீழ் வர வேண்டும் என்பது, தற்போதைய அவசியமான அவசரத் தேவை என்பதை, மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைய தினம், இங்கே உரையாற்றிய பெரியோர்கள், நெசவாளர்களின் நிலையைப் பற்றியும், பிரச்சினைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்து, பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்துள்ளார்கள். அவை அனைத்தையும் பரிவுடன் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு, முடிந்த உதவிகளை விரைவில் எங்கள் அரசு செய்யும், என்று உறுதி கூறுகின்றேன்.

குறிப்பாக, தமிழகத்தில் தற்போது சிட்ட நூலுக்கு (Hank Yarn) விதிக்கப்படும், 2 சதவிகித விற்பனை வரியை, நீக்க வேண்டும் என்றும், மற்ற தென் மாநிலங்களில் இந்த வரிவிதிப்பு இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். இதனைப் பொறுத்த மட்டில், அரசு இக்கோரிக்கையினை ஏற்கெனவே விரிவாகப் பரிசீலனை செய்துள்ளது.

அரசின் தற்போதைய நிதி நிலையில், விற்பனை வரியை நீக்கி ஆணையிட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க முடியாத நிலையில் உள்ளது. இருப்பினும், இது குறித்து தக்க சமயத்தில் அரசு பரிசீலனை செய்யும்.

அடுத்து, தனியாரிடம் உள்ள கைத்தறிகளுக்கும், குறைந்த விலையில், கூட்டுறவு நூற்பு ஆலைகளில் இருந்து நூல் வழங்க வேண்டும் என்றும், இங்கே கேட்டுக்கொள்ளப்பட்டது. இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. வியாபார நோக்கத்தோடு, இதனை ஒரு தொழிலாக நடத்தி வருபவர்கள், மற்றவர்களுடன் நேரடியாகப் போட்டியிடுவது தான் நியாயமாகும். அவ்வாறு அவர்களுக்குக் குறைந்த விலையில் நூல் வழங்குவதால், கைத்தறி நெசவாளர்கள் நேரடியாகப் பயன் பெறப் போவதில்லை.



எனவே, எவ்வித நேரடிப் பயனும் நெசவாளர்களுக்கு இல்லாத இத்திட்டத்திற்கு, அரசு உதவ முன் வர வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், கைத்தறி வைத்திருக்கும் நெசவாளர்களுக்கும், நேரடியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டு உள்ள தொழிலாளர்களுக்கும், அவர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாவிடிலும், அவர்களுக்கு முடிந்த அளவு, எவ்வளவு உதவ முடியுமோ, அவ்வளவு உதவிகளையும் செய்ய, எங்கள் அரசு முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், தமிழக நெசவாளர்களின் சார்பாக, மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் அவர்களுக்கு, நான் ஒரு கருத்தினை முன் வைக்க விரும்புகின்றேன். இந்தியாவில் உள்ள நெசவாளர்களின் நலன், காக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் மத்தியஅரசு அதன் ஜவுளித்துறை ஆணையர் (Textile Commissioner) மூலமாக, ஒவ்வொரு நூற்பு ஆலையும், அதன் உற்பத்தில் 50 சதவிகிதம் சிட்ட நூல் (Hank Yarn) தயாரிக்க வேண்டும், என்ற நிபந்தனையை விதித்துள்ளது.

''எதிர் வரும் 10 ஆண்டுகளுக்குள், தமிழகத்தில் உள்ள 37,500 கைத்தறி நெசவாளர்களுக்கு, 75,000 விசைத்தறிகள் வழங்கும் திட்டத்தை, சமீபத்தில் அறிமுகப் படுத்தியுள்ளோம்.''


தனியார் துறையில் இயங்கும் நூற்பு ஆலைகள், இந்த ஆணையினை எதிர்த்து வழக்குத் தொடர்ந்து, நீதிமன்றத்தின் தடை ஆணைகள் பெற்ற நிலையில், குறிப்பிட்ட அளவு சிட்ட நூல் உற்பத்தி செய்யாமல் இந்த நூற்பு ஆலைகள் இருந்து வருகின்றன. தமிழக அரசின் கட்டுப் பாட்டில் இயங்கும், அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளும், இந்த ஆணையை மதித்து, ஏற்றுக்கொண்டதோடு மட்டுமன்றி, தேவையின் அடிப்படையில், 50 சதவிகிதத்திற்கும் மேல் சிட்ட நூல் உற்பத்தி செய்து, குறைந்த விலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, உதவி வருகிறது. ஆனால், மத்திய அரசின் பொது நிறுவனமான, National Textile Corporation - இன் ஆளுகைக்கு உட்பட்ட நூற்பு ஆலைகள், குறிப்பிட்ட இந்த 50 சதவிகிதம் சிட்ட நூல் உற்பத்தி செய்வதில்லை, என்று தெரிய வருகிறது.

''ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர்களுக்கு ஒளிமயமான எதிர் காலத்தை உருவாக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத் துடன்தான், அரசு செயலாற்றி வருகிறது.''

எனவே, National Textile Corporation- இன் நூற்பு ஆலைகளும், 50 சதவிகிதம் சிட்ட நூல் உற்பத்தி செய்து கொடுத்தால், நமது கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையை, இன்னும் சற்று திருப்திகரமாகப் பூர்த்தி செய்ய வாய்ப்பு ஏற்படும், என்பதை இத்தருணத்தில் தெரிவித்து, இது தொடர்பாக மாண்பு மிகு மத்திய அமைச்சர் அவர்கள், National Textile Corporation ஆலைகளுக்கு, தக்க அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் வாழும் அனைத்து ஏழை, எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும், என்ற உறுதியான எண்ணத்துடன்தான், எங்கள் அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நான் முதல், செயலாற்றி வருகிறது. அந்த முயற்சிக்கு, நெசவாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கி, உங்கள் அரசாகிய இந்த மக்கள் அரசிற்கு, உறுதுணையாக நீங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தொடங்கும் இந்த மாநாடு, வெற்றி அடைய வேண்டும், உண்மையான கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாத்து, உயர்த்தும் பல நல்ல புதிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்று வாழ்த்தி, உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற இந்த நல்வாய்ப்பினை அளித்த, விழாக் குழுவினருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள் கிறேன். ●






# ‘நீங்க நல்லா இருக்கணும்’

## - தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத் தொடக்க விழா.

### மாண்புமிகு முதல்வர் உரை

**த**மிழக அரசின் ‘நீங்க நல்லா இருக்கணும்’ என்ற இந்த முழு நீள மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத்தின் தொடக்க - விழாவில் கலந்து கொண்டு, திரை உலகத்தைச் சார்ந்த என் இனிய சகோதரர்களையும், சகோதரிகளையும் இங்குச் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னுடைய இந்த உயர்ந்த நிலைக்கு அடித் தளம் அமைத்துத் தந்த எனது ஆசான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கிவிட்டுத் தான், நான் இந்தக் குத்து விளக்கை ஏற்றி வைத்தேன். இன்றும் தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்று, மக்கள் ஆட்சிக்கு மகுடம் சூட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கிவிட்டுத்தொடங்கப்படும்எந்த ஒரு முயற்சியும், வெற்றி அடையும் என்பதை நான் நன்கு அறிவேன்.

இன்றைய தினம் இந்த இனிய விழாவில் கலந்துகொள்ள நான் இங்கு வரும்பொழுது, எனது எண்ண அலைகள் கட்டவிழ்ந்து ஓடின, நான் இங்குத் திரைப்பட நடிகையாகப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வந்த நேரத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், சம்பவங்கள் அனைத்தும், பசுமையாகவும் இனிமையாகவும் என் கண் முன் தோன்றின. நான் இந்த இடத்திற்கு இப்பொழுது தமிழக முதலமைச்சராக வந்திருப்பதை எண்ணிப் பார்க்கிறேன். என்னை இந்த நிலைக்கு உயர்த்திய தமிழக மக்களை நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

மக்கள் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள உங்கள் சகோதரி, மக்களுக்கு உதவும் ஒரு புதிய திட்டத்துடன் உங்களை நாடி வந்துள்ளேன். அந்தப் பொது நலத் திட்டம், புத்துணர்ச்சியுடன் செயல்படுத்தப்பட்டு, மக்களிடையே விழிப்புணர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

மதுவின் மாயையில் மயங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி, தடுத்தாட்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், திரைப்படம்

தமிழக அரசின் 'மதுவிலக்குப் பிரச்சார'த் திரைப்படத்தின் தொடக்க விழா 29.4.92 அன்று, சென்னை பிரசாத் ஸ்டூடியோவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்துவிளக்கேற்றித் திரைப்படத்தினைத் தொடங்கிவைத்தார்.

இந்தப் படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள திரு. ஜி. வெங்கடேஸ்வரன் (ஜி.வி.) வரவேற்புரையாற்றினார். அவர் பேசுகையில், 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படம் வியாபார ரீதியில் எடுக்கப்படும். இந்தப்படம் தயாரிக்கப்பட்டு அக்டோபர் 2-ஆம் தேதி வெளியிடப்படும். முன்னணி நடிக நடிகையர்கள் நடிப்பார்கள். இப்படம் பல விருதுகளைப் பெறும் வகையில் எடுக்கப்படும். முதல்வர் அவர்களுக்குத் திரை உலகம் பாராட்டுவிழா நடத்தக் கருதி வருகிறது. கிருஷ்ண ஜெயந்தி, காந்தி ஜெயந்தி கொண்டாடுவதுபோல், நாங்கள் ஜெய ஜெயந்தி நடத்துவதற்கு முதல்வர் அவர்கள் தேதியைத் தரவேண்டும். நாங்கள் தயாரிக்கப்போகும் 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படத்தில் சூப்பர் ஸ்டார் முதலமைச்சர் அவர்கள், முதல்வராக நான்கு காட்சிகளில் நடிக்கின்றார்கள்' என்று கூறினார்.

வரவேற்புரைக்குப்பின், முதல்வர் அவர்களுக்கு திரு. ஜி.வி. பொன்னாடை போர்த்தினார்.

முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றித் திரைப்படத்தினைத் தொடங்கி வைத்தார்.

இப்படத்தின் இயக்குநர் திரு விசு தன்னுடைய விளக்கவுரையில், 'இப்படத்திற்கான கதை வசனத்தை மிகச் சிரமப்பட்டு எழுதியிருக்கிறேன். நான் முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், 'இது படமாக இருக்காது, பாடமாக இருக்கும்,' என்றார்.

தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

வாழ்த்துரைக்குப்பின் திரு. ஜி.வி. வழங்கிய நினைவுப்பரிசான வெள்ளித் தட்டைப் பெற்றுக்கொண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார். அவர்கள் பேசுகையில், இந்தத் திரைப்படம் படமாகவும் இருக்க வேண்டும், பாடமாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, எனக்குப் பாராட்டு அளிக்கத் திரு ஜி.வி. தேதியொன்று தரவேண்டும் என்றார். வரும் ஜூன் 24-ஆம் தேதியோடு நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு ஆகிறது. ஜூன் 25-ஆம் தேதி உங்கள் பாராட்டை ஏற்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு: ஆர். இராஜசேகரன்.

ஒன்றைத் தயாரித்து வெளியிட, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மக்கள் தங்களின் எண்ணங் களையும், கருத்துக்களையும் வகுத்துக்கொள்வதில், தற்போதுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்கு ஆற்றுகின்றன. குறிப்பாக, திரைப் படங்கள் மக்களின் மனதில் நல்ல கொள்கை களையும், கோட்பாடுகளையும் உருவாக்கவும், தவறுகள் இவை என்று சுட்டிக்காட்டி, அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற போதனைகளையும், சிறப்பாகவே செய்து வருகின்றன.

அந்த வகையில் திரைப்படங்கள் ஒரு வலிமை மிக்க சாதனம் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை. எனவேதான் எங்கள் அரசின் கொள்கையான பூரண மதுவிலக்கைப் படிப்படி யாகத் தமிழகத்தில் அறிமுகம் செய்ய, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அவர்கள் விரும்பிப் பார்க்கக்கூடிய திரைப்படத் துறையினையும், எங்கள் முயற்சிக்குப் பயன்படுத்துவது என்று முடிவு செய்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், மலிவு விலை சாராயத்தை முழுமை யாக ஒழித்ததை இந்த நாடே நன்கு அறியும். எதிர்வரும் காலத்தில், தமிழகத்தில் பூரண மது விலக்கு என்ற நிலையை அடைய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

சட்டங்களின் மூலம், அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மதுவிலக்குக் கொள்கைகளை எவ்வளவு தீவிரமாகச் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இருப்பினும் குடிப்பழக்கம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் மனநிலையைப் பொறுத்துத்தான் அமைவது. அதனைச் சட்டங் களினால் மட்டுமே தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை, நாங்கள் நன்கு அறிவோம். உண்மை யில் ஒருவர் குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்றால், அதற்கு மனமாற்றம் அவசியம். அந்த மனமாற்றம் ஏற்படுவதைத் தூண்டும் வகையில் அவர்களுக்கு உதவினால், நிச்சயமாக, தாங்கள் கொண்டுள்ள தீய பழக்கத்தின் கொடுமைகளை உணர்ந்து, அவர்கள் அதனை நிரந்தரமாகக் கைவிட வாய்ப்புகள் ஏற்படும்.

இதுபோன்ற பொது நலக் கருத்து ஒன்றினை மக்களுக்கு எடுத்துரைக்கும்பொழுது, எவ்விதக் கட்டாயமும் இன்றி, அவர்கள் தாங்களாகவே விரும்பி வந்து, தங்களை அந்த முயற்சியில் ஈடுபடுத்திக் கொண்டால் தான், எடுத்துக் கூறும் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நீங்காது ஆழமாகப் பதியும். மேலும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் வெற்றி அடையும். எனவேதான், அதிக அளவில் மதுவிற்கு அடிமையாக உள்ள வர்கள், அத்தகைய மனமாற்றம் பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், தமிழக அரசு இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்க முன் வந்துள்ளது.

இந்தத் திரைப்படம் தமிழக அரசின் மது விலக்குத் துறைக்காக, செய்தி-சுற்றுலாத் துறை

யின் மூலமாகத் தயாரிக்கப்படும் படம் ஆகும். அரசுக்காகத் திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு மாநில மதுவிலக்கு உயர்மட்டக் குழுவின் உறுப்பினரும், பிரபல திரைப்படத் தயாரிப்பாளருமான திரு ஜி. வெங்கடேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத் திரைப்படத்தை இயக்கும் பொறுப்பு திரு விசு அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திரைப்படத்திற்கு இசை அமைக்கும் பொறுப்பு பிரபல இசையமைப்பாளர் திரு இளையராஜா அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இத் திரைப் படத்தின் மூலக் கரு, மதுவிலக்குப் பிரச்சாரமாக அமையுமே அன்றி, இது அரசின் வழக்கமான Documentary படமாக இருக்காது.

இன்று தொடங்கப்படும் அரசின் 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படம், மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். ஏனென்றால், இந்தத் திரைப்படத்தை Documentary படமாகத் தயாரிக்காமல், இதனை இதர வியாபார ரீதியான தமிழ்த் திரைப்படங்களைப் போலவே உருவாக்க முடிவு செய்துள்ளோம். இது தமிழக அரசின் ஒரு வழக்கமான செய்திப் படம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தனியார் தயாரிப்பாளர்கள் எவ்வாறு திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடுகின்றார்களோ, அதே அடிப்படையில் இந்தப் படத்தையும் அரசு தயாரித்து வெளியிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோலவே நாடகம் ஒன்றையும் அரசு தயாரித்துள்ளது. இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளர் 'நாடகக் காவலர்' திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களின் நாடகங்களைப் பற்றி, உங்களுக்கு நன்றாகவே தெரியும். அவை மக்களால் பெரிதும் வரவேற்கப்படுபவை; விரும்பிப் பார்க்கப்படுபவை. தமிழகத்தில் இன்று அவருடைய நாடகங்கள்தான் பிரமாண்டமானவை மட்டுமல்ல, பிரசித்தி பெற்றவையும் கூட. எனவே, திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் நாடகம் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

தமிழக அரசிற்காக 2 இலட்சம் ரூபாய் செலவில் அவர் தயாரித்துள்ள 'வெளிச்சம்' என்ற மதுவிலக்குப் பிரச்சார நாடகம், வருகின்ற 1.5.1992 அன்று மாலை, மியூசிக் அகாடமி அரங்கத்தில் அரங்கேறுகிறது. இந்த நாடகம் மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் மட்டுமல்லாமல், பல சிற்றூர்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரவேற்புரை ஆற்றிய திரு ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள், என்னைச் சந்தித்தபொழுது நிகழ்ந்த உரையாடலை, இங்கே குறிப்பிட்டுப் பேசினார். அதை மேலும் நான் இங்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அரசின் திரைப்படம் என்பதற்காக நடிக-நடிகையருக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் கொடுக்க வேண்டிய தொகையை ஒருபோதும்



**• மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால் தன்னம்பிக்கை உடையவனாகவும் தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.**

குறைக்கக்கூடாது என்று, திரு ஜி.வி. அவர்களிடம் நான் கண்டிப்பாகத் தெரிவித்தேன். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, வழக்கமாக வியாபார ரீதியில் எடுக்கப்படும் படம் போலவே இந்த அரசின் படத்தையும் எடுத்து, இதர தனியார் தயாரிப்பாளர்களுடன் போட்டியிட்டு, இதனை வெளியிட்டு, வெற்றி கண்டால் தான், இது ஒரு நல்ல திரைப்படம் என்று மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, விரும்பி வந்து இதனைப் பார்ப்பார்கள்;

நாம் இந்தத் திரைப்படத்தில் கூறவுள்ள கருத்துக்களைக் கவனித்துக் கேட்டு உணர்வார்கள், பயன்பெறுவார்கள். ஒரு திரைப்படத்தின் வெற்றியே, அதனைப் பெருந்திரளாக மக்கள் வந்து காண்பதில் தான் உள்ளது. எனவே, இந்த அரசின் திரைப்படத்தையும், மக்கள் திரளாக வந்து காண வேண்டும், பயன்பெற வேண்டும் என்றால், அவர்கள் எதிர்பார்க்கும் வகையில், அதனை ஜனரஞ்சகமான முறையில் தயாரிக்க வேண்டும் என்பதனால் தான், தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக, அரசே வியாபார ரீதியில் ஒரு முழு நீளத் திரைப்படத்தை 85 இலட்சம் ரூபாய் செலவில் தயாரிக்க முன் வந்துள்ளது. வியாபார ரீதியில் தயாரிக்கப்படும் இந்தப் படத்திற்கு, எந்தவிதச் சிறப்புச் சலுகைகளையும் எவரிடமிருந்தும் எதிர்பார்ப்பது முறையல்ல.

இரண்டாவது, தமிழகத் திரை உலகில் உள்ள கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள், தங்களின் உழைப்பிற்குப் பெறும் ஊதியத்தை அரசிற்காகக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல. ஏதோ இலவசமாக அல்லது குறைந்த ஊதியத்திற்குத் தானே இந்தத் திரைப்படத்தில் நடிக்கின்றோம், அல்லது பணி ஆற்றுகின்றோம் என்ற எண்ணம், எவர் மனதிலும் ஏற்படக் கூடாது. அவ்வாறு ஏற்பட்டால், அது திரைப்படத்தின் தரத்தைக் குறைத்துவிடும் என்பதை, நான் நன்கு அறிந்திருப்பதால் தான், இதில் பங்கு பெறும் கலைஞர்கள் அனைவரும் மனநிறைவோடு பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஒவ்வொருவருக்கும் தற்போது திரை உலகில் கிடைக்கும் ஊதியத்தை, இந்தத்

திரைப்படத்திற்கும் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்

இன்றைய தமிழ்த் திரைப்பட உலகில் முன்னணித் தயாரிப்பாளராகத் திகழும் திரு ஜி.வி. அவர்களும், முன்னணி இயக்குநர் திரு விசு அவர்களும், முன்னணி இசையமைப்பாளரான திரு இளையராஜா அவர்களும் இணைந்து, ஒரு தலைசிறந்த வெற்றிப் படத்தைத் தயாரித்து, நிச்சயமாக அரசிற்குத் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்தத் திரைப்படத் தயாரிப்பைப் பற்றிச் சில குடும்பத் தலைவிகளிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் 'படத்தை யார் direct செய்யப் போகிறார்கள்' என்று கேட்டார்கள். 'திரு விசு தான்' என்று சொன்னேன். உடனே அவர்கள் 'விசுவா! அப்படியானால் படம் நிச்சயமாக நன்றாக இருக்கும்' என்றார்கள்.

எனவே, இந்தப் படம் சிறப்பாக அமையும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை.

இந்தத் திரைப்படத்தை விரைவில் எடுத்து முடித்து, வருகின்ற அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசின் முதல் முயற்சியான இந்தத் திரைப்படம் தயாரிக்கும் திட்டத்தை, நமது நாட்டில், மது விலக்குக் கொள்கைக்கு முதல் வித்திட்ட அண்ணல் காந்தி அவர்களுக்கு அர்ப்பணிக்கும் வகையில், அவரது பிறந்த நாள் அன்றே, 2.10.1992 அன்றே, வெளியிடப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் ஒரு முழு வெற்றிப் படமாக அமைய வேண்டும். தமிழக மக்கள் பெரிதும் விரும்பிப் பார்த்துப் பயனடையும் வண்ணம் அது அமைய வேண்டும் என்ற என் எண்ணத்தைத் தெரிவித்து, இந்த என் நல்லெண்ணம் ஈடேற, இதில் பங்குகொள்ளும் அனைத்துத் திரை உலகச் சகோதரர்களும், சகோதரிகளும், ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

# குங்குமப்பூ

**ப**ழங்காலம் தொட்டே பயன்படுத்தப்பட்டு வந்துள்ள வாசனைப் பொருட்களுள் குங்குமப்பூவும் ஒன்றாகும்.

கிறித்துவ பாரம்பரியத்தில் வரும் சாலமன், தனது பாடல் ஒன்றில் இனிய மணமிக்க தாவரங்களுள் ஒன்றாக குங்குமப் பூவையும் குறிப்பிடுகிறார். கிரேக்கத்திலும், ரோமானியப் பேரரசிலும் குங்குமப்பூ வாசனைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரோமில், வரவேற்பு அறைகள், நீதிமன்றங்கள், கேளிக்கை அரங்கங்கள், குளியல் அறைகளில்கூட குங்குமப்பூ வாசனையூட்டும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரோம் மன்னன் நீரோ, நகருக்குள் நுழையும்போது அவன் நடந்துவந்த பாதையெங்கும் குங்குமப்பூ தூவி வரவேற்பளிக்கப்பட்டதாம்!

கிரேக்கர்கள் காலத்தில் குங்குமப்பூ நிறமானது அரசு பரம்பரையினரைக் குறிக்கும் வண்ணமாகக் கருதப்பட்டதாம். ரோமப் பேரரசிலும் கூட குங்குமப்பூ நிற மூட்டும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பின்னர் குங்குமப்பூ, சமையலறையிலும் ஆட்சி செலுத்தத் தொடங்கி விட்டது. இதன் இனிய மணத்திற்காக உணவுப் பொருட்கள் பலவற்றில் பயன்படுத்தும் வழக்கம் அப்போதே தொடங்கி விட்டதாம்!

உலகம் முழுவதையும் தன் ஆளுகைக்குள் கொண்டுவரத் துடித்துப் போரிட்டு வந்த அலெக்ஸாண்டர், காஷ்மீர் பள்ளத்தாக்கைப் பார்த்ததும், தனது தாயகம் திரும்பும் எண்ணத்தையே மறந்து விட்டாராம். காரணம்? அங்கு பூத்துக் குலுங்கும் குங்குமப்பூக்கள் தான்! அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்ட குங்குமப் பூக்களைப்பிரியமனமின்றி அவர் பிரிந்து சென்ற நிகழ்ச்சி இன்றளவும் சரித்திரம் கூறிவரும் உண்மை!

பழங்கால இந்தியர்கள், குங்குமப் பூவின் சூலகத் தண்டிலிருந்து மஞ்சள் நிறச் சாயம் எடுத்து அவற்றை ஆடைகளில் கறையேற்றி உடுத்தி வந்தார்களாம். கிரேக்கத்திலும், அயர்லாந்திலும் உள்ள உயர் குடும்பத்தினர் இதே போன்ற செயல்பாட்டினைச் செய்து வந்திருக்கிறார்கள்.

புத்தபிரானின் காலத்திற்குப் பின்னர் அவருடைய கொள்கைகளை விளக்க குங்குமப்பூ வண்ணம் பயன்படுத்தப் பட்டது. இதன் அடிப்படையிலேயே புத்தத் துறவிகள் தற்போதும் குங்குமப்பூ வண்ண ஆடை அணிந்து வருகிறார்கள்.

குங்குமப்பூ பல்வேறு மொழிகளில் குரோகஸ், கார்காஸ், கேசார், கார்குமா, சாபர், சாபரான் என்றெல்லாம் அழைக்கப்பட்டு வருகிறது. சிசிலியா நாடே, குங்குமப்பூவின் தாயகமாகக் கருதப்படுகிறது. லெவான், கோரிகஸ் ஆகிய சிசிலியா நாட்டின் பகுதிகளில் மிக ஆரம்ப காலத்தில் குங்குமப்பூ வளர்ந்ததற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் பெர்சியா, ஆசியாமைனர் போன்ற இடங்களிலும், குங்குமப்பூ மிகுதியான அளவில் விளைந்திருக்கின்றன.

பத்தாம் நூற்றாண்டில் தர்பரா, இஸ்பேஹான் பகுதிகளில் குங்குமப்பூ மகசூல் நடைபெற்றிருக்கிறது. அதன் பின்னர் கி.பி. 961-ஆம் ஆண்டு, அரேபியா, ஸ்பெயின் போன்ற நாடுகளில் குங்குமப்பூ விளைச்சல் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கிழக்கிலிருந்து மேற்காக குங்குமப்பூ பயிரிடும் வழக்கம் பரவியிருக்கிறது. இங்கிலாந்தில் தற்போது வழங்கப்படும் 'சாபரான் வால்டன்' எனும் இடம், இங்கு குங்குமப்பூ அதிக அளவில் விளைந்ததாலேயே இப்பெயர் பெற்றுள்ளது.

இன்று, ஸ்பெயின், பிரான்ஸ், சிசிலி, இத்தாலி, ஈரான் ஆகிய நாடுகள் குங்குமப்பூவை அதிக அளவில் விளைவிக்கின்றன. இந்தியாவில் காஷ்மீரில் மட்டுமே-அங்கேயும் பாம்பூர், கிஷ்ட்வார் பகுதிகளில் மட்டுமே குங்குமப்பூ விளைவிக்கப்படுகிறது. பாலஸ்தீன், பெர்சியா ஆகிய நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் மூலம், குங்குமப்பூ காஷ்மீர் பகுதிகளில் பயிரிடப்பட்டிருக்கிறது.

ஒரு கிலோ குங்குமப் பூவைத் தயாரிக்க 1,66,000 மலர்ந்த பூக்கள் (அதாவது சூல்முடிகள்) பயன்படுத்தப்படுவதாகக் கணக்கெடுத்துள்ளனர். மேலும் 5,000 கிலோ உலராத சூல் முடியிலிருந்து 1,000 கிலோ மட்டுமே உலர்ந்த சூல்முடி கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களுக்கு நிற மூட்டவும் இப்பூ பயன்படுகிறது. இப்பூவின் ஒரு பங்கினையும் ஒரு இலட்சம் பங்கு நீரையும் கலந்தால் தனித்துவமான மஞ்சள் நிறம் கிடைக்கும். அரிசி மற்றும் மீன்வகை உணவுப் பொருட்களை நிறமூட்ட குங்குமப்பூ பயன்படுத்தப்படுகிறது. ஆடைகளுக்கு மஞ்சள் நிறமூட்டவும், குங்குமப் பூவைப் பயன்படுத்தலாம். ஆனால் ஏனைய சாயங்கள் மலிவான விலைக்குக் கிடைப்பதால் குங்குமப்பூ இதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை.

—நன்றி: திட்டம்

# 8-வது ஐந்தாண்டுத் திட்டம்

## தமிழகத்துக்கு ரூ. 10,200 கோடி ஒதுக்கீடு

தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து மத்தியத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜியுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18.4.92 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில் விரிவான விவாதம் நடத்தினார். முதலமைச்சருக்குத் துணையாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், தலைமைச் செயலாளர் திரு. டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப. திட்டம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்-செயலாளர் ஆகியோர் இருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அனைத்து விஷயங்களும் விவாதிக்கப்பட்டன. தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ள விசேஷப் பிரச்சினைகளை எடுத்துக்கூறி, மாநிலத்தின் திட்டமிட்ட வளர்ச்சியை வேகப்படுத்தத் தேவையான அதிக அளவு நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். விவசாயம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கான வளர்ச்சிக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார். அதிக உற்பத்தித் திறன் மூலமாக உயர்ந்த வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் சிறந்த நீர் நிர்வாகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

விரைவான தொழில் வளர்ச்சிக்கு மாநிலத்தின் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக இடம் வழங்கப்படும். இதை அடைய அடிப்படை வசதிகளில் குறிப்பாக மின்சாரத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். இப்போது நடைபெறும் மின் திட்டங்கள் தவிர, 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த லிக்னைட் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தி திட்டத்தைத் தொடங்க தமிழக அரசு கொண்டுள்ள ஆர்வத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார்.

புதிய மின் திட்டங்களுக்கு தேவையான மத்திய முதலீட்டை, குறிப்பாக நெய்வேலி முதல் சுரங்க விரிவாக்கம், 3-வது சுரங்கம் வெட்டுதல் மற்றும் கூடாங்குளம் அணுமின்சார நிலையத்தின் தேவையைப் பற்றியும் முதல்வர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

மனிதவள மேம்பாட்டுக்குக் குறிப்பாக கல்வி, மக்கள் நல்வாழ்வு, ஏழைகளுக்கான முழுப்பாதுகாப்பு ஆகியவற்றுக்கு 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். கிருஷ்ணா குடிநீர்த்திட்டத்தைக் குறிப்பிட்டு சென்னைக்குக் குடிநீர் விநியோகம் செய்யும் அது தொடர்பான திட்டங்களுக்கு மத்திய உதவி வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயம், தொழில், மனிதவள மேம்பாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ள விசேஷ ஊக்கத்தை மத்தியத் திட்டக் குழுவின் துணைத்தலைவர் பாராட்டினார். தமிழ்நாட்டின் நிதிநிலையைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்ற அவர், நிதி நிலையைப் புதுப்பிக்க அடைந்த வெற்றிக்காகவும், 1991-'92-ஆம் ஆண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்காகவும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாட்டை, பாராட்டினார்.

தமிழகம் மிகப்பெரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், போதுமான மத்திய உதவி மற்றும் கடன் பெறுவதில் பங்கு ஆகியவற்றின் மூலமாகத்தான் திருப்திகரமான 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். தமிழ்நாட்டின் விசேஷப் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, கூடுதலாக மத்திய உதவித் தேவையை முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

**ரூ.10,200 கோடி ஒதுக்கீடு:**

அலுவலர்கள் மட்டத்தில் பேசியதையும், முதல்வர் அவர்கள் விடுத்த சிறப்பு கோரிக்கையையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடாக ரூ.10,200 கோடி என்று நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இது 7-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.5,750 கோடியைவிட 77 சதவிகிதம் அதிகமாகும்.




# செய்யும் தொழில் அனைத்திலும் நெய்யும் தொழில் நிகரற்றது!

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை**

மிகுந்த எழுச்சியோடும், சிறப்போடும் கொண்டாடப்படும், 38-வது கைத்தறி விழாவைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினைப் பெற்றமைக்காக, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு முன்பு ஒரு முறை, சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன், 1982- இல், நான் இதே விழாவில் உரையாற்றியதைப் பெருமிதத்தோடு நினைவுகூர்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் 28-வது கைத்தறிக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தபோது நானும் அந்த விழாவில் கலந்து கொண்டேன். அப்போது நான் அரசியலுக்கு வரவில்லை. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினராகவும் இல்லை. பொது வாழ்விலும் ஈடுபடவில்லை. அப்படி இருந்த என்னைத் திடீரெனப் புரட்சித் தலைவர் கைத்தறி விழாவில் பேசுமாறு உத்தரவிட்டார். நானும் பேசினேன். எதற்காக அவர் என்னைப் பேசச் சொன்னார் என்று பின்னர்தான் தெரிய வந்தது. என்னை அரசியலுக்குக் கொண்டு வரத் திட்டமிட்டிருக்கிறார் என்று.

திரைப்பட விழாக்கள் சிலவற்றில் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் பேசியிருக்கிறேன். பொதுகூட்ட மேடையில் பேசியது கிடையாது. முதன் முதலில் கைத்தறி விழா மேடையில்தான் பெரிய உரை ஆற்றினேன். இதைப் புரட்சித் தலைவர் எனக்குத் தெரியாமல் 'டேப் ரிக்கார்டரில் பதிவு செய்து தனியாகப் போட்டுக் கேட்டிருக்கிறார். அதன்பிறகுதான் என்னைக் கட்சியில் சேர்த்தார் என்று எனக்குப் பின்பு தெரியவந்தது. அன்று ஆலோசனை வழங்குகிற நிலையில் இருந்த என்னை, இன்று தமிழகத்தின் அரசாங்கத்தைத் தலைமையேற்று நடத்துகிற அளவிற்கு, உயர்த்திய தமிழகப் பெருங்குடி மக்களுக்கு, என் நன்றியறிதலையும் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு, நெசவுத் தொழில் சிறப்புற்று, செழித்தோங்கி வளர்வது நம் தமிழ்நாட்டில்தான், என்கிற உண்மை வெளிப்படும்போது, மக்கள் மானம் காப்பதில், தமிழகம் முன்னணியில் நிற்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது, எனக்குத் தனித்த பெருமிதம் ஏற்படுகிறது. நம்முடைய பெருமிதமும், பெருமையும் நிலையானதாகும், நியாயமானதும் ஆகும். செய்யுந் தொழில்கள் அனைத்திலும், நெய்யுத் தொழில் நிகரற்றது என்பதால், அப்பணியில் ஈடுபட்டுள்ள நெசவாளர் உடன்பிறப்புகளை நாம் அதிகமாகப் பெற்றிருப்பது, நமக்கு இரட்டிப்புப் பெருமையாகும். இப்பெருமை, மேலும் காக்கப்பட வேண்டுமானால், நவீன காலத்திற்கேற்ப சில அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கைத்தறித் தொழில் பழமை மிக்கதாக இருக்கலாம். ஆனால், புது யுகத்தின் தேவைகளையும், வளர்ந்து வரும் மக்களின் விருப்பத்தையும், இந்தத் தொழில் நிறைவு செய்கின்ற வகையில், தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும், உயர்த்திக்கொள்ள வேண்டும். கைத்தறித் தொழிலுக்கு அந்தச் சக்தி அதிகமாகவே உண்டு என்பதை நாம் அறிவோம்.

காலங்காலமாக எத்தனையோ தொழில்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஆனால் கைத்தறித் தொழில் மட்டுமே, கால வேகத்திற்கும், மாற்றத்திற்கும் ஈடு கொடுத்து, இன்றும் மக்கள் மத்தியில், தனக்கென ஒரு நிலையான இடத்தைப்பெற்றுத்திகழ்கின்றது என்றால், அதற்கு இத்தொழில் எந்திர கதியில் இயங்காமல், மனித உயிர்த் துடிப்போடு இயங்குவது தான் காரணம். எனவே, இத்தொழில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

தமிழ்நாட்டில், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கு

வதில், வேளாண்மைக்கு அடுத்தபடியாக, கைத்தறித் தொழில் தான் மிகச் சிறப்பான பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலுள்ள சுமார் 4.27 இலட்சம் கைத்தறிகளில், இன்றைய புள்ளி விவரப்படி, சுமார் 3.27 இலட்சம் கைத்தறிகள், கூட்டுறவின் கீழ் கொண்டு வரப்பட்டு, கூடித் தொழில் செய்வதன் மேன்மையை, உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றன. இந்தத் தறிகள் அனைத்தும், தமிழகத்திலுள்ள சுமார் 1,473 கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, சிறப்பாகச் செயல்படுகின்றன. இதனை எண்ணும்பொழுது, கூடித் தொழில் செய்யும் கூட்டுறவுத் தத்துவத்தின் மகத்தான மேன்மையை, நாம் உணர முடிகிறது.

தனித் தனியாகச் சிதறிக் கிடந்த நெசவாளர்களை, கூட்டுறவின் கீழ் கொண்டு வந்து செயல்பட வைக்கின்ற பணியினை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கோ-ஆப்டெக்ஸ் ஏற்று, நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது என்பது, பாராட்டுதலுக்குரியது ஆகும். நெசவாளர்களுக்குத் தேவையான மூலப் பொருளைத் தங்கு தடையின்றி வழங்கி, அவர்களது உற்பத்திப் பொருள்களை உடனுக்குடன் கொள் முதல் செய்து, நாடெங்கும் அமைந்துள்ள தனது 457 விற்பனைக் கூடங்களின் மூலம், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை செய்து உதவி வருகிறது.

நெசவாளர்களின் நலனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வரும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கடந்த 37 ஆண்டுகளாக இந்தக் கைத்தறி விழாவினை, சிறப்புடன் கொண்டாடி வருகிறது. இக்கைத்தறி விழாவிற்குப் பொதுமக்கள் எத்தகைய ஆதரவை அளித்து வந்துள்ளார்கள் என்பதை, ஆண்டுக்காண்டு உயர்ந்து வரும் விற்பனையின் மூலமே, நாம் அறிந்து கொள்ளலாம்.

'நூல் என்றாலே சிக்கல் இருக்கும்' என்றார், காலமெல்லாம் கைத்தறியாளரையும், கைத்தறியையும் போற்றிக் காத்த பேரறிஞர் அண்ணா அவர்கள். நெசவாளர் வாழ்விலே என்றும் சிக்கல் இல்லாமல், சிரமம் இல்லாமல், சங்கடம் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற சீரிய அடிப்படையில் தான், அவர் வழிவந்த நாங்கள், இன்று அரிய பல திட்டங்களை அவர்களுக்காகத் தீட்டி, செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழகத்திலுள்ள 37,500 கைத்தறிகளை, 75,000 விசைத்தறிகளாக மாற்றும் ஒரு நவீன திட்டத்தினைத் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன், எதிர் வரும் 10 ஆண்டுகளில் செயல்படுத்த உள்ளோம். மேலும், வரும் ஐந்தாண்டுகளில், 42.31கோடி ரூபாய் செலவில், 50,000 கைத்தறிகளை, தற்காலத் தேவைக்கேற்றவாறு, துணி வகைகளை உற்பத்தி செய்யும் வண்ணம், நவீனப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.



வாழ்நாள் முழுவதும் வறுமையில் வாடும் நெசவாளர் இறப்பின், அவரது குடும்பம் ஆதரவின்றி அல்லல்படும் நிலையைப் போக்க, தாயுள்ளம் கொண்ட எங்கள் அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக நெசவாளர் ஒருவர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு, 10 ஆண்டுகளுக்கு, மாதந்தோறும் 250 ரூபாய் நிதி உதவி, ஓய்வூதியமாக வழங்கும் ஒரு புரட்சிகரமான பாதுகாப்புத் திட்டத்தினை, அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும் இறந்து

விட்ட நெசவாளரின் குடும்பத்திற்கு, இதுவரை வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகையான, 12,000 ரூபாயை உயர்த்தி, 17,000 ரூபாயாக வழங்க ஆணையிட்டுள்ளோம்.

வாழ்வதற்கும், தொழில் செய்வதற்கும், போதிய இடவசதியற்ற வீடுகளில் வாழும் நெசவாளர்கள் பயன் பெறுகின்ற வகையில், அவர்களுக்கு இவ்வாண்டு தறிக் கூடத்துடன் கூடிய 2,000 வீடுகள், ஒவ்வொன்றும் 25,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டித்தர ஆணையிட்டுள்ளோம். இவைகளுக்கெல்லாம் மேலாக, பெண்களின் முன்னேற்றத்தில் பெரிதும் கவனம் செலுத்தும் எங்கள் அரசு, பலநூறு பெண்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில், முற்றிலும் பெண்களுக்கெனவே, தனியாக ஒரு கூட்டுறவு நூற்பாலையினை, இவ்வாண்டில், பருகூரில் நிறுவ முடிவு செய்து உள்ளது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள, 'விளாகம்' என்னும் கிராமத்தை அரசு தேர்ந்தெடுத்து, அக்கிராமத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் ஒரு முன்னோடித் திட்டத்தை, இந்த ஆண்டு அறிமுகப் படுத்தி உள்ளோம். இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் தான் முதன் முறையாக, 25 இலட்சம் ரூபாய் செலவிலான இத்திட்டம், செயல்படுத்தப் படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், தமிழகம் முழுவதுமுள்ள ஏழை நெசவாளர்கள், ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை வாய்ப்பு பெறும் வகையிலான திட்டத்தையும், அதே நேரத்தில் ஏழ்மையில் உழலும் மக்களுக்கு, புத்தாடை வழங்குகிற புனிதத் திட்டத்தையும், ஒருங்கிணைந்து நிறைவேற்றும் முகத்தான், 42 கோடி ரூபாய் செலவில், ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, இலவச சேலை - வேட்டி வழங்கும் திட்டத்தை, சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தி செயல் படுத்தினோம். இத்திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல் படுத்துவோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் இந்த ஆண்டு, முழுமையாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

இப்படி ஏழை எளிய மக்கள் எந்தப் பிரிவினராக இருந்தாலும், அவர்களது வாழ்வுக்கு ஊன்றுகோலாக, அவர்களது பளுவைச் சுமக்கிற சுமைதாங்கியாகத்தான், எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து அவ்வாறே செயல்படுவோம். நம் மாநிலத்தில் வாழும் கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பேணிக் காப்பதில், அவர்களுக்கு உதவுவதில், நாங்கள் எப்போதும் பின்வாங்கமாட்டோம் என்பதை, இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

'பட்டினில் ஆடையும்
பஞ்சில் உடையும் பண்ணி
மலைகளென வீதி குவிப்போம்'

- என்றார் மகாகவி பாரதியார்.

'ஆடையிற் சிறந்தது கைத்தறி ஆடை
- மக்கள்
அனைவர்க்கும் நல்லது அந்தத்
தேனோடை
ஓடையில் தேனை அள்ளி உண்ண
வாரீர் - அள்ளி
உண்டு கைத்தறிக்கு உதவி பண்ண
வாரீர்.

என்று புகழ்ந்து பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

புதுமைக் கவியும், புரட்சிக் கவியும், பாடி மகிழ்ந்து போற்றிய இந்நெய்யுந் தொழிலை நம்பி, தங்கள் வாழ்க்கையைத் தொடரும் நெசவாளர்களின் வாழ்வில், ஒளி விளக்கை ஏற்றி வைக்க, ஒரு போதும் எங்கள் அரசு தயங்காது. தமிழக நெசவாளர்களின் வாழ்வு வளம் பெற, அனைத்து உதவிகளையும் எங்கள் அரசு தொடர்ந்து செய்யும் என்று கூறுகிறேன். ●

## தமிழகத்தில் தேயிலைச் சாகுபடி

தமிழ்நாடு தேயிலை வளர்ச்சிக் கழகத்தின் தேயிலைச் சாகுபடி திட்டமொன்றுக்குத் தேயிலை வாரியம் அனுமதி அளித்துள்ளது. இதன்படி 1996-97-ஆம் ஆண்டு வரை கூடுதலாக 3000 எக்டேர் பரப்பளவில் தேயிலைச் சாகுபடி செய்யப்படும். இதில் ஆனைமலையில் 2370 எக்டேரிலும், மீதமுள்ளவை நீலகிரிப் பகுதியிலும் தேயிலைச் சாகுபடி செய்யப்படும். 1500 எக்டேரில் தேயிலைச் சாகுபடிச் செய்வதற்கு நிதி உதவி அளிக்கத் தேயிலை வாரியம் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கெனத் தேயிலை வாரியம் ஆறு கோடி ரூபாய் கடனாகவும், ரூ.3.75 கோடியை மானியமாகவும் 1997-98-ஆம் ஆண்டு வரை வழங்கும். இதில் முதல் தவணையாக ரூ.40 இலட்சம் இந்த ஆண்டில் வழங்கப்படுகிறது.



# 'நீலகிரி மாவட்டத்தில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம்'

நீலகிரி மாவட்ட ஆட்சி மொழிக் கருத்தரங்கம், உதகமண்டலம் அரசு கலைக்கல்லூரி வளாகத்தில், அக் கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வி வே.அ. வசந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் த. பெரியாண்டவன் அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார். அப்போது அவர், இம்மாவட்டத்தில் தமிழ் ஆய்வு அலுவலகம் கடந்த 8 மாதங்களாகச் செயல்பட்டு வருகின்றது என்றும், இம்மாவட்டத்தில் 303 அரசு அலுவலகங்கள் உள்ளன. இது வரை 280 அலுவலகங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சில தகவல்களைக் குறிப்பிட்டார்:

ஆட்சியாளர்களுக்கும், பாமர மக்களுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த ஆட்சி மொழிச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.'

'தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ்ச் சொற்களைத் திரட்டி ஆட்சிச்சொல் அகராதி இதுவரையில் 4 பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. சிறப்புச் சொல் அகராதியும் வெளியிடப் பட்டுள்ளது. அரசு அலுவலகங்களில் கோப்புக்களைத் தமிழில் எழுதுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்படுகிறது. வறுமையில் வாழும் தமிழ் அறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு அலுவலர்கள் தமிழில் கையெழுத்திட ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வாணிப அங்காடிகளில் தமிழில் பெயர்ப் பலகை வைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், தலைமை அலுவலகங்களில் 75 விழுக்காடு தமிழில் தட்டச்சு செய்ய வேண்டும். 25 விழுக்காடு தான் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்ய வேண்டும். சார்பு அலுவலகங்களில் அனைத்தும் தமிழில்தான் தட்டச்சு செய்ய வேண்டும் என்ற ஆணை இருக்கிறது. இவ்வாண்டு மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் உள்ள தமிழ் மன்றங்களுக்கு விழாக் காலங்களில் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்க ரூ.75 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.'

இக்கருத்தரங்கில் உதகை அரசு கலைக்கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வி வே.அ. வசந்தா, தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் முப்பால் மணி, கணிதத்துறைப் பேராசிரியர் திரு ஆரோக்கியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கல்லூரிப் பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவ-மாணவியர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

நீலகிரி மாவட்டத் தமிழ் ஆய்வு அலுவலர் டாக்டர் மு. இராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். நீலகிரி மாவட்ட அருங்காட்சியகக் காப்பாளர் திரு இட்சுமண நாராயணன் நன்றி கூறினார்.

**மூ.நா. கிருஷ்ணசாமி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**நீலகிரி மாவட்டம்**

## நிலக்கரி

**கடந்த நிதியாண்டில் (1991-92) 229.29 மில்லியன் டன் நிலக்கரி நாட்டில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 228 மில்லியன் டன்களை விட சற்றே அதிகமாகும்.**

**நடப்பு நிதியாண்டில் 237.09 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என மத்திய நிலக்கரித் துறையின் 1991-92-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தெரிவிக்கிறது. மின் நிலையங்களுக்கு அனுப்பப்படும் நிலக்கரியின் அளவு 118.77 மில்லியன் டன்னிலிருந்து (1990-91) 136.88 மில்லியன் டன்னாக (1991-92) உயர்ந்துள்ளது. இது 15.2 சதவிகித வளர்ச்சியாகும்.**

**இந்தியாவிலிருந்து பெருமளவிற்கு நிலக்கரி ஏற்றுமதி ஆவதில்லை; எனினும், அண்டை நாடுகளான நேபாளம், பூடான், வங்காளதேசம் ஆகியவற்றிற்கு சுமார் ஒரு மில்லியன் டன் அளவில் நிலக்கரி ஏற்றுமதி ஆகியுள்ளது.**

## ஒலிம்பிக்

**வரும் ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 9 வரை பார்சிலோனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் 12 பிரிவுகளில் கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து 50 விளையாட்டு வீரர்கள் அடங்கிய குழு செல்ல இருக்கிறது. எனினும் இவர்கள் பங்கேற்பது, சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தரக் கட்டுப்பாட்டில் தேறுவதைப் பொறுத்தாகும். ஹாக்கி, ஜூடோ, மல்யுத்தம், குத்துச் சண்டை, எடை தூக்குதல், வில் வித்தை, டேபிள் டென்னிஸ், பாட்மின்டன், டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், தடகளப் போட்டிகள், படகுப் பந்தயம் ஆகிய பிரிவுகளில் இந்திய வீரர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.**

## பயணங்கள் முடிவதில்லை!

**1853 ஏப்ரல் 16-ஆம் தேதி தான் முதன் முதலாக போர்பந்தருக்கும் தானேவிற்கும் இடையே இரயில் விடப்பட்டது. இதைக் குறிக்கும் விதமாக, ஆண்டுதோறும் ஏப்ரல் 10 முதல் 16 வரை இந்திய இரயில்வே வாரம் அனுசரிக்கப்படுகிறது.**

# இராமேசுவரத்தில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு



இராமேசுவரம் தீவில் அரியாங்குண்டு என்ற கிராமத்திற்கருகிலுள்ள 'புங்கடித் திடல்' என்ற இடத்தில் புத்தர் சிலையொன்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்புங்கடித்திடல் இராமேசுவரம் நகரிலிருந்து வடமேற்குத் திசையில் சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ளது. இப்புங்கடித்திடல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் புள்ளியடிச்சாலை அல்லது புள்ளியடித்திடல் என்று அழைக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரத்தில் இராமபிரான் சிவனை இலிங்க வடிவில் வழிபட்டதாகப் புராணம் கூறுவதன் அடிப்படையில் இவ்வூரின் பெயர் அமைந்துள்ளது.

இராமேசுவரத்தை உள்ளடக்கிய இப்பகுதி மறவர் நாடு, அல்லது சேதுநாடு அல்லது சேதுபதி சீமை என்று பிற்காலத்தில் வழங்கப்பட்டது.

கடற்கரைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இவ்வழகிய புத்தர் சிலையைக் கொண்டு தமிழ்நாட்டின் இப்பகுதியில் புத்த மதம் பரவியிருந்ததை உறுதிப்படுத்த முடிகிறது. பராமக்கிரமபாகு என்ற இலங்கை வேந்தன் இவ்விடத்தில் புத்த விகாரையைப் புதுப்பிக்கத் திரிகோணமலையிலிருந்து தேவையான பொருட்களைக் கொண்டு வந்ததாக அறிய முடிகிறது. இம்மன்னன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்துள்ளான். எனவே, கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்த புத்த விகாரை இவ்விடத்திலிருந்தமை ஐயத்திற்கிடமின்றிப் புலனாகிறது.

கிழக்காசிய நாடுகளிலிருந்து வந்த வணிகர்கள் கொண்டு வந்த சீனப் பீங்கான் ஓடுகள் பல இங்கு கிடைத்துள்ளமை இதனை உறுதிப்படுத்துகின்றது. இவ்வோடுகள் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றன. இங்கு கிடைக்கக்கூடிய ஓடுகளைக் கொண்டு இங்கிருந்த புத்த விகாரையும் சேதியமும் கீழ்த்திசை நாட்டுப் பக்தர்களைப் பெருமளவில் கவர்ந்துள்ளதாகக் கருதலாம்.


நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை


இப்புத்தர் சிலை உடைந்து காணப்பட்டாலும் அதன் கலையழகு அதனை வடித்த சிற்பியின் அரிய திறமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. மடிப்புகளுடன் கூடிய மேலாடையும், தியான முத்திரையும் இது புத்தர் சிலையே என உறுதிப்படுத்துகின்றன. இதன் காலம் சுமார் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

இவ்விடத்தில் முதுமக்கள் தாழி ஒன்றும் கூம்பு வடிவ ஜாடிகளின் உடைந்த பகுதிகளும் கிடைத்துள்ளன. இப்புத்தர் சிலை, இத்துறையைச் சேர்ந்த இராமேசுவரம் அகழ்வைப்பகக் காப்பாட்சியர் நா.க. கணேசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரிய கல்வெட்டு கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி வட்டத்தைச் சார்ந்த மரக்கோணம் என்னும் ஊரில் ஆதித்ய சோழன்

காலத்திய கல்வெட்டொன்றைக் கண்டுபிடித்துள்ளது.

இக்கல்வெட்டு மூன்று வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. முதலாவதாக, தொண்டை மண்டலத்தில் இம்மன்னன் காலத்தியக் கல்வெட்டுகள் கிடைத்திருப்பதில் இது மூன்றாம் கல்வெட்டாகும். தொண்டை மண்டலத்தில் இதுவரை இம்மன்னன் காலத்திய கல்வெட்டு திருக்கழுக்குன்றம், தக்கோலம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இரண்டாவதாக இக்கல்வெட்டு 'கோவிசைய இராசகேசரி' என்று தொடங்குவது. மூன்றாவதாக



இக்கல்வெட்டு 'உவாஏர்' என்னும் புதுவகையான கொடையைக் குறிப்பதாகும். இக்கொடை பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்த குழைப்பலூர் நாட்டு மரக்குன்றத்தூர் நம்பி அருமுறைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.


இக்கல்வெட்டு மரக்கோணத்தில் திரு கண்ணப்ப முதலியாரின் வயலில் காணப்பெறும் பாறையில் வெட்டப்பட்டுக் காணப்படுகிறது. ஆதித்ய சோழனின் 26-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 897-இல் எழுதப்பட்டிருக்கிறது. மரக்கோணம் என்னும் இவ்வூரின் பெயர் கல்வெட்டில் மரக்குன்றத்தூர் என்று அழைக்கப்படுகிறது. அப்பெயரின் மருவிய வழக்கே மரக்கோணமாக இருக்கலாம்.

இக்கல்வெட்டின் தொடக்கமான 'கோவிசைய இராசகேசரி' என்ற சொல்லின் மூலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பல்லவர்களின் ஆட்சி மாறி சோழர்களின் ஆட்சி உருவாகிவிட்டது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. 'கோவிசைய' என்ற தொடக்கச் சொல் பெரும்பாலும் பல்லவர்களின் கல்வெட்டுக்களிலேயே பயிலப்படுகிறது. ஆனால் இக்கல்வெட்டில் சோழ மன்னனது பெயரான இராசகேசரிக்கு முன்பாகக் காணப்பெறுவது முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

பல்லவ குலத்து இறுதி மன்னனான அபராஜிதவர்மனைத் தோற்கடித்துப் பல்லவ சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றியவன் சோழ மன்னன் ஆதித்யனாவான். சுந்தரசோழனின் அன்பில் செப்பேட்டில் ஆதித்ய சோழன் இராசகேசரியென்றும், விஜயாலயச் சோழனின் மகன் என்றும் கூறப்படுகிறான். திருக்கழுக்குன்றம், தக்கோலம் கல்வெட்டுகளிலும் ஆதித்யன், இராசகேசிரியென்று மட்டுமே அழைக்கப்பட்டுள்ளான். அக்கல்வெட்டுக்கள் 'இராசகேசரி' என்ற சொல்லைக் கொண்டும், எழுத்தமைதியைக் கொண்டும் முதலாம் ஆதித்ய சோழனைச் சார்ந்தவை என்று கருதப்படுகின்றன. ஆதலால் இம்மரக்கோணம் கல்வெட்டும் முதலாம் ஆதித்யச் சோழனைச் சார்ந்தது என்று கருதுவதில் தவறில்லை. ஆதித்ய சோழனின் 'தொண்டை நாடு பாவின சோழன்' என்றும், 'கோதண்டராமன்' என்றும் பட்டப் பெயர்கள் பூண்டிருந்தான். இம்மன்னன் தொண்டை மண்டலம் வரை தன் ஆட்சி எல்லையை விரிவாக்கினான். சேர மன்னன் தாணுரவியோடும், கங்க மன்னன் இரண்டாம் பிரித்விபதியோடும் நல்லுறவு கொண்டிருந்தான். காவிரிக் கரையின் இரு மருங்கிலும் எண்தோள் ஈசனுக்கு எண்ணற்ற கோயில்களை எடுப்பித்தவன் என்று புகழப்படுபவன். கி.பி. 871 முதல் 907 முடிய ஆட்சி புரிந்தவன்.

சோழ மன்னன் ஒருவனது பெயருக்கு முன்பாக 'கோவிசைய' என்ற முன்னொட்டு காணப்படும் கல்வெட்டு இம்மரக்கோணம் கல்வெட்டொன்றேயாகும். இக்கல்வெட்டில் காணப்பெறும் 'உவாஏர்' என்ற தானத்தின் பொருள் அறிய இயலவில்லை. நிலத்தை உழுவதற்கு வழங்கப்பட்ட உரிமையைக் குறிப்பாக இருக்கலாம்.

காவேரிப்பாக்கத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் திரு வெங்கடேசன் என்பவர் தந்த தகவலின் அடிப்படையில், இத்துறையின் இயக்குநர் திரு நடன காசிநாதன் ஆணையின் பேரில் மரக்கோணம் சென்று இக்கல்வெட்டைத் திரு இராமமூர்த்தி என்னும் கல்வெட்டாய்வாளர் படியெடுத்து வந்துள்ளார்.





# தூத்துக்குடி விமான நிலையத்

# தொடக்க விழா

## மாண்புமிகு முதல்வர் பேருரை

"பாண்டி நாடு முத்துடைத்து" - என்ற பெருமைக்குரிய தென் பாண்டி மண்டலத்தின் - தனிச் சிறப்புமிக்க இத் தூத்துக்குடி நகரில் - மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை - நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நல்லாட்சியை அமைத்த பின்னர், உங்களை எல்லாம் முதன் முறையாகச் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். தூத்துக்குடியைத் தலை நகராகப் பெற்ற வ.உ.சி. மாவட்டம், சரித்திரப் புகழ் வாய்ந்தது. வீர பாண்டிய கட்டபொம்மன், சிறையில் செக்கிழுத்த சிதம்பரனார், தன்னுயிரைத் துச்சமென மதித்த விடுதலை வீரன் வாஞ்சிநாதன், நாட்டு விடுதலை தன் பிறப்புரிமை என முழங்கிய மகாகவி பாரதி, என எண்ணற்ற தியாக சீலர்கள் - தியாகிகள் - தீரர்கள் - வல்ல வர்கள் - நல்லவர்கள் தோன்றிய பூமி, இதுவாகும். இந் நகர் இன்று வரலாறு காணாத மாபெரும் விழாக் கோலம் பூண்டிருக்கிறது. கடல் அலை என மக்கள் கூடி உள்ளனர். நாம் கூடியுள்ள திடல், விமான நிலையத் திடலா, அன்று கப்பல்கள் நிற்கும் வங்கக் கடலா என ஐயுறும் வகையில், திரும்பிய திக்கெல்லாம் மக்கள் வெள்ளமாகக் காட்சி தருகிறது.

அதுவும் நல்லிணக்கத்தோடு ஆட்சி புரிந்து வரும் மத்திய அரசும் - மாநில அரசும் இணைந்து நடத்திடும் ஓர் நல்ல நிகழ்ச்சியில் - 'தூத்துக் குடியில் முத்துக் குவியல்' என்ற கூற்றினை மெய்ப்பித்துக் கொண்டிருப்பதுபோல், கொத்துக் கொத்தாய் மனிதக் கூட்டம், இலட்சக் கணக்கில் கூடியுள்ள பாங்கினைக் காணுவதில், உண்மையிலேயே பேருவகை கொள்கிறேன்.

என்னை விடப் பேருவகையினையும், பெருமகிழ்ச்சியினையும் இங்கே கூடியுள்ள நீங்கள் அனைவரும் கொண்டிருக்கிறீர்கள் என்பதை, என்னால் உணர முடிகிறது. காரணம்;

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி; மாநிலத்தில் எங்கள் சகோதரி ஆட்சி என்ற வைராக்கியத்தோடு, எங்களை அமோகமாக வெற்றி பெறச் செய்திட்ட உங்களுக்கு, இன்று இந்த அரிய காட்சிகளை எல்லாம் காணுகிறபோது, குதூகலமும் - கொண்டாட்டமும் பொங்கி வழிகிற தன்மையை, என்னால் உணர முடிகிறது.

இந்த நன்னாளில் தூத்துக்குடி நகருக்குப் புதிய விமான நிலையம்

இன்று முதல் தொடங்கப்படுகிறது - இது மத்திய அரசின் நிகழ்ச்சி. தூத்துக்குடி நகரம் மட்டுமல்லாது, இம்மாவட்டம் முழுவதற்கும் பயன் அளிக்கும் ஏறக்குறைய 700 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தொடங் கப்படுகின்றன.

குறிப்பாக இம்மாவட்ட மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில், மிகப் பிரமாண்டமான அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைய உள்ளது; இவை எல்லாம் மாநில அரசின் நிகழ்ச்சிகள். இந்த இரு பெரும் நிகழ்ச்சிகள் இணைந்து இங்கே நடைபெறுகிறது- நாம் விரும்பி அமைத்திட்ட இரு ஆட்சிகளும், நமக் காக இணைந்து காரியமாற்றும் பாங் கறிந்து, குதூகலம் கொப்பளிக்க, மகிழ்ச்சி பொங்க, ஆடிப்பாடி மகிழ்ந்த வண்ணம் கூடி உள்ளீர்கள்.

ஆனால், எங்கள் இரு அரசு களும் இவ்வாறு இணைந்து நிற்பதே சிலருக்கு எரிச்சலாக உள்ளது; உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி பொங்கு கிறதென்றால், அவர்களுக்கு ஆத் திரம் தான் பொங்கி வழிகிறது; 'ஐயோ, ஆட்சி போயிற்றே' என்ற ஆதங்கம் தான் பொங்கி வழிகிறது.

கடந்த 10 மாதக் காலத்தில், உங்கள் சகோதரியின் ஆட்சி இங்கே நடைபெறுகிறது. இந்த அளவு குறு கிய ஓர் காலக் கட்டத்தில், எண் ணற்ற நன்மைகளை நாட்டு மக்களுக் கென ஆற்றிய 'நல்லரசு', என நல் லோர் அனைவரும் பாராட்டும் - போற்றும் வாய்ப்பை இன்று பெற்று இருக்கிறோம்.

இவ்வளவுக்கும், நாங்கள் ஆட் சிப் பொறுப்பேற்ற நாளில், கடந்த ஆட்சியாளர்களால் - வஞ்சகமும், சூதும் மட்டுமே ஓர் அரசியல் தலை வருக்கான அத்தியாவசிய இலக் கணம், என்ற புது வரலாறு படைத் துள்ள முன்னாள் முதல்வரால், விட்டுச் செல்லப்பட்ட பற்றாக்குறை மட்டும், 900 கோடி ரூபாய் ஆகும். அப்படி ஆட்சியை விட்டு வெளி யேற்றப்பட்ட நேரத்தில், கஜானா வைக் காலி செய்ததோடு, ஒன்றி ரண்டு கோடி பற்றாக்குறை அல்ல; 900 கோடி ரூபாய் பற்றாக்குறையை விட்டுச் சென்றவரைத் தான், சிலர் 'நிர்வாகத்தில் புலி' என்றெல்லாம் பீற்றிக்கொள்கிறார்கள் - போற்றிக் கொண்டிருக்கிறார்கள். 'என்னைப் போல் பட்ஜெட் போட முடியுமா' என, அவரும் தற்பெருமையும், தம் பட்டமும் அடித்துக்கொள்கிறார்.

அவ்வாறு 900 கோடி ரூபாய் பற்றாக்குறையோடு, தமிழக அரசின் கஜானா காலியாக்கப்பட்டிருந்த நேரத் தில் தான் - நாங்கள் ஆட்சி அமைத் துக் கோட்டைக்குள்ளே நுழைந்தவு டன், முதல் வேலையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்தபோதே, நான் போட்ட முதல் உத்தரவு, 322 கோடி ரூபாய் இழப்பை - சுமையைத் தாங்கவேண்டிய உத்தரவான, இந் நாட்டு மக்களை ஆட்டிப் படைத்து வந்த, மலிவு விலை மதுக்கடைகளை

## • தூத்துக்குடி விமான நிலையம்

## • தூத்துக்குடி அனல் மின்நிலைய நான்காவது-ஐந்தாவது பிரிவு

## • இரால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம்

## • 700 கோடி ரூபாய்க்கான அரசுத் திட்டப் பணிகள் தொடக்கம்


மூடிய உத்தரவு என்பதை, நன்கு அறிவீர்கள்.


தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள கிராமப் பகுதிகள் அனைத் தும், அடிப்படை வசதிகளைப் பெறு வதற்கான ஒவ்வொரு ஒன்றியத் திற்கும் ஒரு கோடி ரூபாய், என்னும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ கத்தின் எந்த மூலையில், எந்தக் குக்கிராமத்திற்கு இன்று நீங்கள் சென்றாலும், அங்கே இன்று, அர சின் ஏதாவது ஒரு திட்டவேலை நடந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடியும்.

பழைய கால ஆட்சியாளர்கள் போல், 'அதைச் செய்தோம்; இதைச் செய்தோம்' என நாங்கள், 'அகன்ற வான வெளியில் ஆழக் கிணறு வெட்டிய' வாய்ப்பந்தல் சவடால் அடித்துக் கொண்டிருக்கவில்லை. கண்ணுக்கு நேரே நீங்கள் காணக் கூடிய திட்டங்கள் பலவற்றைச் செய்துகொண்டு இருக்கிறோம்.

நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த, இத்தகைய கடும் நிதிப் பற்றாக் குறை இருந்த காலக் கட்டத்தில், இயற்கையான பல கோளாறுகள் காரணமாக, சாதாரண மக்களைப் பாதிக்கும் அளவில், 'கிடுகிடு' வென விலைவாசிகள் உயர ஆரம்பித்தன. குறிப்பாக அரிசி விலையே கூட மிகக் கடுமையாக, கூட ஆரம்பித் தது. உடனே இந்த விமரிசனக் கர்த்தாக்கள் - 'இந்த அம்மாவுக்கு ஓட்டுப் போட்டீர்களே, அரிசி விலை என்னவாயிற்று பார்த்தீர்களா? அனுபவியுங்கள்' என ஊர் ஊருக் குக் கூப்பாடு போட்டனர்.

அந்தச் சூழ்நிலையில்தான், உங்க ளாலே - உங்கள் அன்பினாலே - ஆதரவாலே - பற்றாலே - பாசத் தாலே ஆட்சிக்கு வந்த நான், உடனடி யாக அதிரடி நடவடிக்கைகள் சில வற்றை மேற்கொண்டேன். அரிசி, நெல் கையிருப்பை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரிசி நடமாட்டம் தாராளமாக்கப்பட்டது. கொள்முதல் முறையாகப் பெறப் பட்டது. கடத்தல்காரர்கள் - பதுக் கல்காரர்கள் தயவுதாட்சண்யமற்ற முறையில் ஒடுக்கப்பட்டார்கள்; ஒரு சிலர் இன்றும் கூட 'தடா' சட்டத் தில் உள்ளே உள்ளனர். பொது விநியோக முறை சீராக்கப்பட்டது. மத்திய அரசு ரேசன் அரிசி விலையை உயர்த்தியபோதிலும், தமிழக மக்






**மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் அனல் மின்நிலைய நான்காவது-ஐந்தாவது பிரிவினைத் தொடங்கிவைத்தார்.**

களுக்குக் குறைந்த விலையில் சன்ன ரகம், மிகச் சன்னரகம் ரூபாய் 3-க்கும், சாதாரண ரகம் ரூபாய் 2-க்கும் வழங்கிட உத்தரவிட்டேன். இதனாலே மட்டும் அரசுக்கு 400 கோடி ரூபாய் இழப்பு நேர்கிறது. இத்தகைய நடவடிக்கைகளால் இன்று அரிசி விலையும் - ஏனைய விலை வாசிகளும் குறைய ஆரம்பித்துள்ளதே - அன்றைக்கு விலைவாசி ஏறிய வுடன் என்னைத் தூற்றியவர்கள், இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? ஏதாவது வாய் திறக்கிறார்களா? எனவே, இதற்கெல்லாம் நீங்கள் தான் பதில் கூறவேண்டும். அவர் களுக்குத் தக்க பாடமும் புகட்ட வேண்டும்.

ஏளனம் பேசுவோர் பேசிக் கொண்டே இருக்கட்டும். குறை கூறுவோர் கூறிக்கொண்டே இருக் கட்டும். நாங்கள் ஒரு பொழுதும் அவர்களுக்கு செவிமடுக்கப் போவ தில்லை. 'போற்றுவோர் போற்ற லும் - புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றலும் தொடர்ந்திடினும், ஏற்ற தொரு செயலை நாம் தொடர் வோம்' என்பதற்கேற்ப, எங்கள் பணி அமைந்து வருகிறது என்பதற் கான எடுத்துக்காட்டே இவ்விழா வாகும். ஆக்கபூர்வமான அறி வுரைகள் என்றால் அதனை ஆராய லாம். ஆனால் அவர்களோ, ஆதங்கத்தாலும் - ஆத்திரத்தாலும், அப்பட்டமான பொய்களையே தொடர்ந்து கூறி வருவதை, நாங்கள் மட்டுமல்ல, வேறு எவரும் பொருட் படுத்தமாட்டார்கள்.

'தமிழகத்தின் திட்ட ஒதுக்கீட்டில் வெட்டு; நாங்கள் ஆட்சியில் இருந்த பொழுது இவ்வளவு வாங்கினோம்; இவர்கள் ஆட்சியில் குறைந்து விட்டது' என மார்தட்டியவர்கள், மத்திய அரசு நமது மாநிலத்தின் 1992-93-க்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை, 1,751 கோடி ரூபாய் என நாம் கோரியவாறே கொடுத்த பொழுது, வாயடைத்துப் போயினர். கடந்த ஆண்டு கிடைத்த 1,605 கோடி ரூபாய் ஒதுக்கீட்டைச் செலவு செய்ய முடியுமா, என்று மத்தியத் திட்டக் குழுவே சந்தேகித்தபொழுது, திட்ட ஒதுக்கீட்டையும் மிஞ்சி, 1,640 கோடி ரூபாய் என 1991-92-ஆம் ஆண்டிற்குச் செலவு செய்து, சாதனை படைத்து நிற்கும் எங்கள் அரசைப் பற்றியும், என் னைப் பற்றியும், நிதி நிர்வாகத்தில் தன்னைப் புலி என்று கூறிக்கொள் ளும் பெரியவர், முன்னர் குற்றம் கூறியவர் இன்று ஏன் வாய் திறக்க வில்லை? தான் பொய்யாகக் கூறிய குறை, பொய் என்பதை நிரூபித்து விட்டார்களே! நாட்டு மக்கள் முன், தன் அறிவாற்றலைத் தோலுரித்துக் காட்டி விட்டார்களே என்று கவலை தான்!


நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற கடந்த 10 மாத காலத்தில், எத்தனைத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியுள்ளோம். அவற்றை எல்லாம் சாடினால், மக்கள் எள்ளி நகையாடுவார்கள் என்பதால், இன்று என்னைப் பற்றித்தனிப்பட்ட முறையில் புழுதி வாரித் தூற்றும் முயற்சியில் இறங்கி உள்ளனர்.

என்னைப் பற்றி என்ன வேண்டு மானாலும் கூறட்டும். நான் அதற்கு எப்பொழுதும் கவலைப்பட்டதே கிடையாது. எத்தனை எதிர்நீச்சல் போட்டு, ஏளனங்களைச் சந்தித்து, நான் இன்று இந்த நிலையை அடைந் துள்ளேன் என்பதை, நாட்டு மக்கள் நன்கு அறிவீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போன்று, 'மக்கள் சேவையே மகே சன் சேவை' என்று ஏற்றுக்கொண்டு அரசியலில் இறங்கிய நான், சுயநல வாதிகளின் கொடுஞ்செயல்களுக்கு என்றும் அஞ்சியதில்லை; இனி அஞ்சவும் போவதில்லை என்பதை, மெத்தவும் திடமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்மனச் செம்மல் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக் கப்பட்ட நான், அவர் வழி தொடர்ந்து நடக்கும் நான், எந்தத் தீய சக்தி களுக்கும், மக்கள் விரோதச் சக்தி களுக்கும் அஞ்சமாட்டேன். அவர் களை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்வேன் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீப காலமாகப் பத்திரிகைகளில், என்னைப் பற்றி எண்ணற்ற விமரி சனங்களை, திட்டமிட்டு சிலர் பரப்பி வருவதை நீங்கள் அறி வீர்கள்; தவறான, சிறிது கூட உண்மையே இல்லாத கற்பனைச் செய்திகளை வெளியிட்டு வரு கிறார்கள். இது ஒரு திட்டமிட்ட சதிச் செயலோ என்று கூட எண் ணத் தோன்றுகிறது. சட்டமன்றப் பேரவையின் உரிமை மீறல் பிரச் சினையில், பாதிக்கப்பட்ட சில உறுப்பினர்கள் கொடுத்த புகார் களின் மீது, பேரவைத் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டார். சம் பந்தப்பட்ட உறுப்பினர்கள் உரிமை பாதித்ததாகவும் - பேரவையின் கவுர வத்திற்குக் களங்கம் ஏற்படுத்திய

செயலில் ஈடுபட்டதாகவும், சம்பந்தப்பட்ட சில பத்திரிகை ஆசிரியர்களையும், நிருபர்களையும் விதிமுறைகளின்படி விசாரணைக்கு அழைத்தார். ஒருவர் அழைப்பு பெற்றுக் கொண்டும் வர மறுத்திருக்கின்றார். மற்றவர் நேரில் வந்து அவையில் நடவாத ஒரு நிகழ்வினை, நடந்ததாகக் கூறி வாதம் செய்திருக்கிறார். 'செய்த தவறுக்கு வருத்தமாவது தெரிவிக்கிறீர்களா?' என, விசாரணை செய்த உரிமைக் குழுவில் இருந்த பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் கேட்டனர். வருத்தம் தெரிவிக்க மாட்டோம் எனப் பிடிவாதமாக அவர்கள் கூறினார்கள். பேரவையின் உரிமைக்குழு, இவர்களின் செயல்கள் அவையின் உரிமை மீறல்தான் என்று முடிவு செய்து, தண்டனை வழங்க அவைக்குப் பரிந்துரை செய்தது. பேரவை அதனைப் பரிசீலனை செய்து, பரிந்துரைகள் ஏற்றுக்கொண்டு, தக்க தண்டனை வழங்கப் பேரவையின் தலைவருக்கு அனுமதி அளித்தது.



அதன் அடிப்படையில், தாங்கள் புரிந்துள்ள அவையின் உரிமை மீறல் செயலுக்காக, வருத்தம் கூடத் தெரிவிக்க மறுத்த நிருபர் மீதும், வர மறுத்தவர் மீதும், வந்திருந்து உண்மைக்குப் புறம்பாக, தான் எழுதியது தான் சரி என்று வாதிட்டவர்கள் மீதும், நடவடிக்கை எடுத்து, பேரவைத் தலைவர் தண்டனை வழங்கினார். இதுதான் நம் தமிழகச் சட்டப் பேரவையில் நடந்தது. இதில் நான் எவ்வகையில் பொறுப்பாளியாக முடியும்? உண்மை இவ்வாறிருக்க, பத்திரிகைச் சுதந்திரம் தமிழ்நாட்டில் பறிக்கப்படுகின்றது; நசுக்கப்படுகின்றது; என என் பெயரை இழுத்து, திட்டமிட்ட விஷமப் பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்கள் என்றால்... இவர்களுக்கான தண்டனையை நீங்கள் தான் கொடுக்க வேண்டும்.

பேரவையின் மீது பழி சுமத்தப் பட்டது; அவை உறுப்பினரின் உரிமைகள் மீறப்பட்டன; அவையின் முடிவுகள் மதிக்கப்படவில்லை என்றால், அது மாபெரும் குற்றமாகும். அதனைச் சட்ட ரீதியாகத் தட்டிக் கேட்கக்கூடாது என்று வாதிட்டால், அதை என்ன என்று சொல்வது? அந்த வாதத்திற்குப் பல பத்திரிகைகளும் உறுதுணையாகச் சென்று உதவும் நிலை, தற்பொழுது நமது நாட்டில் நிலவுகின்றது என்றால், இதனை எப்படி நியாயப்படுத்துவது?

**இந்தக் கட்டத்தில் தமிழகப் பெருமக்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகின்றேன். தமிழகச் சட்டமன்றப் பேரவையின் முடிவு, மக்களாகிய உங்களின் முடிவு. உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜனநாயக அரசியல் அமைப்பில், உங்கள் பிரதிநிதியாக, உங்கள் நலன் காக்க, சட்டமன்றத்தில் உங்களுக்காக வாதாட உள்ள உங்கள் பிரதிநிதிகள், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள். அவர்களின் உரிமைகள் மீறப்பட்டன என்றால், அச்செயல் மக்களாகிய உங்கள் உரிமைகள் மீறப்பட்டதாகத்தான் பொருள்படும்.**

**சட்டப் பேரவையில் முடிவை மதிக்காமல் எதிர்ப்பவர்கள், உங்களை எதிர்ப்பவர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்திட வேண்டும்.** பத்திரிகைச் சுதந்திரத்தைக் காக்க வேண்டியது அரசின் கடமை.

அதே நேரத்தில் தரம் தாழ்ந்த பத்திரிகைகளில் வெளியிடப்படும் பொய்களையும், அவதூறுகளையும், தட்டிக் கேட்க வேண்டிய கடமையும் அரசிற்கு உண்டு. அவ்வாறு கேட்கும்பொழுது, அதனை எப்படிப் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப் பட்டது என்று கூற முடியும்?

எனவே, இன்று என்னையும் - தமிழக அரசையும், எப்படியேனும் தரம் தாழ்ந்து விமரிசிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான், இப்பிரச்சினையைச் சிலர் பெரிது படுத்தி வருகிறார்கள் என்பதைத் தவிர, வேறொன்றுமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தமட்டில், மக்கள் சேவைக்கெனவே என்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளதால் - எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாது, உங்களுக்கான நற்பணிகளை ஆற்றிட, உங்களை நோக்கி ஓடோடி வந்துள்ளேன்.

எங்களைக் குறை கூறி வருவோருக்கும் - எங்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்பதை, எங்களது செயல்பாடுகள் மூலம் தெளிவு படுத்த விரும்புகிறேன். இதே தூத்துக்குடிப் பகுதியில், மத்திய அரசு 225 கோடி ரூபாய் முதலீட்டில், Titanium மற்றும் Zirconium தொழிற்சாலை ஒன்றை நிறுவத் திட்டமிட்டு இருந்தது.

அத்தொழிற்சாலை, தூத்துக்குடியை மட்டுமல்ல, நமது மாநிலத்தைவிட்டே சென்றுவிடக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலை தான், நாங்கள் ஆட்சிக்கு வந்தபொழுது, பழைய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இங்கே அத்தொழிற்சாலை அமைப்பதற்காக எடுக்கப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்கள் சிலர், உயர் நீதிமன்றத்தில் நில எடுப்புக்கு எதிராக தடையாணை பெற்று, அதனால் அத்தொழிற்சாலையினைத் தொடங்க முடியாத ஓர் சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். அப்பேர்ப்பட்டோருக்கு உடந்தையாக, பழைய ஆட்சியாளர்கள் இருந்தனர் என்றால், எவ்வளவு பெரிய வெட்கக்கேடு என்பதை நீங்கள்தான் கூற வேண்டும்.

ஆனால், நாங்கள் எடுத்த தனி முயற்சியின் காரணமாக, ஒரு மாதக் காலத்திலேயே அந்தத் தடை ஆணைகளை நீக்கி, அவ்வழக்கில் அரசுக்குச் சாதகமான முடிவு கிடைக்கச் செய்தோம். இன்று, அந்த நிலம், மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அதன் தொடக்கப் பணிகள் வெகு விரைவாக நடைபெற்று வருகின்றன என்றால், அது உங்களின் அன்பான ஆதரவோடு, உங்கள் அரசு எடுத்த துரிதமான நடவடிக்கைகளினால் தான் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேபோல, இன்னொரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நேற்று இரவு, மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தமிழகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து இருந்த சுமார் 2,000 கோடி ரூபாய் செலவிலான Aromatic Complex நிறுவுவதற்கான மத்திய அரசின் அனுமதியை அமைச்சரவை அளித்து உள்ளது என்ற இனிய செய்தியைத் தெரிவித்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு என் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தேன்.

மத்திய, மாநில அரசுகளுக்கிடையே இணக்கமான, சுமுகமான உறவு என்றென்றும் பாதுகாக்கப்படும் என்ற நிலையை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், ஸ்பிக் நிறுவனத்துடன் கூட்டாக இந்த National Aromatics and Petrochemicals Corporation Limited நிறுவனத்தை நிறுவுவதற்கு 1988 முதல் முயற்சி எடுத்து வந்தது.



தமிழகத்தில் தொய்வடைந்திருந்த தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்தோம் என்று தற்பெருமை அடித்துக் கொண்ட முந்தைய அரசு இந்த மகத்தான தொழில் நிறுவனத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான முயற்சியையும் எடுக்கவில்லை. மக்களின் ஏகோபித்த நம்பிக்கையை யும், ஆதரவையும் பெற்ற எங்கள் அரசு ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் பொருட்டு மத்திய அரசிடம் தேங்கிக் கிடந்த அனுமதிக் கடிதங்கள் மற்றும் உரிமங்களை விரைவில் வழங்கக்கோரி பாரதப் பிரதமருடன் கலந்து உரையாடினேன்.

குறிப்பாக NAPCO நிறுவனத்திற்கு அனுமதியை விரைவில் அளிக்க வேண்டும் என்று கடிதங்கள் மூலமும், நேரிலும் பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்தினேன். எங்கள் கோரிக்கையின் நியாயத்தையும், அவசியத்தையும் உணர்ந்த மத்திய அரசு இன்று NAPCO நிறுவனத்தைத் தொடங்க அனுமதி அளித்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் தமிழகத்திற்கு முதல்முறையாகக் கிடைத்த மிகப் பெரிய தொழிற்சாலை இதுதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்நிறுவனம் தமிழகத்தின் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கத்தைக் கொடுத்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வழிவகுக்கும்.

இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதனால் தமிழகத்தில் ஏறத்தாழ 70,000 பேருக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். மேலும் இதன் தொடர்புடைய மற்ற சிறுதொழில்கள் வளர்வதன் மூலம், பல சிறு தொழிற்சாலைகள் தொடங்கவும் இது வழி வகுக்கும். Purified Terephthalic Acid Ortho Xylene மற்றும்Benzene போன்ற ரசாயனப் பொருட்களைப் பெட்ரோலியத்திலிருந்து தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையை அமைக்க 1987-ஆம்



ஆண்டு நிலவரப்படி 1,386 கோடி ரூபாய் முதலீடு தேவை எனக் கணக் கிடப்பட்டது. ஆனால் தற்போது ஏறத்தாழ 2000 கோடி ரூபாய் அளவு உயர்ந்துள்ளது. இதுபோன்று மேலும் பல அனுமதிக் கடிதங்களை யும், உரிமங்களையும் வழங்குவ தோடு மட்டுமன்றி மத்திய அரசு தானே முன் வந்து மத்திய அரசின் முதலீட்டை அதிகரித்து பல பெரிய தொழிற்சாலைகளைத் தமிழ் நாட்டில் தொடங்க வேண்டுமென்று நான் தொடர்ந்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வற் புறுத்துவேன் என்பதை இத்தருணத் தில் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

தமிழகத்திற்கு இத்திட்டத்தை வழங் கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களுக்கு, மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியினை என் சார்பாகவும், உங்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள் கிறேன்.

சிதம்பரனார் மாவட்டம் 20.10.1986 அன்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்டது. ஏறத்தாழ 6 ஆண்டுகள் ஆகியும், இதுவரை இந்த மாவட்டத்திற்கென, ஒரு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கூட கட்டப்படவில்லை. விந்தை என்ன வென்றால், இதற்கென முந்தைய அரசு, 1989-ஆம் ஆண்டில் ஒரு பெரும் விழாவையே நடத்தி, அடிக் கல் நாட்டினார்கள். மாவட்ட ஆட் சித் தலைவரின் அலுவலகத்திற்கு, மக்கள் சென்றுவரப் போக்குவரத்து வசதி கூட இல்லாத ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், பணி யைத் தொடங்காமல் விட்டுச் சென் றார்கள். இன்று உங்கள் அரசு, அது மக்களின் நலம் காக்கும் அரசு என்பதால், அந்த நிலையை முற்றிலு மாக மாற்றி, சிப்காட் வளாகத் திலேயே, துறைமுகச்சாலைக்கு மிக அருகிலேயே, இப்பகுதி மக்கள் அனை வரும் வசதியாகச் சென்றுவரும் வகையில், மாவட்ட ஆட்சித் தலை வர் அலுவலகம், இதர மாவட்ட நிர் வாக அலுவலகங்கள், மற்றும் அவர் களுக்கான வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள், அனைத்தையும் 420 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க முடிவு செய்துள்ளது என்ற நல்ல செய்தியினை, உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் போதிய பேருந்து வசதி, இரயில் போக்குவரத்து, மற்றும் கப்பல் போக்குவரத்துக்கள் இருந்தாலும், இங்குள்ள மக்களின், அதிலும் குறிப்பாக பல தொழில் அதிபர்கள், மற்றும் வணிகப் பெரு மக்களின் நெடுநாளைய கனவு, இன்று இந்த விமான நிலையத்தைத் தொடங்கி வைப்பதன் மூலம் நனவாகிறது. விமான நிலையத்தைத் திறந்து, விமானப் போக்குவரத்தைத் தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பினை எனக்கு நல்கிய மத்திய அரசிற்கு, என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.


தூத்துக்குடித் துறைமுகத்தின் விரைவான வளர்ச்சிக்கு, அன்று வித்திட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான். 2,500 ஏக்கர் நிலத்தினை இலவசமாக மத்திய அரசிடம் கொடுத்து, இத் துறைமுகத் தைத் தமிழகத்திற்கு வாதாடிப் பெற்ற வர், பேரறிஞர் அண்ணா அவர்கள்

இத்துறைமுகத்தின் வளர்ச்சிக்கு மிக்க தொடர்புடையது சேதுசமுத் திரம் திட்டம். 1860-ஆம் ஆண்டு, (Taylor) எனும் ஆங்கிலேயக் கப்பற் படைத் தளபதியால் வகுக்கப்பட்ட திட்டமே. சேதுசமுத்திரத் திட்டம். அன்றே அதனைச் செயல்படுத்தி முடித்திருந்தால், ஐம்பது இலட்சம் ரூபாய் தான் செலவாகியிருக்கும். ஆனால், இன்று அத்திட்டத்தை நிறைவேற்ற 400 கோடி ரூபாய்க் கும் மேல் செலவு ஏற்படும் நிலை யில் உள்ளது. மாறிவரும் பொருளா தாரச் சூழ்நிலையில், இன்று 400 கோடி என்பது, ஒரு மிகப் பெரிய தொகை அல்ல. சேதுசமுத்திரத் திட் டத்தால், நாட்டின் கடலோரப் பாதுகாப்பு பன்மடங்கு உயரும்.

பல பெரிய கொள்ளளவு கொண்ட வெளிநாட்டுக் கப்பல்கள், தூத்துக் குடித் துறைமுகத்தைத் தொட்டுச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டு, அந் நியச் செலாவணி அதிகரிக்கும். இதனால் கப்பல் போக்குவரத்தும் கணிசமாக அதிகரிக்கும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இத்திட் டத்தை நிறைவேற்றுவதில், மத்திய அரசு தயக்கம் காட்டுவதுதான், ஏன் என்று விளங்கவில்லை! எனவே, நாட்டின் பாதுகாப்பையும், தமிழகத் தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, சேதுசமுத்திரத் திட் டத்தை உடனடியாக நிறைவேற்ற, மத்திய அரசு முன்வர வேண்டும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என, எங்கள் அரசு வலியுறுத்தும் என் பதை இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

இன்று 630 கோடி ரூபாய் செல வில் கட்டப்பட்ட, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் நான்கா வது, மற்றும் ஐந்தாவது பிரிவுகளை யும், தொடங்கி வைக்கும் நல்வாய்ப் பும் எனக்குக் கிட்டியுள்ளது. இவை

ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட இரு பிரிவுகளாகும். ஏற்கெனவே உள்ள 210 மெகா வாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளுடன் சேர்த்து, மொத்தம் 1,050 மெகாவாட் மின்சாரம் இங்கே உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்திற்குக் கிடைக்கவிருக்கிறது. தேசிய அளவில், உற்பத்தித் திறனில் பல்வேறு விருதுகளைப் பெற்ற, நமது தூத்துக்குடி அனல்மின் நிலையம், மேலும் பல சாதனைகளைப் புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன்.



• உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்கள்தான்.

—சுதே

இன்று இந்த விழாவில், இறால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தரும், 'இறால்' ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம், ஏழு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள, 160 கிலோமீட்டர் கடலோரப் பகுதிகளில், இந்த இறால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இம்மாபெரும் விழா நிகழ்ச்சி மூலம் மட்டும், ஏறத்தாழ 700 கோடி ரூபாய்க்கான திட்டங்கள், இன்றுதொடங்கி வைக்கப்படுகிறது என்பதை, மெத்த மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில், 24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நேரடி உதவிகள், இன்று வழங்கப்படுகின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் நம்பிக்கையைப் பெற்ற, மக்களின் நம்பிக்கைக்குரிய, மக்களின் தேவைகளை நிறைவேற்றும், மக்களுக்குரிய அரசாக, எங்கள் அரசு திகழ்கிற காரணத்தால் தான், தென் மாவட்ட மக்களைப் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாக்கத்தக்க, 'மதுரை-மணியாச்சி-தூத்துக்குடி' மீட்டர் கேஜ் ரயில்பாதையை அகற்றும் திட்டத்தைக் கைவிடுங்கள் என, மத்திய அரசை இம்மாநில அரசே பெரிதும் வற்புறுத்தி, சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன்.

அகல ரயில் பாதையை மட்டும் வைத்துக்கொண்டு, மீட்டர் கேஜ் ரயில் பாதையை அகற்றும் திட்டம், அப்படியே நடைமுறைப் படுத்தப்பட்டால், 9 ரயில்கள் ரத்து செய்யப்பட வேண்டியதோடு, சென்னைக்குச் செல்லும் மற்றும் திரும்பி வரும் பயணிகள், 104 கிலோ மீட்டர் தூரம் சுற்றிப் பயணம் செய்ய வேண்டியதோடு, ரயில் கட்டணச் செலவும் அதிகமாகிற சூழ்நிலை உருவாகும்.Meter Gauge Line -ஐ, அப்புறப்படுத்தாமல், அப்படியே வைத்துக் கொண்டு, Broad Gauge Line -ஐ தனியாக அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. சட்டப்பேரவையிலும், இதே கருத்தை நான் வலியுறுத்திப் பேசியுள்ளேன். மீட்டர் கேஜ் ரயில்பாதை அகற்றப்படாமல் இருக்க, மாண்புமிகு பாரதப் பிரதமரையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்வேன், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெறும் பேச்சோடு மட்டும் நின்றுவிடுகிற அரசல்ல, மக்கள் அரசாகிய உங்கள் அரசு. நிதிச்சுமை, மாநில அரசை அழுத்துகிற நேரத்திலும், கடன் சுமை, விவசாயிகளை அழுத்திடக் கூடாது என்பதற்காக, மனிதாபிமானத்திற்கு மதிப்பளித்து, அண்மையில் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத வகையில், சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் கூட்டுறவு வங்கிகள் மூலம் வாங்கியிருந்த குறுகிய கால, மற்றும் மத்தியக் காலக் கடன்களுக்கு உரிய வட்டி, மற்றும் அபராத வட்டியினை, அரசே விவசாயிகளுக்கு வழங்குகிற ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கடன் தொகையில் அசலை மட்டும் அவர்கள் கட்டினால் போதும், என்கிற நிலைமை உருவாக்கப்பட்டு, கடன் சுமையால், விவசாயிகளின் முதுகெலும்பை முறித்துவிடக் கூடாது, என்பதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம், கடன் சுமையால் தவிக்கும் விவசாயிகளுக்கு, நேரடியாக 69.07 கோடி ரூபாய் வழங்கிட உள்ளோம். இதன் மூலம், 13 இலட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள், என்கிற நிம்மதியை நாங்கள் பெற்று உள்ளோம். இந்த நிம்மதியை உங்களுக்கு நான் வழங்குவேன் என்று நீங்கள் நம்பினீர்கள். உங்கள் நம்பிக்கை வீண்போகாத வகையில், நாங்களும் செயல்பட்டு வருகிறோம். இதுதான் எனக்கும், மக்களுக்கும், இந்த அரசுக்கும் உள்ள உறவு. இது தெரியாமல், என்மேல், வேண்டுமென்றே, உண்மைக்குப் புறம்பாகவும், அரசுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும், சிலர் பேசி வருகிறார்கள், எழுதியும் வருகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தையே சண்டைக்கு இழுக்கிறார்கள்.

நீதிக்குத் தலை வணங்கத்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறாரே ஒழிய, அநீதிக்குத் தலை வணங்க, அவர் என்றுமே எனக்கு அறிவுரை கூறியதில்லை. அப்பேர்ப்பட்ட இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அடிபொற்றி, அவரின் வாரிசாக, ஆட்சி நடத்தி வரும் நான், இந்த விழாவின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திக்கிற வாய்ப்பு பெற்றதற்காக, மகிழ்ச்சியடைகிறேன், பெருமிதம் கொள்கிறேன்; பெருமை அடைகிறேன்!

இந்த மாபெரும் விழாவினை மிக மிகக் குறுகிய காலத்தில், சீரும் சிறப்புமாக ஏற்பாடு செய்த அனைவருக்கும், எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல்மின்நிலையப் பணியாளர்களுக்குப் புதிதாக யூனிட் 4 மற்றும் 5 ஆகிய இரண்டையும் இயக்கி வைக்க வழங்கப்படும் ஊக்கத் தொகையாக (Commissioning Incentive) ரூ.75 இலட்சம், 2,500 பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்ப்பினை நல்கிய மத்தி அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும், இங்கு கடலெனத் திரண்டு வந்து, விழாவினைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். ●

ஏதேனும் ஒரு குடியிருப்பு மனையில் வீடு கட்டுவதானால்

# வீடு கட்டுவதற்கு முன் கவனிக்க வேண்டியவை



**மனை:**

மனையானது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் அங்கீகரிக்கப் பட்டு, மனை அமையும் உள்ளூராட்சியின் ஒப்புறுதி பெறப்பட்டதாயும் இருக்க வேண்டும்.

**அணுகு பாதை:**

மனைக்கான அணுகுபாதையாக உள்ளூராட்சியின் பராமரிப்புக்கு ஏற்கப்பட்ட தாக அமைய வேண்டும்.

**கட்டடத்தைச் சுற்றிலும் விடப்பட வேண்டிய திறவிடங்கள் மற்றும் ஏனைய விதிகள்:**
குறைந்தபட்சப் பரப்பு:

தொடர் கட்டடப் பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களில் 80 ச.மீட்டர் அள விலும், பொருளாதாரத்தின் பின்தங்கிய பகுதியாயின் சென்னை நகருக்குள் 20 ச.மீட்டர் அளவிலும், ஏனைய பெருநகர் வளர்ச்சி எல்லைக்கு 40 ச.மீட்டர் அளவிலும், மேற்சொன்னவாறு அறிவிக்கப்படாத பகுதியில் 150 ச.மீட்டர் அளவிலும் இருக்க வேண்டும்.

**மனையின் அகலம்:**

தொடர் கட்டடப் பகுதியில் 4.5 மீட்டர் ஆகவும், பொருளாதாரத்தில் பின்

தங்கிய பகுதியாயின் 4 மீட்டர் அளவிலும், ஏனைய பகுதிகளில் 6 மீட்டர் அளவிலும் அமைதல் அவசியம்.

| | ஜார்ஜ் டவுன் மற்றும் தொடர் கட்டடப் பகுதி | சென்னை நகரத்தின் ஏனைய பகுதிகள் நகராட்சி மற்றும் நகரியப் பகுதிகள்: | சென்னைப் பெருநகர் குழும எல்லைக்குட்பட்ட முதல் இரண்டு பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள். |
|---|---|---|---|
| **மனையில் கட்டக் கூடிய கட்டடத்தின் மொத்தப்பரப்பு:** | 1.75 | 1.50 | 1.25 |
| **மனையில் கட்டக்கூடிய தரைத் தளப்பகுதி:** | 65% | 60% | 55% |

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாயின் 75%

**அதிகபட்ச உயரம்:**

சாதாரணமாக அணுகுபாதையின் அகலத்தைப் போல் ஒன்றரைப் பகுதி.

**முன் பக்கத்திறப்பிடம்:**

| | **சாலையின் அகலம்** | **விடவேண்டிய அளவு** |
|---|---|---|
| | 30 மீட்டருக்கு மேல் | 6 மீட்டர் |
| 1.5 மீட்டர் அனைத்துச் சாலைகளுக்கும் | 15 மீட்டருக்கு மேல் 30 மீட்டருக்குள் | 4.5 மீட்டர் |
| | 10 மீட்டருக்கு மேல் 15 மீட்டருக்குள் | 3 மீட்டர் |
| | 10 மீட்டருக்குக் கீழ் | 1.5 மீட்டர் |

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாகச் சாலை அகலம் எவ்வளவாக இருப்பினும் 1 மீட்டர் விட வேண்டும். சாலைக்குக் கட்டட வரிசை அளவு நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அந்த அளவுக்கு முன் பக்கத்திறவிடம் விட வேண்டும்.

**பின்பக்கத் திறப்பிடம்:**

| | **மனையின் நீளம்** | **விடவேண்டிய அளவு** |
|---|---|---|
| 15 மீட்டர் வரை ஏதும் தேவையில்லை | 1.5 மீட்டர் | |
| | 15 மீட்டருக்கு மேல் 30 மீட்டருக்குள் | 3 மீட்டர் |
| | 30 மீட்டருக்கு மேல் | 4.5 மீட்டர் |

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியில் பின் பக்கத்திறவிடம் ஏதும் விட வேண்டியதில்லை.

**பக்கத்திறப்பிடம்:**

| | |
|---|---|
| ஏதும் தேவையில்லை | 1.5 மீட்டர் ஒவ்வொரு பக்கத்திலும் ஏதேனும் ஒரு பக்கத்தில் 3 மீட்டர் திறவிடம் விட்டு ஒரு பக்கம் எல்லையை ஒட்டிக் கட்டடம் அமைக்க விரும்பினால், ஒட்டிக் கட்டப்படவிருக்கும் பக்கத்தில் பக்கத்து மனை சொந்தக்காரரிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் பெற வேண்டும். பொருளாதாரப் பின்தங்கிய பகுதியில் ஏதேனும் ஒரு பக்கம் 1 மீட்டர் திறவிடம் விட்டால் போதுமானது. |

மேற்கண்ட விதிகள், உதாரணத்திற்காகக் காட்டப்படுகிற விதிகளின்படி தேவையான வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளைப் புத்தகத்தில் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்கொண்டு தகவலுக்கு, தகவல் மற்றும் ஆலோசனை மையத்தை அணுகவும். திட்ட அனுமதியுடன் உள்ளூராட்சியின் கட்டட உரிமமும் பெற வேண்டும். அனுமதியின்றிக்கட்டப்படும்கட்டடங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதியின்றி கட்டடம் கட்டுவதைத்தவிர்த்துச் சிக்கல்களை தவிர்ப்பது சாலச் சிறந்தது.

# நூல் நயம்

## புலவர் இளஞ்செழியன் கவிதைகள்

**ஆசிரியர்:** புலவர் இளஞ்செழியன்

**வெளியீடு:**
மலர்மாமணி பதிப்பகம்,
9, சிவராமன் தெரு,
சென்னை-600 005.

பக்கம்:168 விலை:ரூ.25/-

முதல் கவிதையே நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. தமிழ்மொழிகுறித்துக் கவிஞர் கொஞ்சு தமிழில் கவிதை படைத்திருப்பது அருமை. காதல், கல்வி, சமுதாயம் ஆகிய தலைப்புகளில் கவிதைக் கனிகள் இனிக்கின்றன. ஆழ்ந்த தமிழ்ப் புலமை ஒவ்வொரு கவிதையிலும் இழைந்திருக்கிறது. அருமையான கவிதைத் தொகுப்பு.

## தமிழில் பூத்த தாழம்பூ

**ஆசிரியர்:** அருணா பொன்னுசாமி

**வெளியீடு:**
திரு.வி.க. மன்றம்
அண்ணா நகர்,
கரூர்-639 002.

பக்கம்:104 விலை:ரூ.15.50

தமிழ்மணம் கமழும் 'தாழம்பூ'க் கவிதை, நூலின் தலைப்பாய் விளங்குகிறது. இதேபோல, சமுதாயம் குறித்தும் கவிஞர் பல கருத்து மணிகளைக் கோர்த்து, படிப்போர் இதயத்தில் இடம் பிடிக்கிறார்.

## அன்றாட வாழ்வில் அறிவியல்

**ஆசிரியர்:** டாக்டர் சோ. சேசாசலம்

**வெளியீடு:**
ரவி பதிப்பகம்,
16, சுங்குராமத் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:312 விலை:ரூ.36/-

சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்? உடல் வளமாக இருந்தால்தான், உருப்படியான செயல்களைச் செய்ய முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்நூல். அன்றாட வாழ்வில் நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பல அறிவியல் குறிப்புகள் பொதிந்துள்ளன.

## கவிதைக் கனிகள்

**ஆசிரியர்:** அகரம் பெருமாள் மைந்தன்,

**வெளியீடு:**
பிரபாவதி பப்ளிகேஷன்ஸ்,
88, எல்.ஜி.பி.லைன்,
புதுப்பேட்டை, சென்னை-2.

பக்கம்:112 விலை:ரூ.14/-

சிந்தனையின் சிதறல்கள் கவிதைகளாக உருவெடுத்திருக்கின்றன. தமிழ் மொழி, நாடு, பெண்ணுரிமை ஆகியவற்றோடு இயற்கைக் காட்சிகள் குறித்தும் இதயம் திறந்து பாடுகிறார் ஆசிரியர்.

## மாறிவரும் சமுதாயத்தில் மகளிர்

**ஆசிரியர்:** கோக்கோதை

**விற்பனை உரிமை:**
ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
சென்னை-600 005.

பக்கம்: 81 விலை:ரூ. 15/-

இளஞ்சமுதாயம் முன்னேறவும், பெண் சமுதாயம் மறுமலர்ச்சி பெறவும் நல்ல பல கருத்துக்களைக் கூறும் ஆசிரியர், பெண்கல்வி, பெண் உரிமை, தாய்மொழிக் கல்வி முதலான கருத்துக்களையும் அலசி ஆராய்கிறார்.

## சூரிய நாற்றுகள்

**ஆசிரியர்:** ரவீந்திர பாரதி

**வெளியீடு:**
தி நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரவேட் லிமிடெட், சென்னை-98.

பக்கம்:60 விலை:ரூ.6/-

புதுக்கவிதைகளின் அழகிய தொகுப்பு. பாரதியைப் பற்றிக் கூறுகையில்,
'இந்தப் பூமியில்
முளைத்து
வானத்தை பிடிக்கும்
கவிதை மலை'
என்கிறார் கவிஞர்.

## திருவள்ளுவரின் நல்வழிக் கதைகள்

**ஆசிரியர்:** முருகானந்தன்

**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94.

பக்கம்:96 விலை:ரூ.12/-

வாழ்வாங்கு வாழ வழிவகை சொன்னவர் வள்ளுவர். அவரது கருத்துக்கள் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது கதை வடிவில். குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் படிக்கலாம்.

## புற்றுநோயைத் தடுக்க சித்த வைத்தியம்

**ஆசிரியர்:** சீதாராம் சுப்பிரமணியம்

**வெளியீடு:**
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு),
சென்னை-600 094.

பக்கம்:96 விலை:ரூ.12/-

மனிதனை வருத்தும் நோய்களுள் புற்றுநோயும் ஒன்று. இது எப்படி ஏற்படுகிறது? ஆரம்ப அறிகுறிகள் என்ன? என்பது குறித்த தகவல்களுடன், இந்நோயைச் சித்த மருத்துவ முறைபடிக் குணமாக்கும் வழிவகை குறித்தும் கூறுகிறது இந்நூல்.

## கவிஞர் போற்றும் அம்பேத்கர்

**தொகுப்பாசிரியர்:** புலமைதாசன்

**வெளியீடு:**
புலமைப் பதிப்பகம்,
10, பார்த்தசாரதி சந்து,
சென்னை-600 005.

பக்கம்:128 விலை:ரூ.25/-

சமுதாயத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கரின் அருமை பெருமைகளை விளக்கிடும் கவிதைத் தொகுப்பு. பக்கத்துக்குப் பக்கம் கவிதைகள் அண்ணலின் அரிய பணிகளைப் பறைசாற்றுகின்றன.

—பொ. மறைமலை.

## அறிஞர் அண்ணா ஒரு சகாப்தம்

**ஆசிரியர்:** பூவை அமுதன்

**வெளியீடு:**
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.14/-

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளோடு, அவர் ஆற்றிய அரும்பணிகளும் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. எளிய, இனிய நடை.

## வர்மக் கலையும் வைத்தியமும்

**ஆசிரியர்:**
டாக்டர் சீதாராம் சுப்பிரமணியம்

**வெளியீடு:**
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.


பக்கம்:128 விலை:ரூ.16/-

போர்க் கலைகளில் ஒன்று வர்மக் கலை. சித்தர்களால் உருவாக்கப்பட்ட இதை, எப்படியெல்லாம் மருத்துவ ரீதியாகப் பயன்படுத்தலாம் என்பது படங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது.

# திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில்

# குடிநீர்த்திட்டப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் 4,553 கைப் பம்புகள். இரண்டு இந்திய மார்க் ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. இவற்றுள், நீர் ஆதாரமின்மையால் 229 பம்புகள் நிரந்தரமாகப் பயனற்றவையாக உள்ளன. 258 பம்புகள் வறட்சி காரணமாகப் பயனற்று உள்ளன. பிற பம்புகளில் ஏற்படும் சிறு பழுதுகள் 48 மணி நேரத்திற்குள் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**விசைப் பம்புகள்**

இம்மாவட்டத்தில் 1,059 விசைப் பம்புகள் உள்ளன. இவற்றுள் 138 பம்புகள் நிரந்தரமாகப் பயனற்று உள்ளன. பிற பம்புகளில் ஏற்படும் பழுதுகளான மோட்டார் ரீவைண்டிங், ஸ்டார்ட்டர் ரிப்பேர் போன்றவை ஐந்து நாள்களுக்குள் பழுது நீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை முன்கூட்டியே எதிர்நோக்கி, குடிநீர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்க தற்போது மாவட்டத்தில் நிலவும் குடிநீர்த் தேவைகளைக் கருத்தில் கொண்டு குடிநீர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.301.063 இலட்சம் நிதியுதவி கோரி அரசுக்குச் செயற் குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்தொகையைக் கொண்டு 440 புதிய ஆழ்துளைக் கிணறுகள், 91 பைப் லைன் விரிவாக்கப் பணிகள், 213 ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்தும் பணிகள், 177 மாற்று ஆழ்துளைக் கிணறுகள், 1 திறந்தவெளிக்கிணறு, 43 திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல், பழைய நீர்த்தேக்கங்களைத் தூர் வாருதல், 2 தனி பீடர் லைன் அமைத்தல், 53 பம்பு செட்டுகள் நிறுவுதல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

குடிநீர்த் தேவையை நிறைவேற்ற முதல் தவணையாக அரசு, இம்மாவட்டத்திற்கு ரூ.41 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இத்தொகையைக் கொண்டு ரூ.25 இலட்சம் செலவில் 100 ஆழ்துளைக் கிணறுகள், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஆழ்துளைக் கிணறுகளைத் தூர் வாருதல், ரூ.2 இலட்சம் செலவில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைத்தல், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல், ரூ.5 இலட்சம் செலவில் லாரிகள் மூலம் குடிதண்ணீர் வழங்குதல்,

## மேதோர் சொல்...

• ஒழுக்கம் என்பது சொல்லுகிறபடி நடப்பதும், நடந்தபடி சொல்லுவதுமே ஒழிய தனிப்பட்ட குணங்கள் அல்ல.

—தந்தை பெரியார்

மரம் தனக்காகப் பழுப்பதில்லை
ஆறு தனக்காக ஓடுவதில்லை
சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

—குருநானக்

• முயற்சியை எவனொருவன் எப்பொழுது கைவிடுகிறானோ, அப்பொழுது அவன் சக்தி அற்றவனாக விடுகின்றான்.

• ஒரு நாட்டின் நாகரிகத்தை அளக்கும் கோல் அதன் மக்கள் தொகையோ, நகரங்களின் பரப்பளவோ, செல்வத்தின் மிகுதியோ அல்ல. அதில் பிறக்கும் மனிதரின் சிறந்த குணமே ஆகும்.

—எமர்சன்

ரூ.4 இலட்சம் செலவில் பைப் லைன்கள் விரிவாக்கம், ரூ.3 இலட்சம் செலவில் புதிதாக மாற்றுக் குழாய்கள் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இம்மாவட்டத்தில் வறட்சிக் காலத்தில் வேலை இல்லாத விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ், நீர்ப்பாசனக் குளங்கள், பழுதுபார்த்தல், தூர் வாருதல், கசிவுநீர்க் குட்டைகள் தூர் எடுத்தல், குறுக்கு அணைகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.202.82 இலட்சம் அரசிடம் ஒதுக்கீடு செய்யக் கோரி செயல் குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளது.

**செயல் திட்டம்**

மாவட்ட அளவிலும், கோட்ட அளவிலும், நகராட்சி அளவிலும், பேரூராட்சி அளவிலும், ஊராட்சி ஒன்றியங்கள் அளவிலும் குடிநீர் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கச் செயல் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் 8 முதல் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்படும். மண்டலங்கள் ஒவ்வொன்றும் ஒரு விரிவாக்க அலுவலரின் தலைமையில் ஊர்நல அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி மன்ற உதவியாளர்கள் உதவியுடன் செயல்படும். இவர்கள், கிராமங்களில் உள்ள நீர்நிலை ஆதாரங்களைத் தினமும் சோதனையிட வேண்டும். குடிநீர் விநியோகத்தில் ஏதேனும் தட்டுப்பாடு ஏற்பட்டால் உடனே வட்டார வளர்ச்சி அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். அல்லது அவசரக் காலப் புகார் புத்தகத்தில் பதிந்து வைக்க வேண்டும். புகார்ப் புத்தகத்தில் பொதுமக்களும் குறைகளை எழுதி வைக்கலாம். கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகள் 48 மணி நேரத்திலும், விசைப் பம்புகளில் ஏற்படும் பழுதுகள் ஐந்து நாள்களிலும் சரிபடுத்தப்படும்.

கோட்ட அளவில், வெள்ளிக்கிழமைதோறும், கோட்ட வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவர்கள், பம்ப் மெக்கானிக்குகள், உதவிப் பொறியாளர் (விசைப் பம்பு பராமரிப்பு) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தைச் சார்ந்த நடமாடும் குழுமம் (Mobile Squad) ஆகியோர் குடிநீர் விநியோகம் பற்றி ஆய்வு செய்வர். தவிரவும், கோட்ட வளர்ச்சி அலுவலரும் ஒரு புகார்ப் புத்தகம் பராமரித்து குடிநீர் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணிப்பார்.

பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில், செயல் அலுவலர்கள், புகார் புத்தகம் பராமரித்தும், மாலை நேரங்களில் தெருக் குழாய்களைப் புலத் தணிக்கை செய்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளும் குடிநீர் விநியோகப் பணிகளைக் கவனித்து வருவார். மாவட்டப் பேரூராட்சிகளின் அலுவலர் குடிநீர் விநியோகப் பணிகளைக் கண்காணித்து வருவார்.

நகராட்சிகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நகராட்சியும், நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, நகராட்சி ஆணையர், சுகாதார அலுவலர், நகராட்சிப் பொறியாளர், நகர்ப்புறத் திட்ட அலுவலர் ஆகியோரின் தலைமையின்கீழ் குடிநீர் விநியோகப் பணிகள் கண்காணிக்கப்படும். அவர்களும் புகார்ப் புத்தகங்களைப் பராமரித்து வருவார்கள்.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் குடிநீர் விநியோகப் பணிகள் பற்றிய அறிக்கை அளிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவற்றை ஆய்வு செய்வார்.

குடிநீர் விநியோகப் பணிகளில் கண்காணிப்பு முறையை மேலும் நெறிப்படுத்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பேரூராட்சிகளுக்கும் மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் விரிவான சுற்றுப்பயணம் செய்து, குடிநீர் விநியோகப் பணிகளைக் கண்காணிப்பார்கள்.

**எம். பிச்சையா**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்**

# வாழ்வு தரும் வசம்பு

- டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

பல ஆண்டுகளாகவே நமது முன்னோர்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் வீட்டில் உள்ளவர்களுக்கு வேண்டிய மருத்துவத்தைத் தாங்களே செய்து வந்துள்ளனர். 'பாட்டி வைத்தியம்' என்பது இப்படிப்பட்ட குடும்ப வைத்திய முறையேயாகும். இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய நம் முன்னோர், இயற்கையில் கிடைக்கும் மூலிகைத் தாவர வர்க்கங்களின் பயனை அறிந்து, அவற்றை உடல் பிணிகளுக்கான மருந்துகளாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இப்படிப்பட்ட மூலிகைகளில் வசம்பும் ஒன்று.

வசம்பு இந்தியா, பர்மா, வட அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் விளையக்கூடிய ஒரு விதப் பூண்டு இனம். இதன் இலை பசுமையான நீண்ட ஓலைகளாகக் காணப்படுகிறது. இதன் தண்டின் மேல் சற்று சாம்பல் படிந்த நிறம் இருக்கும். இதன் வேரைத்தான் 'வசம்பு' என்கிறார்கள். வசம்பிற்கென்று ஒருவிதத் தனி மணமுண்டு. இது வாணிப ரீதியிலும் பயிர் செய்யப்படுகிறது.

**தீரும் நோய்கள்**

இரத்த பித்தம், இரணப்புண்கள், வாய்நாற்றம், சூலை, கால் ஆணி, முப்பிணி, இருமல், ஈரல் நோய்கள், யானைக் கால், வயிற்றில் காணப்படும் புழு எல்லாவிதமான நஞ்சுகள், வாயு, சொறி-சிறங்கு, செரியாமை, பேதி, வயிற்றுப் பொருமல் போன்ற நோய்களைப் போக்கும் ஆற்றல் வசம்பிற்கு உண்டு.

குழந்தைகளுக்கு வரும் இருமல், சளி, காய்ச்சல், வயிற்று நோய் அகல, வசம்புடன் அதிமதுரத்தைச் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். காய்ச்சியவுடன் இறக்கி வடிகட்டி, அந்த நீரைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

தொண்டைக் கம்மல், இருமல் நீங்க வசம்புத் துண்டைச் சிறிதளவு வாயில் போட்டுச் சுவைத்தால் வாயில் நீர் பெருகும். அப்போது ஒருவித அனல் எழும்பும். இதனால் தொண்டைக் கம்மல், இருமல் ஆகியவை நீங்கும்.

பசியின்மை, செரியாமை, வயிற்றுப் பொருமல் ஆகியவற்றிற்கு இரண்டு தம்ளர் நீரை நன்றாகக் காய்ச்சி, அது கொதிக்கின்றபோது சிறிது வசம்பு போட்டு ஊற வைத்து, பிறகு வடிகட்டி, அந்த நீரைப் பருகவேண்டும். அத்துடன் குழந்தைகளுக்கு உண்டாகும் பேதி, காய்ச்சல் ஆகியவற்றையும் இது தடுக்கும்.

நாள்பட்ட கீல்வாத நோய்களுக்கு-காசுக்கட்டியுடன் சிறிது வசம்பும் சேர்த்து நீர்விட்டு அரைத்துப் பற்றுப்போட நாளடைவில் கீழ்வாத நோய் நீங்கும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் மாந்தம், இழுப்பு, வயிற்று நோய் ஆகியவற்றிற்கு, வசம்புத்துண்டு ஒன்றை நெருப்பில் சுட்டு எடுத்தால் கரியாகும். இந்தக் கரித்தூளுடன் தேன் கலந்து குழந்தையின் நாக்கில் தடவ வேண்டும்.

வயிற்றுப் பொருமல் நீங்க-சிறிதளவு வசம்பை எடுத்துச் சுட்டுக் கரியாக்கி, அதனுடன் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் (ஆமணக்கு எண்ணெய்) ஆக மூன்று எண்ணெய்களையும் சிறிய அளவில் கலந்து குழைத்து அடிவயிற்றில் பூச, வயிற்றுப் பொருமல் நீங்கும்.

விஷக் காற்று ஏற்பட்டால், விஷக் காற்றால் நோய்கள் பரவும்; அக்காலத்தில் கொஞ்சம் வசம்பை எடுத்து வாயில் போட்டு மெல்லுவது உடலுக்கு நல்லது.

செரியாமை, உடல் வலிகள், மந்தம், மந்தக் காய்ச்சல், வயிற்றுப் பொருமல் ஆகியவற்றிற்கு வசம்பு, பெருங்காயம், அதிவிடயம், திப்பிலி, மிளகு, சுக்கு, கடுக்காய்த்தூள், இந்துப்பு ஆகியவற்றை நம் உபயோகத்திற்குத் தகுந்தாற்போல் வாங்கி, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, அம்மியில் தட்டித் தூள் செய்து எடுத்துக் கொள்ளவும். நமக்கு வேண்டிய போது அத்தூளில் சிறிது எடுத்து வாயில் போட்டுத் தண்ணீர் அருந்த நாளடைவில் நோய்கள் நீங்கி நலம்பெறும்.

குழந்தைகளின் வயிற்று நோய்க்கு வசம்பைச் சுட்டுக் கரியாக்கி, தாய்ப் பாலில் இழைத்து நாவில் தடவினால் குழந்தைகளின் வயிற்றுவலி தீரும்.

நாள்பட்ட வெள்ளை நீங்க, வெள்ளைக் குங்கிலியம் 18 கிராம், காசுக்கட்டி 5 கிராம், மேல்தோல் நீக்கிய பூண்டு 5 கிராம், வசம்பு 5 கிராம் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து அம்மியில் வைத்து இடித்து, அரைப் படி நல்லெண்ணெயில் போட்டுச் சூரியபுடம் வைத்து வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் 15 நாள் சாப்பிட நாள்பட்ட வெள்ளை நீங்கும். குறிப்பு: பத்தியம் - ஆவின்பால், நெய், தயிர் சேர்க்கவும்.

திக்குவாய் குணமாக, சிறிது வசம்பை எடுத்துச் சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்துத் தட்டித் தூள் செய்து, சிறிது தூளைத் தேனில் குழைத்து, அதிகாலையில் தினமும் உட்கொண்டு வந்தால், திக்குவாய் குணமடையும். குறிப்பு: தொடர்ந்து ஒரு மண்டலம் (40 நாட்கள்) சாப்பிட்டு வந்தால் குணமடைவது நிச்சயம்.

கால் ஆணி மறைய, மஞ்சள் 5 கிராம், வசம்பு 5 கிராம், இரண்டையும் அம்மியில் வைத்து, கைப்பிடியளவு மருதாணி (மருதோன்றி) இலையையும் சேர்த்து நீர்விட்டு, மை போல அரைத்து, கால் ஆணி உள்ள இத்தில் அடைபோலக் கனமாக வைத்து, மேலே ஒரு வெற்றிலையை வைத்துத் துணியினால் இறுகக் கட்டிவிட வேண்டும். படுக்கும்முன் இதைச் செய்ய வேண்டும். இதே மாதிரி தொடர்ந்து அரை மண்டலம் (20 நாட்கள்) வரை கட்டி வந்தால் கால் ஆணி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். ஆனால், இதைத் தினமும் புதியதாகவே அரைத்துக் கட்டவேண்டும்.

காலரா பேதி நிற்க, வசம்பு 10 கிராம் எடுத்து சுத்தம் பார்த்து ஒரு



பாத்திரத்தில் போட்டு அதில் போதுமான அளவு தண்ணீர் ஊற்றி நன்கு காய்ச்சி ஊறவைத்து எடுத்து வடிகட்டி அருந்த காலரா என்ற தொத்து நோய் வராமல் தடுக்கலாம். மேலும், காலரா நோய் கண்டவர்கள் 15 நிமிடத்திற்கு ஒரு முறை இவ்வாறு அருந்திவரும் பட்சத்தில் பேதி நின்று நலம் காணும்.

மேலும், இதே செய்முறையை முறைக் காய்ச்சல், துர்மலம், வயிற்றுப் பொருமல், அஜீரணம், வாதநோய்கள், சொறி-சிரங்கு ஆகியவற்றிற்கும் தரலாம். சிறுவர்களுக்கு இதில் பாதி அளவு தரவேண்டும். இவ்வாறு செய்தால் இந்த நோய்கள் நீங்கி நலம் பெறலாம்.

நரம்புத் தளர்ச்சி மற்றும் வாய்நாற்றம் நீங்க, வசம்புத் துண்டை எடுத்துத் தூளாக்கிப் பொடி செய்து வைத்துக் கொண்டு 3 கிராம் அளவு எடுத்து வாயில் போட்டுச் சுவைத்து வெந்நீர் அருந்த நாளடைவில் நரம்புத் தளர்ச்சி மற்றும் வாய் நாற்றம் ஆகியவை நீங்கி நலம் பெறும்.

முளை மூலத்திற்கு வசம்பு 10 கிராம், பிரதமண்டிக் கிழங்கு 10 கிராம், மிளகு 5 கிராம், இவற்றை அம்மியில் வைத்துத் தூள் செய்து ஒரு புட்டியில் சேமித்து வைத்துக் கொள்ளவும். காலை- மாலை, திரிகடிப்பிரமாணம் - அதாவது (மூன்று விரல்களால் சேர்த்து எடுக்கும் அளவு) எடுத்து வாயில் போட்டு நீர் அருந்த, நாளடைவில் முளை மூலம் கரைந்து நலமாகும். குறிப்பு: புளி, கடுகு, நல்லெண்ணெய் ஆகாது. உப்பு வறுத்துச் சேர்க்கவும். புளி சுட்டுச் சேர்க்கவும்.

நாய் ஈ காதில் புகுந்தால் அது சாவதற்கு மருந்து வசம்பு, தொட்டாற் சுருங்கி, வெங்காயம், மூன்றை நசுக்கி காதில் பிழிந்தால் காதில் புகுந்த ஈ சாகும்.

நமைச்சல், சொறி நீங்க, இந்துப்பு 35 கிராம், எடுத்துத் தூள் செய்து வசம்பு 9 கிராம் தூள் செய்து, இரண்டையும் கலந்து வெண்ணெய் போட்டுக் குழைத்துக் காலையில் உடம்பு முழுவதும் பூசி, பகலில் சியக்காய் தேய்த்துக் குளித்து வந்தால் நாளடைவில் நமைச்சல், தடிப்பு, சொறி ஆகியவை நீங்கும்.

வசம்புக்கென ஒருவித நறுமணம் உண்டு. உடலிலுள்ள தொற்றுக் கிருமிகளை அழித்து, உடலில் தங்கிய நஞ்சுகளையும் முறிக்கும் ஆற்றல் வசம்பிற்கு உண்டு. வசம்பை ஆங்கிலத்தில் Glucoside Aeorinஎன்பார்கள். வசம்பு ஒரு குழந்தை ஸ்பெஷலிஸ்ட் மூலிகை. தமிழகத்தின் பல வீடுகளில் வசம்பு வளர்க்கப்படுவதைக் காணலாம். வசம்பு உண்மையில் ஒரு வாழ்வு தரும் மூலிகையே ஆகும்!

# வெப்பம் தணிக்கும் வேப்ப மரம்!

வெப்பம் தணிக்கும் வேப்ப மரம். ஆம். இது அம்மை நோய் தீர்க்கும் மரம்.

வேப்ப மரம் எக்காலத்திலும் பசுமையாகக் காட்சியளிக்க கூடிய ஒரு சிறந்த மரம். இது பொதுவாக 14 முதல் 16 மீட்டர் உயரமும் 3 முதல் 4 மீட்டர் சுற்றளவும் வளரக்கூடிய மரமாகும். இதன் இலைகள் மார்ச்சு, ஏப்ரலில் உதிரத் தொடங்கும். இம்மரத்தின் மூலம் ஊடுருவி சுத்தப்படுத்தப்பட்டு வரும் காற்று பல நோய்களை தீர்க்கக் கூடியதாகும். இது ஓர் நல்ல நிழல் கொடுக்கும் மரம் ஆகும்.

**வளரும் இடம்:**

தென்னகத்தில் சாதாரணமாக எல்லா இடங்களிலும் வளர்கின்றது. குளிர்ப் பிரதேசங்களில் இது வளராது. கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் வரை உயரமுள்ள இடங்களில் எத்தகைய வெட்ப நிலையிலும் எல்லாவித மண்ணிலும் வளரக் கூடியது. எனினும் சிறப்பாக களி மண்ணிலும் கரிசல் நிலங்களிலும் நன்கு வளரும். வறண்ட ஆழம் குறைந்த கற்கள் நிறைந்த மண்ணிலும், சுக்கான் மண்ணிலும், மற்ற எந்த மரங்களையும் விட பசுமையாக வளரக் கூடியது. நீர் தேங்கி இருக்கும் இடங்கள் இதற்கு உகந்ததல்ல. ஆண்டுக்கு 450 மி. மீட்டரிலிருந்து 1,100 மி.மீட்டர் வரை மழை கிடைக்கும் இடங்களில் இம்மரம் வளரக்கூடியது.

**வளர்க்கும் இடம்:**

வரப்பு ஒரங்களிலும், கிணற்று மேடுகளிலும், வீட்டு வளாகத்திலும், தரிசு நிலங்களிலும், சாலை ஓரங்களிலும் மேய்ச்சல் தரைகளிலும் இதை சுலபமாக வளர்க்கலாம். இதை விவசாயப் பயிர்களுடன் நட்டுப் பயன் பெறலாம்.

**விதை சேகரம், மரம் வளர்ப்பு முறை:**

ஜுன் முதல் ஆகஸ்டு வரை பழங்கள் கிடைக்கும். பின்னர் தரமான மரங்களிலிருந்து விதைகளைச் சேகரித்து 15 தினங்களுக்குள் நேரடியாக விதைகளை ஊன்றியோ அல்லது நாற்றங்காலில் நாற்று விட்டு, கன்றுகளாகவோ நடலாம். பாலிதீன் பைகளில் விதைகள் ஊன்றியும் கன்றுகள் வளர்க்கலாம். 3 மீட்டர் இடைவெளிகளில் 30 செ.மீ. கன சதுரக் குழிகள் எடுத்து 15 நாட்கள் ஆறப்போட்டு ஓரிரண்டு மழை கிடைத்தவுடன் ''ஆடிப்பட்டம் தேடி விதை'' என்னும் பழமொழிக்கு இணங்க கன்றுகளை நடுவது சிறப்பானது.

**பயன்கள்:**

இம்மரத்தின் இலைகள், பூக்கள், பட்டைகள் நோய் தீர்க்கும் இயற்கை மருந்தாகும். இம்மரத்தை நோய் தீர்க்கும் மரம் என கூறலாம். இம்மரம் கட்டட வேலைகளுக்கும் மரச்சாமான்கள் செய்யவும், வேளாண்மைக் கருவிகள் செய்யவும் பயன்படுகின்றது. இம்மரத்தின் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய், சோப்பு மற்றும் பற்பசை செய்யவும் பயன்படுகின்றது. சமீப காலங்களில் வேப்பெண்ணெய் கலந்து பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயப் பயிர்ப் பாதுகாப்புக்கும் பயன்படுத்தப்படுகிறது.

## மாணவர் பக்கம்

# அறிவுச்சுடர்

### தொலைக்காட்சி

நாம் நாள்தோறும் தொலைக்காட்சியை ரசித்துப் பார்க்கிறோம். அது எப்படி நம் வீட்டிலுள்ள தொலைக் காட்சிப் பெட்டியில் தெரிகிறது?

தொலைக்காட்சி நிலையத்தினுள் ஒலி, ஒளிபரப்பப் படும் அலைகள் காற்றிலுள்ள ஈதர் மூலம் வந்து நம் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டியுடன் இணைக்கப் பட்டிருக்கும் ஏரியலில் மோதுகிறது. அவை ஈர்க்கப்பட்டு, தொலைக்காட்சிப்பெட்டியில் ஒளியைக் காண்கிறோம். ஒலியைக் கேட்கிறோம்.

### பூமி அதிர்ச்சி

இப்பொழுதெல்லாம் உலகின் பல பாகங்களில் பூமி அதிர்ச்சி ஏற்படுவதைக் காண்கிறோம். ஏன், சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் கூட சிறு பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அறிகிறோம். அது எதனால் ஏற்படுகிறது?

பூமிக்கு அடியில் ஏற்படும் சில நில மாறுதல்கள் காரணமாகப் பக்கவாட்டிலும், செங்குத்தாகவும் நெகிழ்வுகள் ஏற்படுகின்றன. இதனால் பூமி இலேசாக உள்ள இடத்தை உடைத்துக் கொண்டு மண் சூடான திரவமாக வெளிவருகின்றது. சில சமயங்களில் திரவம் வெளி வராமல் நில நடுக்கம் ஏற்படும். இதையே பூமி அதிர்ச்சி என்கிறோம். இது சில நொடிகள் இருந்தாலும் ஏற்படும் விளைவு மிகப் பயங்கரமானது. பூமி அதிர்ச்சி, ஜப்பான், இந்தோனேசியா, துருக்கி, இத்தாலி போன்ற நாடுகளில் அதிகம் ஏற்படுகிறது.

### இந்தியாவில் முக்கிய தாதுப்பொருட்களும் அவைகள் கிடைக்கும் இடங்களும்

| | |
|---|---|
| அலுமினியம், | |
| தோரியம் | - கேரளா |
| ஆஸ்பெஸ்டாஸ் | - மைசூர் |
| பாக்ஸைட் | - பீகார், மகாராஷ்டிரம் |
| துத்தநாகம் | - இராஜஸ்தான் |
| யுரேனியம் | - பீகார் |
| நைட்ரேட் | - பீகார், உத்திரப் பிரதேசம் |
| மைகா | - பீகார், தமிழ்நாடு |
| வெள்ளி | - மைசூர், பீகார், தமிழ்நாடு |
| சலவைக்கல் | - ஜெய்ப்பூர் |
| மாங்கனீசு | - மத்தியப் பிரதேசம் |
| லிக்னைட் | - நெய்வேலி (தமிழ்நாடு) |
| தாமிரம் | - பீகார், இராஜஸ்தான் |
| சீனக்களிமண் | - இராஜஸ்தான், பீகார் |
| சிமெண்ட் | - மத்தியபிரதேசம், இராஜஸ்தான் |

— தொகுப்பு: ஸ்வீட்லின் பிரபாகரன்




சாலைகள் ஓரம் மரம் வைப்போம்!
சாலவும் போற்றி அதைக்காப்போம்!
ஆலைகள் சுற்றி மரம் நடுவோம்
ஆர்வமாய்க் காத்து வளர்த்திடுவோம்!
மேலைய நாடும் வியப்புறவே
மேவியே மரங்களைக் காத்திடுவோம்!
சோலைகள் சூழும் நாடாக
சோதரரேநாம் மரம் வளர்ப்போம்

காற்றிலும் மாசுகள் சேராது
காட்டிலும் விலங்கினம் அழியாது
தூற்றிடும் காற்றால் மண்வளமும்
தூரப்பறந்தும் போகாது!
ஆற்றிலும் நீர்வளம் குறையாது
அணைகளில் வறட்சி நிலவாது!
மாற்றமும் மண்மேல் நிகழாது
மணல்வெளி, அரிப்பும் தோன்றாது!

ஆலைப் புகையும் தெளிவடையும்
ஆகாயத்தும் குளிர் நிலவும்
நூலை நூற்கும் ஆலையிலும்
நூதன நச்சும் பரவாது!
வேலைப் பஞ்சம் ஒழிந்து விடும்!
வேண்டிய மழையும் பொழிந்துவிடும்!
காலை மாலை எப்போதும்
கார்முகில் வானில் தவழ்ந்தோடும்!

### ரயில் பயணம்

• இந்திய மக்கள் தொகையில் 1.2 சதவீத மக்கள் நாள்தோறும் ரயில் பயணம் செய்கின்றனர். சரக்கு, பயணியர் போக்குவரத்து ஆண்டு தோறும் ஐந்து சதவிகிதம் அதிகரித்து வருகிறது. 63,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு மீட்டர் கேஜ் மற்றும் குறுகிய ரயில்பாதையில் 45 சதவிகிதத்தினை அகல ரயில்பாதையாக மாற்றத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதில் 6,000 கிலோ மீட்டர் நீளம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அகல ரயில்பாதையாக மாற்றப்படும். ஆண்டுதோறும் 700 கிலோ மீட்டர் இருப்புப்பாதை மின்மயமாக்கப்பட்டு வருகிறது. 3,000 கிலோ மீட்டர் நீளத்துக்கு ரயில் பாதை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.


வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்
VIJAY
COMPLEX
N P K
19-19-19
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
COMPLEX
N P K
17-17-17
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
UREA-N46%
MADRAS FERTILIZERS LTD.
VIJAY
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068
தேசிய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.
HTA 7343

விமர்சனம்:

# வெளிச்சம்

நேஷனல் தியேட்டர்சின் 'வெளிச்சம்' என்னும் மதுவிலக்குப் பிரச்சார நாடகம், சென்னை மியூசியம் அகாடமியில் அரங்கேறியது.

குடியின் கொடுமையை மையமாக வைத்துக் கதை சித்திரிக்கப்பட்டிருக்கிறது. 'வேதம் புதிது' கண்ணன் இதன் கதை வசனம் பாடல்களை எழுதியுள்ளார். முதல் முறையாக நாடகத்துக்கு இசையமைத்துள்ளார் குன்னக்குடி வைத்தியநாதன். நடன அமைப்பு இந்திரா ராஜன். நாடகத்தை இயக்கி, தயாரித்திருப்பவர், நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர்.

வாத்தியார் ஒருவரின் மகன் பெருங்குடிகாரன். அவன் மனைவி அவனைத் திருத்த முற்படுகிறாள். அந்த ஊரில் உள்ள அயோக்கியன் ஒருவன் கள்ளச்சாராயம் காய்ச்சி ஊர் மக்களையே கெடுக்கிறான். இந்த இரு திறத்தாருக்கும் நடக்கும் மனப் போராட்டங்களை உருவகப்படுத்தும் கதையே இந்நாடகம்.

முதல் காட்சியில் இடம் பெறும் 'கும்மியடி பெண்ணே கும்மியடி' எனும் குழு நடனம் நாடகத்துக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சும் காட்சி, தத்ரூபமாகக் காட்டப்பட்டிருக்கிறது. சாராயத்தைக் குடித்துவிட்டு வீதியிலே வீழ்ந்து கிடக்கும் காட்சியும், அதையொட்டிய பாடலும் பொருத்தமாக உள்ளன.

இடையே இந்திய அன்னை பேசுகின்ற இனிய குரலும், அதையொட்டிய காட்சியமைப்புகளும் அருமை.



இந்நாடகத்தில் வரும் வாத்தியார், ஒரு நேர்மையான பாத்திரம். நடிப்பில் அதோடு ஒன்றி விடுகிறார். 'அப்பன் காந்தியவாதி... மகன் பிராந்தியவாதி...' என்று தந்தை (வாத்தியார்) மகனிடம் பேசும்போது அவரது ஏக்கம் தொனிக்கிறது. நல்ல நடிப்பு. அவரது மகனாக வரும் பெருங்குடியன், தோற்றத்திலும் சரி, வசன அமைப்பிலும் சரி அனைவரையும் கவர்ந்து விடுகிறார். அவரது மனைவியாக வருபவரும் - முதலில் வங்கி அலுவலராகவும், பிறகு காவல்துறை அதிகாரியாகவும் வந்து அசத்தி விடுகிறார்.

பரம்பரை நகையை மருமகளிடம் கொடுக்க, அதைச் சமயம் பார்த்து குடிகாரக் கணவன் திருடிச் செல்ல 'மோசம் பண்ணிட்டானே! என்று தந்தை (வாத்தியார்) புலம்ப... இந்த ஒரு காட்சி போதும் குடிகாரர்களின் மனத்தை மாற்ற!

'மகன் குடியின் பழகத்திலிருந்து விடுபட வேண்டும். அவன் மற்றவர்களைப் போல நல்லவனாக வாழ வேண்டும். அவன் மனம் திருந்த வேண்டும்' என்பதில் தந்தைக்கு இருக்கும் அதே உறுதி, அவன் மனைவிக்கும் இருப்பதைக் கதையோட்டத்திலே காண முடிகிறது. அந்தத் தளராத உறுதியே அவர்களது தன்னம்பிக்கைக்கு உரமூட்டுகிறது.

இடையிலே வரும் நாட்டாண்மைக்காரர், வங்கி மேலதிகாரி போன்றவர்கள் நடிப்பில் சோடை போகவில்லை.

'குடிகாரனுக்கு மனைவியாக இருப்பதே ஒரு கொடுமைதான்' என்பதைச் சொல்லாமல் சொல்ல வைக்கிறது அந்தப் (குடிகாரனின் மனைவி) பாத்திரம்.



அதற்கு மெருகேற்றும் வகையில் அவர் திறம்பட நடித்திருக்கிறார்.

குடிகாரனின் மனைவி வங்கி அலுவலராகப் பணியில் சேர்ந்து பிறகு படித்து, காவல்துறை அலுவலராகப் பதிவியேற்றபின், 'அம்மா! நீ மதுவை ஒழிக்க உறுதி எடுத்துக்கணும்!' என்று மாமனார் ஆணையிட' மருமகள் அதை ஒரு சவாலாக ஏற்று வீறு நடைபோடும் போதும்-



அடிபட்ட மகனுக்கு ரத்தம் செலுத்த நீ 48 மணி நேரம் குடிக்காமல் இருக்க வேண்டும் என்று தந்தை மன்றாடும் போதும்-

கட்டிய மனைவி காலைப் பிடித்துக் கொண்டு, குடிக்க வேண்டாம் என்று கதறிக் கதறி அழுகிற போதும்-

வாத்தியார், அடிபட்டு மயங்கிக் கிடக்கும் சிறுவனைக் கையிலேந்தி, தன் மகன் காலிலே கிடத்தி, மகன் காலையே பிடித்துக் கண்ணீர் சிந்துகின்ற காட்சியின் போதும் - நம் இதயம் கனக்கின்றது; இமைகள் நனைகின்றன.

இறுதியில் - தந்தையின் மனஉறுதி தாரத்தின் தன்னம்பிக்கை வெற்றி பெறுகிறது. ஆம், அவள் கணவனின் கண்கள் திறக்கின்றன. அவன் தன் தவறை உணர்கிறான்.

தன் தாயின் படத்தின் முன்னே நின்று, 'இனிமே நான் குடிக்கமாட்டேன்!' என்று உறுதி ஏற்கிறான். அந்த உறுதிமொழியிலே, அந்தக் குடும்பத்தினரின் விழிகளிலே மட்டுமல்ல, நம் விழிகளிலேயும் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கிறது!

கருத்துக்கினிய காட்சி அமைப்புகள், கண்ணுக்கு இனிய ஒளி அமைப்புகள், காதுக்கினிய இசையமைப்பு எல்லாவற்றுக்கும் மேலாக நாடக இயக்கத்தோடு இழைந்த நாடக அமைப்பு - இவையனைத்தும் பாமர மக்களின் நெஞ்சிலே பதியத்தக்க வகையிலே இருப்பது இந்நாடகத்தின் தனிச்சிறப்பு!

மதுவின் மயக்கத்திலே, மனைவி மக்களை உதறித் தள்ளி இருளிலே மூழ்கிக் கிடக்கும் எண்ணற்ற ஏழை எளியவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது, தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சார மேடை நாடகமான 'வெளிச்சம்'. — பி.வி. கிரி

பிரச்சார நாடகத்தை 160 காட்சிகளுக்குக் குறையாமல் தமிழ்நாட்டில் நடத்த வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றுகையில், 'முதன்முதலில், மதுவிலக்குக் கோப்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையொப்பமிட்டு ஆட்சியைத் தொடங்கினார்' என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி 'வெளிச்சம்' மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். உரைக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த மதுவிலக்குப் பிரச் சார நாடகக் கலைஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

விழா முடிவில் தமிழக அரசின் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

'வெளிச்சம்' மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறுதி வரை பார்த்தார்.

விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு க. பொன்னுசாமி உட்பட, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசின், மதுவிலக்குப் பிரச்சார மேடை நாடகமான, 'வெளிச்சம்' நாடகத்தின் அரங்கேற்ற விழாவில் கலந்துகொண்டு, அதைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞராகத் திகழும், 'நாடகக் காவலர்' திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள், இந்த நாடகத்தினை உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். அவரது நாடகங்களின் சிறப்பையும், பெருமையையும், தமிழக மக்கள் பல ஆண்டுக் காலமாகவே நன்கு அறிவார்கள். மக்களை விரைந்து கவர்ந்திழுக்கும் கவர்ச்சி பெற்ற திரைப்படங்களுக்கு நிகராக, நாடகங்களை நோக்கி, மக்களை ஈர்த்து வரவழைத்த ஆற்றல் பெற்றவர் அவர்.

**மாபெரும் சாதனை**

விஞ்ஞான முன்னேற்றம் அடையாத காலங்களில், மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் மாபெரும் சாதனங்களில், நாடகம் தலையாயதாகக் கருதப்பட்டதோடு, கூத்து, கும்மி, ஒயிலாட்டம் போன்ற நாடோடிக் கலைகளின் பரிணாம வளர்ச்சியாகவும், நிறைவு பெற்ற கலை, நாடகமாகும். நாடகக் கலை மட்டும் அழிந்து போயிருந்தால், இன்றைய தினம், கிராமியக் கலைகளைத் தேடிப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்பது, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.

அப்படிப்பட்ட நாடகக் கலையே, இப்போது அழிந்து கொண்டு வருகிற பின்னணிக்குத்

# ஒலி-ஒளி மூலமும் மதுவிலக்குப் பிரச்சாரம்!

நாடகம், திரைப்படம் ஆகிய வற்றின் மூலம் தற்போது மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படும் மது விலக்குப் பிரச்சாரத்தை ஒலி-ஒளிப் பேழைகளின் (ஆடியோ-வீடியோ கேசட்டுகள்) மூலமும் தொடரு வோம்.

முதல் கட்டமாக, தற்போது பிரச் சார நாடகம் அரங்கேறுகிறது. காந்தி அடிகள் பிறந்த தினத்தன்று பிரச் சாரத் திரைப்படம் வெளியாகும். அதன்பிறகு இசைப் பாடல்கள், நிகழ்ச்சிகள் அடங்கிய ஒலி-ஒளிப் பேழைகளின் மூலமும் பிரச்சாரம் தொடரும்.

- 'வெளிச்சம்' நாடக அரங்கேற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர்.

தள்ளப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம், High Technique பயன்படுத்தப்படும் நவீன சினிமா, டி.வி. போன்ற சாதனங்களின் வருகைதான் என்றால், அது மிகையாகாது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி அக்கலைகள் வெற்றிபெற்று வந்தாலும், தத்ரூபமாகப் பார்க்கும்போதும், நேருக்கு நேராக நாடகக் கலையை ரசிக்கும்போதும் தான், நாடகக் கலைக்கு இவைகளையெல்லாம் மீறி, இயற்கையாகவே உள்ள உயிரோட்டம், நமக்குத் தெரிய வரும்.

**பாடம் உண்டு படிப்பினை உண்டு!**

ஒரு காட்சியை, நிகழ்ச்சியை, திரைப்படம் எடுக்கும்போது, சரியாக அமையாவிடில், மீண்டும் எடுத்து நிறைவு செய்யலாம். ஆனால், நாடகத்தைப் பொறுத்தவரையில், மக்களுக்கு முன்னே தோன்றும்போது, ஒத்திகைக்கோ, திரும்பத்திரும்ப ஓடிவந்து நடிப்பதற்கோ சந்தர்ப்பம் இருக்காது. ஆகவே, நாடகம், ஒரு நடிகருக்கு மக்களுக்கு முன்னே தரப்பட்ட ஒரே சந்தர்ப்பத்தில், தனது திறமையைப் பதிவு செய்து, பாராட்டுப் பெறும் பழங்கலையாகும் என்பதே, சரியான விளக்கமாகும். அப்படிப்பட்ட திறமை மிக்க நடிகர்களை உருவாக்கி, மக்களுக்குச் சொல்லவேண்டிய கருத்துக்களை, எடுப்பான முறையில் எடுத்துச் சொல்லும் திறமை, திரு ஆர்.எஸ். மனோகருக்கு இருந்ததால் தான், இந்த நாடகத்தை உருவாக்கும் பெரிய பொறுப்பு, அவருக்கு வழங்கப்பட்டது. அவர் புராண இதிகாச நாடகங்களை நடத்தும் போது, நம்மை எல்லாம் அக்காலத்திற்கே அழைத்துச் சென்றுவிடுவார். கற்கால நிகழ்ச்சியைத் தற்காலத்திற்குக் கொண்டுவர அவரால் முடியும்.

சுருக்கமாகச் சொன்னால், அவரது நாடகத்தில் பாடம் உண்டு, படிப்பினை உண்டு, வேடிக்கை உண்டு, விஷயம் உண்டு, இனிமை உண்டு, இன்பம் உண்டு - எல்லாமே உண்டு.

எனவேதான் 'அரசுக்கு, அதுவும் மக்களுக்குப் பாடஞ்சொல்லுகிற மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு என, ஒரு நாடகத்தை ஆக்கித் தாருங்கள்; அனைத்து மக்களையும் கவரும் அந்த சமுதாயப் பணியில், உங்களை உடனே ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்', எனக் கேட்டுக் கொண்டேன். அந்தக் கோரிக்கையின் நிறைவேற்றம் தான், இன்றைய 'வெளிச்சம்' நாடகத்தின் அரங்கேற்றம். எனது வேண்டுகோளை ஏற்று, இந்த நாடகத்தை உருவாக்குவதில் அவர் காட்டிய ஈடுபாடு, எடுத்துக் கொண்ட முயற்சி, அவரது உழைப்பு, உத்வேகம், என்னை வெகுவாகக் கவர்ந்தது. திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள 'வெளிச்சம்', ஓர் வெற்றிகரமான நாடகமாக அமையும் என்பதில், எனக்கு எவ்வித ஐயப்பாடும் கிடையாது.

**மது அரக்கனை ஒழிக்க...**

எங்கள் அரசு, தமிழக மக்களின் பேராதரவுடன் ஆட்சிப்பொறுப்பு ஏற்றவுடன் ஏழை எளிய தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கும் முகத்தான், மலிவுவிலை சாராயத்தை அறவே ஒழித்தது. அதிரடி நடவடிக்கைகள் பல மேற்கொண்டு, கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், விற்பனை செய்வதையும், வெகுவாகத் தடுத்தோம். இச் செயல்களில் ஈடுபட்டோரின் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுத்தோம். இப்பணியை இன்றும் தீவிரமாகத் தொடர்கிறோம். ஒரு அரக்கனைக் கொல்லுவதற்கு, பல்வேறு வியூகங்கள் வகுப்பது போல, இந்த மது அரக்கனை ஒழிக்க, மேலும் பல்வேறு முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

இருப்பினும், இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்றால், குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளவர்கள், தாங்களாகவே முன் வந்து, இந்தத் தீய பழக்கத்தைக் கைவிட வேண்டும். குடியால் ஆட்கொள்ளப்பட்டவர்களின் மன நிலையே, மாறுபட்டதாக உள்ளது. குடிப்பழக்கத்தால் ஏற்படும் அவமானம், அவர்களிடம் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. அரசு சட்ட திட்டங்களினால் இதனைக் கட்டுப்படுத்தினாலும், உற்றார் உறவினர்கள் எடுத்துக் கூறினாலும், இந்தத் தீய பழக்கத்தைக் கைவிட, அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

எனவே, உண்மையிலேயே ஒருவர் குடிப் பழக்கத்தைக் கைவிட வேண்டுமென்றால், அதற்கு மனமாற்றம் தேவை. மற்றவர்களின் அறிவுரைகளாகவோ, போதனைகளாகவோ இல்லாமல், அவர்களே தங்களின் நிலையை அறிந்து, உணர்ந்து, ஒரு முடிவிற்கு வந்தால்தான், இத்தீய குடிப் பழக்கத்தை மறக்க முடியும். கைவிட முடியும் என்பது, கண்டறியப்பட்ட உண்மை. அந்த நிலையை மக்களிடையே உருவாக்க, அதற்குரிய

சூழ்நிலையை உண்டுபண்ண, மக்களின் மனதைத் தொடும், அவர்களது மனநிலையை மாற்றியமைக்கும் சக்தி படைத்த மக்கள் தொடர்புச் சாதனங்களை, சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்ற முயற்சியின் விளைவுதான், இப்போது தயாரிக்கப் பட்டுள்ள நாடகம்.

**நீங்க நல்லா இருக்கணும்!**

தற்போது திரைப்படங்களும், நாடகங்களும், இசை நிகழ்ச்சிகளும், பொதுமக்களின் மனதைத் தொடும் மகத்தான சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன. இப்படி, சக்தி படைத்த விளம்பரச் சாதனங்களை, மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் முயற்சிகளில், தேவையான அளவு ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்தில் தான், அரசு மதுவிலக்குப் பிரச்சார நாடகம் ஒன்றையும், திரைப்படம் ஒன்றையும் தயாரித்து வெளியிட முடிவு செய்து, அந்த முயற்சியில் தீவிரமாக இறங்கியது.

நேற்றைய முன்தினம் சென்னையில் நடந்த, 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற அரசின் மது விலக்குப் பிரச்சாரத் திரைப்படத்தின் தொடக்க விழாவில் கலந்து கொண்டேன். இன்று 'வெளிச்சம்' நாடக அரங்கேற்ற விழாவில் கலந்து கொள்கிறேன். மக்கள் நல்லா இருந்தால்தான், அவர்களது வீட்டுக்குள் வெளிச்சம் வரும். வீட்டில் வெளிச்சம் இருந்தால்தான், நாட்டில் சுபிட்சம் விளையும் என்பது, எனக்கு நன்றாகவே தெரியும். ஆகவே தான், இருட்டைக் குறை சொல்லுவதை விட, ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப்பதை, எனது வாழ்நாள் நோக்கமாக எண்ணி, நான் செயல்பட்டு வருகிறேன்.

**தமிழகம் முழுவதும்...**

இரண்டு இலட்ச ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசு தயாரித்து, இன்று இங்கே அரங்கேறும் இந்த 'வெளிச்சம்' நாடகத்தை, தமிழகம் முழுவதிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நாடகத்தின் மூலம், குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்கள் மனம் திருந்தி, ஒரு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதால், அனைத்து இடங்களிலும் இந்த நாடகத்தை இலவசமாக நடத்த, அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக அரசிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டாலும், இந்தச் செலவையும் ஏற்று, இந்த நாடகம் தடையின்றி எங்கும் நடைபெற முடிவு செய்துள்ளோம். ஏனெனில், தமிழகத்தில் பூரண மதுவிலக்கு வேண்டும் என்ற எங்களின் கொள்கையை எளிதில் செயல்படுத்த, இந்த முயற்சியும் தனது பங்கினைச் செலுத்தும் என்று திடமாக நம்புகின்றேன்.

கருத்தூட்டமிக்க இந்த இனிய நாடகத்திற்கு, வயலின் சக்கரவர்த்தி திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் இசை அமைத்துள்ளார். கலைமாமணி திருமதி இந்திரா ராஜன் அவர்கள் இந்த நாடகத்திற்கு நடனம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். வேதம் புதிது கண்ணன் அவர்கள் கதை, வசனம், பாடல்கள் எழுதியுள்ளார். பல்வேறு திறமையாளர்களின் கூட்டுத் தயாரிப்பாக உருவெடுத்துள்ள இந்த நாடகம், தகுதியில் எந்த அளவுக்குத் தனித்தன்மை பெற்றதாக இருக்கும் என்பதை, நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

**வாழ்க்கையில் வெளிச்சம் வீச**


மேலும், தலைசிறந்த நாடகக் கலைஞர்கள் பங்குபெறும் இந்த 'வெளிச்சம்' நாடகத்தை, மக்கள் பார்த்துப் பயன் பெறுவதோடு, நாடகத்தின் மூலம் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கு வலிவு சேர்க்கிற பணியில், தாங்கள் அயராது ஈடுபடுவார்கள் என நம்புகிறேன். அரசின் இந்த முதல் முயற்சி மாபெரும் வெற்றியாக அமையும், குடிப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மத்தியில் மாபெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தும், அவர்கள் வாழ்க்கையில் 'வெளிச்சத்தை' வீச உதவும், என்ற என் கருத்துக்களை மீண்டும் தெரிவித்து, இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

- நிகழ்ச்சித் தொகுப்பு
ஜே. சந்திரன்




**• துள்ளும் மீனைப் பிடிக்கும் தொழிலில் இந்தியா ஏழாவது இடத்தை வகிக்கிறது. நமது நாட்டில் 56 சதவீத மக்கள் மீன் சாப்பிடுகின்றனர். மீன் சாப்பிடும் மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 0.6 சதவீதம் அதிகரித்து வருகிறது. தனி நபர் ஒருவருக்குத் தேவைப்படும் சராசரி மீன் உணவின் எடை ஆண்டொன்றுக்கு 10 கிலோவாகும். ஆனால், கிடைக்கும் மீனின் அளவோ 700 கிராம்.**

**கடலுணவுப் பொருட்களின் மூலம் 1990-91-இல் ரூ.893 கோடியும் 1989-90-இல் ரூ.635 கோடியும் அன்னியச் செலாவணியாகக் கிடைத்தது. ஜப்பான் நாட்டிற்குத்தான் மிக அதிக பட்சமாக 47.68 சதவீத கடலுணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.**



# செயற்கைக் கோள் மூலம் ஒலி, ஒளி தொலைத்தொடர்பு

நில உலகை ஒட்டிய நிலையான வட்டத்தில் (Geostationary orbit) சுற்றி வரும் செயற்கைக் கோள் (Satellite) நுண் அலைச் செய்தி களைத் திருப்பி அனுப்பும் தானி யங்கிக் கருவியாக (Repeater Station) இயங்கி, இவ்வுலக முழுவதிற்கும், ஒலி, ஒளி வடிவம் கொண்ட செய்தி களை அனுப்புகிறது.

இந்த நிலையான வட்டம் பூமத்திய ரேகைக்கு இணையாக பூமியின் மட்டத்திலிருந்து 36,000 கி.மீ. தொலைவில் உள்ளது. செயற்கைக் கோளும், பூமியில் அமைக்கப்படும் உணர்கொம்பும் (Antenna) ஒரு நேர்க்கோட்டில் இருக்குமானால், செயற்கைக் கோள் அனுப்பும் ஒலி, ஒளிச் செய்திகளை உணர்கொம்பு பெற முடியும். இத்தகைய செயற் கைக் கோள் உணர்கொம்பின் ஒரு நேர்க்கோட்டில் சேர்க்கை, செயற் கைக் கோள் நிலையான வட்டத்தில் சுற்றிவரும்போது, இயற்கையாகவே சாத்தியமாகிறது. செயற்கைக் கோள் அனுப்பும் நுண் அலைகள் நிலத்தின் ஒரு குறிப்பிட்ட பரப்பளவிற்கு மட்டும் பரவுகின்றன. இந்த பரப் பிற்குச் செயற்கைக்கோளின் அடிச் சுவடு (Satellite foot print) என்று பெயர். இப்பகுதி அல்லாத மற்ற இடங்களில், நுண் அலைகளின் வீரியம் மிகவும் குறைந்து காணப் பட்டு, பயனற்றதாக இருக்கும்.

செயற்கைக் கோள் மூலம் பெறும் கருவியின் (Satellite Receiver) அமைப்பு மூன்று முக்கிய பாகங் களைக் கொண்டுள்ளது. அவை (1) சாய்மாலை வட்ட உணர்கொம்பு (Parabolic Reflector-Dish Antenna) (2) மின் ஆற்றலை அதிகம் செய்யும் கருவி (LNA/LNB) (3) மின் அலை பெறும் கருவி (Satellite receiver).


**டாக்டர் ந. குணசேகரன்,**
**உதவிப்பேராசிரியர்,**
**மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்புத் துறை**
**பொறியியல் கல்லூரி,**
**அண்ணா பல்கலைக் கழகம்.**


விண்வெளி செயற்கைக் கோள் அனுப்பும், நுண் அலைகள் பூமியை அடையும்போது வீரியம் மிகமிகக் குறைந்து செயலிழந்து காணப்படு கின்றது. இதன் காரணங்கள்:

1. சூரிய ஒளி மூலம் சக்தி பெறும் மின்கலங்களே (Solar cell) செயற்கைக் கோளிலுள்ள மின்னணுக் கருவிகளை இயக்குகின்றன. இம் மின்கலங்கள் குறைந்த சக்தி கொண் டதால், செயற்கைக் கோள் அனுப் பும் நுண் அலைகளுக்கு அதிக வீரியம் கொடுக்க இயலாது. எனவே, செயற்கைக் கோளிலிருந்து வரும் நுண் அலைகள் மிதமான வீரியம் கொண்டதாக இருக்கிறது. இது 10 W அளவாக இருக்கும் இதை 10dBW என்று குறிப்பிடலாம்.

2. நுண் அலைகள் பூமியை நோக்கிச் செலுத்த 'உணர்கொம்பு' (Antenna) பயன்படுத்தப்படுகின்றது.

நுண் அலைகளின் வீரியம் உணர் கொம்பின் வடிவத்தையும் அளவையும் பொறுத்திருக்கிறது. ஆனால் விண்வெளியில் சுற்றி வரும் செயற்கைக் கோள் பெரிய 'உணர்கொம்புகளை' எடுத்துச் செல்லுதல் இயலாத காரியம். எனவே, சிறிய உணர் கொம்புகளே செயற்கைக் கோளில் இருக்கும். இந்த உணர்கொம்புகள் தரும் வீரியத்தின் அளவு 100 ஆக இருக்கும். இதை 20 dB என்று சொல்லலாம்.

3. செயற்கைக் கோளிலிருந்து வரும் நுண் அலைச் செய்தி 36,000 கி.மீ. தூரத்தைக் கடந்து, பரவி வருவதால், அதன் வீரியம் பெருமளவில் குறைகிறது. இதைத் 'தூரத்து இழப்பு' (Path loss) என அழைக்கிறோம். இதன் அளவு -200 dB என்று குறிக்கப்படுகின்றது.

4. நுண் அலைச் செய்திகள் விண்வெளிமூலம் பூமியை நோக்கி வரும்போது, விண்வெளியின் பல்வேறு அமைப்பினூடே வருவதாலும், பயனற்றமின் அலைகள் (noise) பலவற்றோடு கலப்பதாலும், அதனுடைய வீரியம் மேலும் குறைகிறது.

இப்படியாக விண்வெளிக் கோளிலுள்ள உணர்கொம்பு 10 W (10 dB) சக்தி கொண்ட நுண் அலைச் செய்திகளை, ஓரளவிற்கு 100 மடங்கு (20 dB) வீரியத்தைக் கூட்டி (Antenna gain 20 dB), 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண் கொண்ட நுண் அலைகளாகப் பூமியை நோக்கி அனுப்புகிறது. இந்நுண் அலைச் செய்தியின் மொத்த வீரியம் 30 dB (20+10) அளவு கொண்டதாகும். இந்த அளவை 'சமமதிப்பு செலுத்தும் சக்தி' என்று குறிப்பிடுகிறோம் (EIRP: Equivalent istropic radiated power) 'சமமதிப்பு செலுத்தும் சக்தியோடு' பூமியை நோக்கி வரும் நுண் அலைச் செய்திகள் 'தூரத்து இழப்பு' மூலம் -200 என்பி அளவு வீரியம் குறைக்கப்பட்டு உயிரற்ற நுண் அலைகளாய் பூமியை அடைகின்றது. இவைகளுக்கு மிகமிக அதிக வீரியம் உடனே கொடுத்தால்தான் தேவையான செய்திகளை அவை கொடுக்க முடியும். இதைத்தான் பூமியில் மிக பெரிய அளவில் உள்ள உணர் கொம்பு செய்கிறது.

## தந்தி

நாட்டில் மொத்தம் 40,077 தந்தி அலுவலகங்கள் செயல்படுகின்றன. இவற்றுள், 20,269 அலுவலகங்களில் தேவநாகரி மொழியிலும் தந்தி அனுப்பும் வசதி உள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் 641 இலட்சம் உள்நாட்டுத் தந்திகள் அனுப்பப்பட்டன. இவற்றுள் 10.55 சதவிகிதம் அரசுப் பணிகளுக்காகவும், 0.81 சதவிகிதம் செய்திப் பத்திரிகைகளின் பணிகளுக்காகவும் அனுப்பப்பட்டன. வாழ்த்துத் தந்திகள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா, 52.8 இலட்சம்.

பன்னாட்டுத் தந்திகளின் எண்ணிக்கை 9.9 இலட்சம். தொலைபேசி மூலமாகவே, வீட்டில் இருந்தபடியே தந்தி அனுப்ப இயலும் என்பது தெரிந்திருக்கலாம். இம்முறையில் 65 இலட்சம் தந்திகள் 'புக்' செய்யப்பட்டன. இவற்றுள் 7 இலட்சம் தொலைபேசி மூலமாகவே தகவல் செய்யப்பட்டன.

பூமியிலுள்ள உணர்கொம்பு (Antenna) மூன்று முக்கிய பாகங்களைக் கொண்டுள்ளது:

1. சாய்மாலை வட்ட உணர் கொம்பு (Parabolic reflector dish Antenna) இதன் அளவு 3-5 மீட்டர் விட்டமுள்ளதாக இருக்கும் இதன் வேலை மிக அதிக அளவில் நுண் அலைகளைப் பெற்று, அதை ஒருமுகப்படுத்தி அதன் வீரியத்தைப் பல மடங்கு (சுமார் $10^5$) உயர்த்தி, (50dB) உணர்கொம்பின் குவிமையத்தில் (Focal point) கொண்டு சேர்ப்பதாகும். இதைத் துணை உணர்கொம்பு என்று அழைக்கலாம். (Secondary Antenna)

2. சிறிய முகப்பு கொண்ட 'செய்தி உட்கொள்ளும் உணர் கொம்பு' (Feed horn Antenna). இந்த உணர்கொம்புதான் 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண் கொண்ட நுண் அலைகளைப் பெறும் சக்தி கொண்டது. எனவே, இதனை முதல்நிலை உணர்கொம்பு (Primary Antenna) என்கிறோம். இது துணை உணர் கொம்பின் குவிமையத்தில் வைக்கப் பட்டிருப்பதால் அதிக வீரியம் கொண்ட நுண் அலைகளைப் பெறுகின்றது. சிறிய முகப்பு கொண்டதால் தனிப்பட்ட முறையில் இது செயல்படமுடியாது. துணை உணர் கொம்போடு சேர்ந்து இது திறமையாகச் செயல்படுகின்றது.

3. மின் ஆற்றலை உயர்த்தும் கருவி (LNA - Low noise Amplifier). இது ஒரு மின்னணுவியல் கருவி. மிக விலை உயர்ந்தது. (Rs.4000) மிக திறமை வாய்ந்தது. இக்கருவியில்லாமல் 'செயற்கைக்கோள் செய்தி பெறும் கருவி' இயங்க முடியாது. இக் கருவி வீரியம் குறைந்து வரும் நுண் அலைகளுக்கு அதிக அளவு ($10^6$ = 60 dB) வீரியத்தைச் சேர்க்கிறது. இக்கருவிக்குப் பதிலாக மற்றொன்றையும் (LNB - Low noise block down coverter) பயன்படுத்தலாம். இம்மின்னணுக் கருவி நுண்ணலைக்கு வீரியத்தையும் தருகிறது ($10^6$), நுண்ணலையின், 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண்ணை, 940-14500 MHZ அலை அதிர்வு எண்ணாகக் குறைக்கிறது.

இப்படியாக விண்வெளியிலிருந்து வரும் நுண் அலைச் செய்திகளை பெரிய உருவம் கொண்ட சாய்மலை வட்ட உணர்கொம்பு (Dish Antenna) அதிக அளவில் பெற்று, அதனை ஒருமுகப்படுத்தி, குவிமையத்தில் சேர்க்க, குவிமையத்தில் பொறுத்தப் பட்ட சிறிய முகப்பைக் கொண்ட உணர்கொம்பு (Feed horn), நுண் அலைகளைத் தடம் கண்டுகொள்ள, மின் ஆற்றல் உயர்த்தும் கருவி, நுண் அலைச் செய்தியின் வீரியத்தைப், பலமடங்கு உயர்த்துகிறது. இந்த மூன்றின் ஒருங்கிணைந்த அமைப்பால், உயிரற்று பூமியை அடையும் நுண் அலைகளுக்குப் பெருமளவு சக்தி கொடுக்கப்பட்டு, அந்நுண் அலைகள், மின்னணுக் கருவிகளை இயக்கும் தகுதியைப் பெறுகிறது. -170B.W (30-200) அளவு சக்தியோடு வரும் நுண் அலை தற்போது -60 B.W (-170+50+60) அளவு சக்திக்கு உயர்த்தப்படுகிறது. நுண் அலையின் அலை அதிர்வு எண்ணும் 3.7 GHZ - 42 GHZ மதிப்பிலிருந்து 940 MHZ - 1500 MHZ மதிப்பிற்குக் குறைக்கப்படுகிறது.

மின் அலை அதிர்வு குறைக்கப்பட்டு, வீரியம் பெற்ற நுண் அலை சுமார் 20-30 மீட்டர் நீளம்

# பட்ஜெட் பிறந்த கதை!

பிரஞ்சு மொழியில் பொகெட் (BOUGETTE) என்றால் சிறிய பை என்று அழைப்பர், அது வரவு-செலவு பற்றிய செய்திகளின் சேர்க்கை என்பதாகவும் கூறப்படும்.

பொகெட் என்ற சொல்லே கால வெள்ளத்தில் பட்ஜெட் ஆகி வழக்கில் வந்து விட்டது. கி.பி. 1733-இல் இங்கிலாந்தில் தான் முதன் முதலாக அரசு வரவு-செலவு கணக்கு வழங்குவது துவங்கியது. இன்றைய பட்ஜெட் மாதிரி கிடையாது. சாதாரண வரவு-செலவு பட்டியல் தான்.

இங்கிலாந்தின் மூன்றாம் ஜார்ஜ் அரசர் (1738-1820) காலத்தில் பிரதமராக இருந்தவர் வில்லியம் பிட். இளையவர். இவர்தான் பட்ஜெட்டின் தந்தை என்ற கருதப் படுகிறவர். அப்போது பிரஞ்சுப் படைகளுடன் போர் ஏற்பட்டது. நெப்போலியனுடன் மோதி இங்கிலாந்திற்காக வெற்றியைத் தேடித் தந்தவர் நெல்சன். போரில் வெற்றி பெற்றாலும் இங்கிலாந்துக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. வரவு-செலவு சரிகட்ட பணம் மிகுதியாகத் தேவைப்பட்டது. அது சமயம் வில்லியம் பிட் தீவிர சிந்தனைகளுடன் செயல்பட்டதின் விளைவே பட்ஜெட் உருவாயிற்று. அதன் தொடர்பாய் 1799-இல் முதன் முதலாக வருமான வரி உதயமாயிற்று. நாட்டின் வரவு-செலவுக் கணக்குகளை பாராளுமன்றம் பரிசீலிக்கும் முயற்சி துவங்கியது. பொதுக் கணக்கு (பப்ளிக் அக்கெவுண்ட்) அது முதல் பட்ஜெட்டிற்கு அடிப்படையாயிற்று.

அதன் பின்னரே விரிவான வகையில் வரவும், செலவும் கணக்கிடப்பட்டு உபரி வருமானங்களுக்கான திசைகளை ஆராயும் தொடக்கம் ஏற்பட்டது. இந்தவிதமாக பட்ஜெட் சமர்ப்பித்தல் உருவாகி பல நாடுகளிலும் இந்த வழக்கம் பின்பற்றப்படலாயிற்று.

இந்தியாவில் இந்த ஆண்டு பட்ஜெட்டையும் சேர்த்து (இடைக்கால பட்ஜெட் உட்பட) இதுவரை 58 பட்ஜெட்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கொண்ட இணைவுக்கம்பி மூலமாய் (Coaxial Cable) 'செயற்கைக்கோளின் செய்தி பெறும் கருவிக்கு' எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த இணைவுக் கம்பியும் நுண் அலைகளின் வீரியத்தைக் குறைக்கும் தகுதி பெற்றது. நுண் அலையில் அலை அதிர்வு எண் அதிகமாக அதிகமாகச் சக்தி இழப்பும் அதிகமாகிறது. எனவே, முடிந்தமட்டும் அலை அதிர்வு எண் மதிப்பைக் குறைத்தல் நலம். 'பெறும் கருவியை' அடையும் நுண் அலையின் சக்தியின் அளவு -60dB அல்லது -30 dBm மதிப்பைக் கொண்டதாக இருக்கும். 'பெறும் கருவி' நுண் அலையின் அலை அதிர்வு எண்ணை மேலும் குறைத்து, வீரியத்தை உயர்த்தி, பின்னர் ஒளி, ஒலி செய்திகளைத் தனியாகப் பிரித்து நமக்குத் தருகின்றது. இதை நாம் தொலைக்காட்சி மூலம் கண்டு ரசிக்கலாம்.


செயற்கைக்கோளின் செய்தி பெறும் கருவிகளின் முழு அமைப்பையும் செய்வது கடினமல்ல. இதற்கு மிக உயர்ந்த பொறியியல் வல்லுநர் தேவையில்லை. ஆனால், இதன்விலை இன்று ரூபாய் 60,000 தாண்டிவிட்டது. இதைச் செய்ய இவ்வளவு அதிக விலை தேவையா? அண்ணா பல்கலைக் கழகத்திலுள்ள பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொருளியல் துறையில் BE, பகுதி நேர மாணவர்கள் இந்தக் கேள்விக்கு விணை காணும் எண்ணத்தோடு 'ஆசியா சேட்' என்ற செயற்கைக்கோளிலிருந்து வரும் செய்திகளைப் பெறும் வகையில் இந்த கருவியைச் செய்து முடிக்கும் பணியில் இறங்கியுள்ளார்கள். துணைப் பேராசிரியர் டாக்டர் ந. குணசேகரன் மேற்பார்வையில் சீனிவாசன், மணிவண்ணன், சுப்பிரமணியம், முருகேசன், முத்துகிருஷ்ணன், பரஞ்சோதி, அன்சாரி, உதய பாஸ்கர், கணேசன், சந்திரசேகர், காதர் சுலைமான் சந்திரபிரகாசம், கார்த்திகேயன் முதலிய மாணவர்கள் இக்கருவியை ரூ.20,000 விலை மதிப்பில் செய்து முடிப்பதற்கு உறுதிகொண்டு இதில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தச் செயற்கைக்கோள் செய்திகளை, கண்ணாடி இழைக்கம்பி மூலம்(Optical glass fiber) அண்ணா பல்கலைக் கழகத்தின் பலதுறைகளுக்கும் அனுப்பும் திட்டத்தையும் வெகுவிரைவில் செயல்படுத்துவார்கள்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் BE பகுதி மாணவர்கள் டாக்டர். ந.குணசேகரன் மேற்பார்வையில் சுழல் உணர்கொம்பின் (Helical Antenna) செய்து, EKRON எனப்படும் ரஷ்ய செயற்கைக்கோளிலிருந்து செய்திகளைப் பெறும் முயற்சியில் வெற்றி கண்டனர்.

இந்தக் செயற்கைக்கோள் செய்யும் கருவிகளை மிக அதிக அளவில் செய்ய முற்பட்டால் அதன் விலை மேலும் குறைவது திண்ணம். இதனால் நகரப் பகுதி மக்கள் மட்டுமல்லாது, கிராமப்புற மக்களும் இவ்வசதியைப் பெற வழி உண்டாகிறது. கிராமப்புற மக்களின் முகத்தில் வியப்பையும் மகிழ்ச்சியையும் இந்தச் செயற்கைக்கோள் உண்டாக்குவது உறுதி.

உலக நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பு பெறும் அவர்களின் எண்ணமும் மனப் போக்கும், செயல் முறைகளும் தரம் உயர்ந்து காணப் போவதில் ஐயமில்லை!



# இராமநாதபுரம் மாவட்டத்தில்
# செயற்கை முத்து உற்பத்தி

இராமநாதபுரம் மாவட்டத்தில் பெருமளவில் வளர்ப்பு முத்துக்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு நிறுவனமும், ஸ்பிக் உர உற்பத்தித் தொழில் நிறுவனம் இணைந்து 1982-ஆம் ஆண்டு மண்டபம் மன்னார் வளைகுடாவில் உள்ள குருசடித்தீவில் முத்து பண்ணையை அமைத்தது, பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு முத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

செயற்கை முத்து உற்பத்திக்காக தமிழ்நாடு முத்து நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியில் வெற்றியடைந்து வர்த்தக ரீதியில் உற்பத்தியைத்துவக்கியுள்ளது. இந்த நிறுவனம் கடந்த ஓராண்டுக் காலமாக நடத்திய ஆராய்ச்சியின்போது 12,000 காரட் முத்துக்களை உற்பத்தி செய்துள்ளது.

வளர்ப்பு முத்து உற்பத்தியைக் குடிசைத் தொழிலாக மாற்ற வேண்டுமென்ற அரசின் கொள்கையைச் செயலாக்கத் திட்டத்தை மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். இவ்வகையில் இராமநாதபுரம் மாவட்டம் ''வாலி நோக்கம்'' என்ற கிராமத்தில் முத்து வளர்ப்பின் செயலாக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இக்கிராம மக்களின் முழு ஒத்துழைப்பில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தியக் கடலில் ஆறு வகையான முத்துச் சிப்பிகள் கிடைக்கின்றன. அவைகளுள் இந்திய முத்துச் சிப்பி (பிங்க்டேடா ஃபுகேட்டா) பெருமளவில் கிடைக்கிறது. இச்சிப்பியின் மென்மையான உடற்பகுதி இரண்டு ஓடுகளால் மூடப்பட்டிருக்கும். ஓட்டின் ஒரு பகுதியில் காணப்படும் துவாரத்தின் வழியாகப் பச்சை நிறம் கொண்ட மயிரிழைகள் போன்ற நார்கள் வெளிவருகின்றன. இதற்குப் பைசஸ் நார்கள் என்று பெயர். அதனைக் கொண்டு கடலின் அடியில் உள்ள பாறை, நுரைகல் ஆகிய கடினமான பொருள்களில் ஒட்டி வாழும். அசம்பாவிதமாக மயிரிழை நார்கள் அறுந்துவிடில் சிறிது தூரம் ஊர்ந்து செல்ல கால் ஒன்று உண்டு. பெரும்பாலும் இடம் விட்டு இடம் நகராமல் வாழும் தன்மையுடையது. இந்த மெல்லிய தசை கொண்ட முத்துச்சிப்பி கடல் நீரில் உள்ள நுண்ணுயிரிகளை உணவாக உட்கொள்ளும். இதைத் தவிர மற்ற ஐந்து வகை முத்துச்சிப்பிகள் நமது கடலில் அதிக அளவில் காணப்படுவதில்லை.

## முத்துச்சிப்பி கிடைக்கும் இடங்கள்

தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்களில் முத்துச்சிப்பிகள் கிடைக்கின்றன. குறிப்பாக தமிழ்நாட்டின் மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடியைச் சார்ந்த கடல் பகுதியில் இலட்சக்கணக்கான சிப்பிகள் 10-25 மீட்டர் செழித்து வளர்வதற்கான சூழ்நிலை உள்ளது. கடல் அடியில் மணல், சேறு உள்ள பகுதிகளில் முத்துச்சிப்பிகள் காணப்படுவதில்லை. பாறைகள் மிகுந்த பகுதிகளில்தான் கிடைக்கின்றன. மன்னார் வளைகுடாவில் பெரும்பாலான பகுதி பாறைகளினால் ஆனது. முத்துச்சிப்பிகள் செழித்து வளர இது ஒரு முக்கிய காரணமாகும்.

## இயற்கை முத்து உருவாக்கும் முறை

முத்துச்சிப்பிகள் கடலினடியில் பாறைகளில் ஒட்டி வாழும் போது தவறுதலாகச் சிறிய மண் துகள், நுண்ணிய பூச்சிகள், வேறு ஏதாவது ஒரு பொருள் மேனடில் என்று சொல்லக்கூடிய மிருதுவான தோலுக்கும் ஓட்டிற்கும் இடையில் செல்ல நேரிடலாம். அவ்வாறு உள்ளே சென்ற பொருள் அத்தோலுக்கு ஒரு நமைச்சலை ஏற்படுத்தும். நமைச்சலைப்போக்க அத்தோல் முத்து திரவத்தைச் சுரந்து அப்பொருளின் மேல் ஆடையாகப் படியச் செய்யும். இப்பணி சிப்பி உயிர் உள்ளவரை தொடர்ந்து நடைபெறுவதால் முத்துதிரவம் மீண்டும் மீண்டும் படிந்து நாளடைவில் இதுவே இயற்கை முத்தாகிறது. இயற்கை முத்தின் வடிவம் உள்ளே சென்ற பொருளின் வடிவத்தைப்

### முத்து

**செயற்கை முத்து (கல்சர்டு முத்து) தயாரிப்புத் தொழில் நுட்பம் நம் நாட்டில் 1973-இல் கண்டறியப்பட்டது. முத்துக்குப் பெயர் பெற்ற தூத்துக்குடியில் அமைந்துள்ள மத்தியக் கடல் மீன் ஆராய்ச்சிக் கழகம் இதனைக் கண்டறிந்தது. 1981-இல் முத்துச் சிப்பிகளை உருவாக்கும் முறையை இக்கழகம் மேம்பாடு செய்து ஒரு திருப்பத்தை உண்டு பண்ணியது.**

**வர்த்தக நிறுவனங்கள் இதில் ஈடுபட்டால், செயற்கை முத்து உற்பத்தி நன்கு வளர்ச்சி அடையும் வாய்ப்பு உள்ளது. கடந்த இருநூறு ஆண்டுகளாகவே முத்து வியாபாரத் தலமாக ஐதராபாத் புகழ் பெற்று உள்ளது. முத்துக்களின் வாழ் நாளையும், வண்ண பளபளப்பையும் அதிகரிக்கும் விதமாக அங்கு நிலவிடும் சாதகமான காலநிலையே இதற்கு முக்கியக் காரணமாகும். ஜப்பான் தேசத்துக் கோகிச் மிகிமோடோ (Kokich Mikimoto) என்பவரே முதன் முதலாகச் செயற்கை முத்தினை உருவாக்கியவர் ஆவார்.**

பொறுத்து அமையும். எனவே, நல்ல உருண்டையான இயற்கை முத்துக்கள் கிடைப்பது அரிது. மேலும் கடலில் கிடைக்கும் எல்லா சிப்பிகளிலும் இயற்கை முத்துக்கள் கிடைப்பதில்லை.

**வளர்ப்பு முத்து உற்பத்தி சாதனை**

கடலில் முத்துச்சிப்பிகள் குறைந்து வருவதால் இயற்கை முத்துக்கள் அதிகம் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எல்லா முத்துக்களும் உருண்டையாக நாம் விரும்பும் பருமனில் இருப்பதில்லை. இதனை மனதிற்கொண்டு மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் 'வேப்பலோடை' என்ற சிற்றூர் கடல் பகுதியில் 1972-ஆம் ஆண்டு சிறிய முத்து உற்பத்தி சோதனைச் சாலையை நிறுவியது. 1973-ஆம் ஆண்டு நல்ல உருண்டையான வளர்ப்பு முத்துக்கள் உருவாக்கும் முறையில் வெற்றி கண்டது. நமது நாட்டில் வளர்ப்பு முத்து உற்பத்தி மேலோங்கி வளர இவ்வெற்றி உதவியது.

**நம் நாட்டில் முத்து உற்பத்தி நிலை:**

கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்துச்சிப்பிகளைப் பயன்படுத்தி 1973-ஆம் ஆண்டு மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் வளர்ப்பு முத்து உருவாக்கும் முறையில் சாதனை படைத்தது. ஆனால், அத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருளான முத்துச் சிப்பிகள் கடலில் சிறிதளவே காணப்படுகின்றன என்பதனை அறிந்து அதே நிறுவனம் 1981-ஆம் ஆண்டு முத்துச்சிப்பிக் குஞ்சுகள் வளர்க்கும் முறையில் வெற்றிக்கண்டது. இவ்வெற்றி நமது நாட்டில் முத்து உற்பத்தித் தொழில் வளர வழிவகுத்தது. வியாபார ரீதியில் பெருமளவில் வளர்ப்பு முத்துக்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு நிறுவனமும் ஸ்பிக் உர உற்பத்தி தொழில் நிறுவனம் இணைந்து 1982-ஆம் ஆண்டு மன்னார் வளைகுடாவில் உள்ள குருசடித்தீவில் முத்துப்பண்ணையை அமைத்தது. பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு முத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

**—உல. இரவீந்திரன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்.**

## அதிக மகசூல் தரும் ஜெ.ஜெ.-92 நெல்

திருச்சி மாவட்டம் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஜெ.ஜெ.-92 புதிய சன்னரக நெல் 77 சென்ட் நிலத்தில் பயிரிடப்பட்டு இன்னும் சில நாட்களில் அறுவடைக்குத் தயாராகவுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் திருச்சியில் தெரிவித்தார்.

இந்த நெல்லை 105 நாட்களிலிருந்து 110 நாட்களுக்குள் அறுவடை செய்யலாம். குறுவை, தாளடி பயிரிடப்படும் நிலங்களில் இந்த ரக நெல்லைப் பயிரிடலாம்.

அறுவடை செய்யப்படும் இந்த ரக நெல் மேலும் பல்கிப் பெருக மாநில விதைப் பண்ணைக்கும், முற்போக்கு விவசாயிகளுக்கும் தரப்படும். இதன் விளைச்சலை அதிகரித்து வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்.

## சத்துணவுத் திட்டத்தால் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைகிறது உலக வங்கி பாராட்டு!

சத்துணவுத் திட்டத்தால் தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்து வருவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். 12 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கினார். ஒருங்கிணைந்த இந்தச் சத்துணவுத் திட்டத்தினால் தமிழ்நாட்டில் குழந்தைகள் உணவில் ஊட்டச்சத்துக் குறைவாக இருந்தது நீக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்துள்ளது என்று உலக வங்கி 10,5,1992 அன்று வாஷிங்டனில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருக்கிறது.

தமிழ்நாட்டில் உணவுக்காகச் செலவிடப்படும் தொகையில் 5 சதவிகிதம் மட்டுமே சத்துணவுக்குச் செலவிடப்படுகிறது. ஆனால் இதில் நல்ல பயன் ஏற்பட்டுள்ளது என்றும் உலக வங்கி தனது அறிக்கையில் பாராட்டி உள்ளது.

இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டபோது உலக வங்கி இந்தத் திட்டத்துக்கு உதவி செய்தது. ஆனால், இப்போது இந்த வங்கியின் உதவி இல்லை என்ற போதிலும், இந்தத் திட்டத்துக்குத் தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தொடர்ந்து நடத்தி வருகிறது என்றும் உலக வங்கி பாராட்டி இருக்கிறது.



# பாலமலைப் பழங்குடி மக்கள்

மலைகளுக்குப் பெயர் பெற்றது சேலம் மாவட்டம், இம்மாவட்டத்தில் சிறு குன்றுகளாகவும், பெரிய மலைகளாகவும் பல்வேறு திசைகளில் பரந்து கிடக்கும் மலைகளில் ஒன்று பாலமலை. சேலத்திலிருந்து 52 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேட்டூரின் அருகில் இம்மலை உள்ளது. வடக்கு மேற்காக அமைந்திருக்கும் இம்மலை சுமார் 5,000 அடி உயரத்தையும் 25 கிலோ மீட்டர் நீளத்தையும் கொண்டுள்ளது. இம்மலைக்கு மேட்டூரிலிருந்து கொளத்தூர் வழியே சென்று, மலையின் மேற்குப் புறமாக மலையை ஒட்டிச் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஊர்களான செட்டியூர், கண்ணாமூச்சி, குருவரெட்டியூரிலிருந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்து மலைக் கிராமங்களை அடையலாம். மலையின் கிழக்குப் புறமாக அமைந்துள்ள நெருஞ்சிப்பேட்டையை அடைந்து, அங்கிருந்து நடந்தும் இம்மலைக் கிராமங்களை அடையலாம். இம் மலைக்குச் செல்வதற்கு இவை தவிர வேறு போக்குவரத்து வசதிகள் இல்லை.

மலையின் வடக்குப்புற மூலையான கொளத்தூர் அருகே மேலெழும்பும் இம்மலை ஒரே சமமாகச் சென்ற கண்ணாமூச்சியின் அருகில் அதிக உயரமான மலையுச்சிகளைக் கொண்டு, பின்பு மறுபடியும் இறங்க ஆரம்பித்து குருவ ரெட்டியூர் அருகில் முடிந்துவிடுகிறது. இம்மலையின் முக்கியமான மலையுச்சிகளாக சின்னமலை, கதிரப்பன் கரடு, கொசக்கரடு, கொம்பாரப்பட்டிக்கரடு, பாதக்கரடு, செம்மலை, செங்கல் மலை ஆகியவற்றைக் கூறலாம். இம் மலையின் அடிப்பகுதி முட்காடுகளாகவும் (Shrub Jungle) மேல்பகுதி இலையுதிர்க் காடுகளாகவும் (Deciduous Forests) காணப்படுகிறது. ஒரு காலத்தில் சந்தன மரங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்ட இம்மலையில் தற்பொழுது குறைந்த அளவிலேயே சந்தன மரங்கள் உள்ளன. மலையின் உச்சியில் மிகவும் பிரசித்திப் பெற்ற சித்தேஸ்வரர் கோவில் உள்ளது. இக் கோவிலைச் சுற்றி அடர்ந்த காட்டுப் பகுதி காணப்படுகிறது.

மலை உச்சியில் காணப்படும் சித்தேஸ்வரர் கோவிலின் தென்புறமாக மலைவாழ் பழங்குடிகளின் குக்கிராமங்களான பெரிய குளம், திம்பொதி, நாகம்பொதி, நத்தக்காடு, துவரங்காடு, குங்கிலியக்காடு, ஈச்சங்காடு ஆகியவை காணப்படுகின்றன. கோவிலின் வடபுறமாக, கெம்மம்பட்டி, ராமன்பட்டி, புல்லாம்பட்டி, நமங்காடு, கடுக்கா மரத்துக்காடு, தலக்காடு, கொட்டக் காடு, ஒரலை மரத்தூர், சிங்காரத் தோப்பு, செட்டிகாடு, பாத்திர மடவு, சோத்தாங்காடு, எருக்கலாங் காடு ஆகியவை அமைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் பெரிய கிராமங்களாக ராமன்பட்டி, கெம்மம்பட்டி, பாத்திரமடவு, பெரிய குளம் ஆகியவற்றைக் கூறலாம். இவற்றில் ஒவ்வொன்றிலும் சுமார் 60 வீடுகள் காணப்படுகின்றன. இதரக் கிராமங்கள் மிகவும் குக்கிராமங்களாக 15 முதல் 30 வீடுகளையே கொண்டுள்ளன. மலையின் வடபுறமாக உள்ள கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**ஜா.ரா. அசோகன்**
**காப்பாட்சியர்**
**அரசு அருங்காட்சியகம்**
**சேலம்.**

இம்மலைவாழ் மக்கள் மலையாளி வகுப்பைச் சார்ந்தவர்கள். மலையாளி என்பது பிறப்பியல்புபடி மலையில் வசிப்பவர் அல்லது அதை ஆட்சி செய்பவர் என்று பொருள்படும். இவர்கள் பேசும் மொழி ஒருவிதக் கலப்புத் தமிழ் மொழியாகும். சேலம் மாவட்டத்தில் காணப்படும் முக்கிய மலைகளில் ஒன்றான கொல்லிமலையிலிருந்து தம் மூதாதையர் காலத்தில் இவர்கள் குடி பெயர்ந்ததாக நம்பப்படுகிறது.

பாலமலைக் கிராமங்கள் அனைத்தும் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இயங்குகிறது. இருந்தும், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஊர்க்கவுண்டர்கள் உள்ளனர். இவர்கள் கிராமத்தில் சாதாரணமாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றனர். ஊர்க்கவுண்டர் எனும் பதவி பரம்பரைப் பதவியாக விளங்குகிறது. இம்மலைக் கிராமப் பகுதிகள், சிறிய மலைச் சரிவுகளையும், சமமான பகுதிகளையும் கொண்டு விவசாயத்தில் நல்ல முன்னேற்றத்துடன் காணப்படுகின்றன.

இங்கு கேழ்வரகு, சாமை, கம்பு, தினை, அவரை, கொள்ளு ஆகியவை சாதாரணமாகப் பயிரிடப்படுகின்றன. இப்பயிர் தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் கஞ்சி, கூழ், களி முதலியவற்றையே உணவாக உட்கொள்கின்றனர். சிறப்புப் பயிராக அரிசி, நிலக்கடலை,



கெம்மம்பட்டிக் கிராமம்

மஞ்சள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. சித்தேஸ்வரர் கோவிலின் வடபுறமாக ஓடும் ஓடையிலிருந்து, எண்ணெய் இயந்திரங்களின் (ஆயில் மோட்டார்) மூலம் நீர் இறைக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், கிராமங்களில் காணப்படும் குடிநீர்க் கிணறுகள் மட்டுமின்றி பட்டா நிலங்களில் காணப்படும் சொந்தக் கிணறுகளும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பயிரிடப்படும் பயிர்கள் அனைத்தும் சொந்த உபயோகத்திற்கே பயன்படுத்தப்படுகின்றன. இதரத் தேவையான பொருட்களை மலை அடிவார ஊர்களில் பெற்றுக்கொள்கின்றனர். மலை அடிவாரக் கிராமங்களான குருவரெட்டியூரில் ஞாயிறு சந்தையும்; கொளத்தூர், அந்தியூரில் முறையே வெள்ளி, திங்களில் சந்தைகளும் நடைபெறுகின்றன. மேலும், கண்ணாமூச்சியில் உள்ள அரசு விநியோகக் கடையின் மூலம் தமக்கு வேண்டிய அரிசி, மண்ணெண்ணெய், பாமாயில் ஆகியவற்றை இவ்வூர் மக்கள் பெறுகின்றனர். விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள இவர்கள் சமவெளியின் பல பகுதிகளுக்கும் சென்று தினக்கூலியாக விவசாயத் தொழில் பார்க்கின்றனர்.

இதரத் தொழில்களாக ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு ஆகியவையும் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்க்கப்படும் ஆடுகள் சந்தைகளுக்கு ஓட்டிச் சென்று விற்கப்படுவதுண்டு. ஆனால் வளர்க்கப்படும் மாடுகள் நிலத்தை உழுவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. பலவகைப்பட்ட மரங்களுடன் வாகை, ஊஞ்சை, சரக்கொன்றை, புளி, பலா, தென்னை, பனை ஆகியவையும் காணப்படுகின்றன. புளி உரிய பருவக்காலத்தில் சேகரிக்கப்பட்டு சமவெளியில் காணப்படும் பூலாம்பட்டிச் சந்தையில் விற்கப்படுகிறது. விவசாயத்திற்கு உரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அனைத்துப் பொருட்களும் தலைச் சுமையாக மலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. பட்டுப்பூச்சி வளர்ப்பிற்காக மல்பெரி செடிகள் பயிரிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிராமத்தில் காணப்படும் வீடுகள் பெரும்பாலும் மண்ணாலேயே கட்டப்பட்டுள்ளன. அவற்றிற்குக் கூரையாக, மலைகளில் அதிக அளவில் காணப்படும் கிணாங்கு என்ற புல்லையே பயன்படுத்துகின்றனர். ராமன்பட்டி, கெம்மம்பட்டி ஆகிய கிராமங்களில் தற்பொழுது அரசின் சார்பில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இவை கல்லால் கட்டப்பட்டு கல்நார் ஓடுகள் (Asbestos) அல்லது சீமை ஓடுகளால் வேயப்படுகின்றன. அரசின் சார்பில் ராமன்பட்டியிலும், கடுக்காமரத்துக் காட்டிலும் பள்ளிகள் இயங்குகின்றன. ராமன்பட்டியில் எட்டாவது வரை படிக்க வசதியும், கடுக்காமரத்துக்காட்டில் ஐந்தாவது வரை படிக்க வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. உணவு, உடை, உறைவிடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. மருத்துவ் வசதிக்காக, தமிழ்நாடு டேனிடா திட்டத்தின் கீழ் துணைச் சுகாதார நிலையம் ராமன்பட்டியில் இயங்குகிறது. மேலும் மேட்டூர் அரசு மருத்துவமனையிலும், கொளத்தூர் அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் மருத்துவ வசதிகள் பெறுகின்றனர். குழந்தை பிறப்பு பெரும்பாலும் மலைகளிலேயே நடைபெறுகிறது. சிரமம் ஏற்பட்டால் தொட்டில்களில் அல்லது கட்டிலில் படுக்க வைத்து கீழே கொண்டு வந்து விடுகின்றனர். கொளத்தூரை மையமாகக் கொண்டு இயங்கும் அஞ்சல் அலுவலகம் மூலம், தபால்கள் நடைப் பயணமாக வரும் தபால் சேவகரால் சேர்க்கப்படுகின்றன.

திருமண உறவுகள் பெரும்பாலும் மலைக் கிராமங்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன. சிலசமயம் இதர மலைகளிலும் சம்பந்தம் வைத்துக் கொள்கின்றனர். பரிசல் பணமாக மாப்பிள்ளை இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் வரை தர வேண்டியிருக்கிறது. பெண்ணிற்கு ஒரு பவுன் அல்லது இரண்டு பவுனாக அவரவர் வசதிக்கேற்றவாறு நகை போட்டு திருமணம் செய்து வைக்கின்றனர். விவாகரத்தும், மறு கல்யாணமும் பழக்கத்தில் உள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனியாக மாரியம்மன் கோவிலும், விநாயகர் கோவிலும் உள்ளது. கோவில் விழாக்கள் தனித்தனியாகக் கிராமங்களில் கொண்டாடப்படுகின்றன. மாரியம்மன் விழா பங்குனி மாதத்தில் 3 நாட்கள் முதல் 15 நாட்கள் வரை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் வைத்து, கடா வெட்டிக் கொண்டாடுகின்றனர். பொங்கல் சமயத்தில், தை நோன்பின்போது பொங்கல் மட்டும் மாரியம்மனுக்குப் படைக்கப்படுகிறது. சித்தேஸ்வரர் கோவிலில் புரட்டாசி, மாசி அம்மாவாசைத் தினங்களில் சிறப்பாகப் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. பெரிய குளம் கிராமத்தில் வைக்கப்பட்டிருக்கும் சித்தேஸ்வரர் சிலை மாசி அம்மாவாசை சமயத்தில் கோவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டு பூசை செய்விக்கப்படுகிறது.

விவசாயம், மின் வசதி, மருத்துவ வசதி ஆகியவற்றுள் ஓரளவு முன்னேற்றத்துடன் காணப்படும் இக்கிராம மக்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஆடு வளர்ப்பு, கரை கட்டுதல், பயிர் வளர்ப்பு ஆகியவற்றிற்குக் கடன் வசதி பெற்றுப் பயன் பெறுகின்றனர். ●



# தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

டாக்டர் கொ. சத்தியகோபால், இ.ஆ.ப.
திட்ட அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்
தருமபுரி

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகமானது, கம்பெனிச் சட்டத்தின் கீழ் 7.11.75-இல் தோற்றுவிக்கப்பட்டது. கழகத்தின் முக்கிய நோக்கம் இம் மாவட்டத்தின் கிராம, நகர்ப்புறங்கள் மேம்பாடு அடைவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது. மேலும் உள்ளாட்சி நிறுவனங்களில் நிதி ஆதாரங்களை, மேம்படுத்துவதற்காகப் பேருந்து நிலையம், அங்காடி தொகுப்புகள், வங்கிக் கட்டடங்கள் போன்றவைகளை மானிய திட்டத்தின் கீழ் கடன் வழங்கி ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதுவரை 18 கிராமம் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.40.22 இலட்சத்திற்குக் கட்டடங்கள் கட்டியும் அதில் ரூ.13.38 இலட்சம் மானியமும் அளித்துள்ளது.

மேலும், இக்கழகத்தின் சுயநிதி ஆதாரம் மேம்பாடு அடையும் வகையிலும் அதே சமயத்தில் தருமபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைய சுமார் 65.75 இலட்சத்தில் அங்காடி தொகுப்புகள் வங்கிக் கட்டடங்கள் கட்டியும், சுற்றுலா வளர்ச்சியுடைய ஒகேனக்கல், தீர்த்தமலையில் தங்கும் விடுதி, கடைகள் சுமார் ரூ.16.25 இலட்சத்திலும் மற்றும் விளையாட்டுத் துறையில் மற்ற வளர்ச்சியடைந்த மாவட்டங்களில் இல்லாத வகையில் நீச்சல் குளம் விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம் போன்ற வற்றிற்கு மானியம் வழங்கி விளையாட்டுத் துறைக்குக் கட்டிக் கொடுத்துள்ளது.

மேலும், நாகமங்கலத்தில் 128 ஏக்கர் தரிசு நிலத்தைச் சீர் செய்து பட்டு எடுக்கத் தேவையான மல்பரிச் செடிகளைப் பயிரிட்டும், மாந்தோப்பை ஏற்படுத்தியும் மற்ற அரசுப் பண்ணைகளுக்கு ஒரு முன்மாதிரிப் பண்ணையாகத் திகழ இக்கழகம் பெரிதும் பாடுபட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் மேலும் பல பகுதிகளில் பழப்பண்ணைகள், பட்டு வளர்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களில் கிராமச் சாலைகள், தகவல் தொடர்புகளை மேம்படுத்துதல், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், பட்டு வளர்ப்புத் திட்டம் தோட்டக் கலை, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மைப் பெருக்குத் திட்டம், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களும், அறிவியல் - தொழில் நுட்பத் திட்டம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்புத் திட்டங்கள் ஆகியவையும் இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களாகும். இத்திட்டங்களுக்கான திட்டமிடல், செயலாக்கம், கணிப்பாய்வு ஆகிய பணிகள் இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தமிழக முதல்வர் அவர்களின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டு, இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மனிதனின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம், ஆகியவற்றினைப் பெறுவதற்கான வேலைவாய்ப்பை உருவாக்கித் தருதல், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அடித்தள மக்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் அளித்தல், ஆகிய திட்டங்களில் செயலாக்

கத்தினால் தருமபுரி மாவட்டம் இன்று ஒரு முன்னோடி மாவட்டமாக இருந்து வருகிறது.

'நமது கிராமங்கள் முழுமையாக வளர்ந்து விட்டால் கலைத்திறனும், செயல்திறனும் மிகுதி யாக உள்ள மனிதர்களுக்குக் குறைவே இருக்காது. கிராமக் கவிஞர்களும், கிராமக் கலைஞர்களும், கிராமக் கட்டடக் கலைஞர்களும் பன்மொழிப் புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் அங்கிருப் பார்கள்' - அண்ணல் காந்தியடிகளின் இந்த எண் ணங்கள் முழுவதும் முழு வடிவம் பெறும் வகை யில் திட்டப் பணிகள் இம்மாவட்டத்தில் முழு வேகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1990-91 வரை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 64.541 அடித்தள மக்கள் பயனடைந் துள்ளனர். 1991-92-ஆம் ஆண்டில் மட்டும் வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள 5,487 மக்கள் பயனடைந்துள்ளனர் இத்திட்டத்தின் மூலம் 23,470 ஆதிதிராவிடர் பழங்குடியினப் பெரு மக்களும், 27,547 பெண்களும் பயனடைந்து உள்ளனர். இதன் மூலம் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

**ஆதிதிராவிடப் பழங்குடியினருக்குக் குடியிருப்பு வசதிகள்**


ஜகவர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 12,776 வீடுகள் கட்டி வறுமைக்கோட் டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர், பழங்குடி யினருக்கு வீட்டு வசதி செய்து தரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மட்டும் 2,200 தார்சு வீடுகள் கட்டப்பெறுகிறது. இது விரைவில் பயனாளி களிடம் ஒப்படைக்கப்படும். இன்னும் 8,561 நபர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவை நிதி வசதிக்கேற்ப படிப்படியாகக் கட்டிக் கொடுக்கப் படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக்கான மிகப் பயனுள்ள திட்டம் ஜீவன்தாரா கிணறு வெட்டும் திட்ட மா கும். இத்திட் டத் தின்கீழ் பொருளாதார நிலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விவசாயிகளுக்கு இலவச மாக கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படும். 1990-91-இல் 100 கிணறுகள் வெட்டப்பட்டன. 1991-92-ஆம் அண்டில் 900 பாசனக் கிணறுகள் வெட்டப்படுகின்றன. இதற்காக ரூ.145.62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை அரசு அளித்துள் ளது.

**சாலை வசதிகள்**

1990-91-ஆம் ஆண்டிற்கு முன் இம் மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சாலை வசதி செய்யப்பட்டிருந்தது:

1. மண் சாலைகள் - 1181.77 கி.மீ.
2. கப்பிச் சாலைகள் - 249.00 கி.மீ.
3. சரளைக்கல் சாலைகள் - 1233.22 கி.மீ.
4. தார்ச் சாலைகள் -. 307.16 கி.மீ.



1990-91-ஆம் ஆண்டில் 223.10 கி.மீ. இரண்டடுக்குச் சரளைக் கற்கள் சாலையும், 93.30 கி.மீ., தார்ச் சாலையும், அமைக்கப் பட்டது. 1991-92-ஆம் ஆண்டில் 82.35 கி.மீ. கற்சரளைச் சாலையும், 77.50 கி.மீ. தார்ச் சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. இது தவிர சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நெடுஞ் சாலைக் கிராமப் பணித்துறையின் (கிராமச் சாலைகள்) மூலம் 48.40 கி.மீ. தார்ச் சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் படிப்படியாகப் பேருந்துச் சாலைகள், தார்ச் சாலைகளாக மாறும், போக்குவரத்து வசதிகள் எளிதாக்கப்பட்டு எரிபொருள் சேமிப்புக்கு வழி வகுக்கும்.

ஒரு நிரந்தரக் கட்டடமே இல்லாத ஆரம்பப் பள்ளிகள் இல்லை என்ற நிலையும், 442 ஊராட்சி களுக்கு அலுவலகக் கட்டடங்களும் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன.

பாசன ஆதாரங்களை மேம்பாடு செய்ய 900 கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்பெற்றுள்ளன. இதனால் நிலத்தடி நீர் உயரவும், அதன்மூலம் உணவு உற்பத்தி பெருகவும் வாய்ப்புகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் வறட்சியின் கொடுமை யினால் பாதிக்கப்படும் மக்களின் துயர் துடைப்புத் திட்டங்கள் மாவட்டம் முழுவதும் பரவலாக ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டு வந்தன. 1985-86-ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

'வெளிச்சம்' - மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார் (1.5.92).

நான்காம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தூத்துக்குடி விமான நிலையத்தைத் திறந்து வைத்து, ரூ.700 கோடிக்கான நலத் திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தார் (30.4.92)

படுகின்றது. தமிழக அரசின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 34 கசிவு நீர்த் தேக்கக் குட்டைகளும். ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 60, கசிவு நீர்த் தேக்கக் குட்டைகளும் கட்டப்பெறுகின்றன. இத்திட்டம் முடிவடையும் போது பாசனக் கிணறுகள் நீரூற்றைப் பெருக்கிக் கொள்ளவும், அதன்மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் ஏதுவாக இருக்கும்.

**மனித வாழ்வின் எரிசக்தியின் முக்கியத்துவம்**

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் 1985-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் இயங்கி வருகிறது. நாகரீக உலகில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப ஏற்கெனவே உள்ள கரிசக்திகளோடு இயற்கை நமக்கு அளித்துள்ள காற்று, சூரிய ஒளி போன்ற சக்திகளை மனிதனின் அன்றாட வாழ்வுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ளும் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் அரூர் பகுதி மக்களின் மேம்பாட்டுக்காக 1989-90-இல் எரிசக்தித் திட்டம் தொடங்கப்பட்டது. 1991-92-இல் பர்கூரில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரூர் வட்டாரத்தில் எரிசக்தி நிறுவனத்தின் மூலம் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

மக்களின் அன்றாட வாழ்வில் உணவு அவசிய மாகும். இதற்குத் தேவைப்படும் எரிபொருள்களான விறகு, எரிமூட்டை, பிற எரிபொருள் சாதனங்களைச் சிக்கனப்படுத்த மேம்படுத்த சூளா அடுப்புகள் 2,600 அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 15 முதல் 20 சதம் எரிபொருள் சிக்கனத்துடன் புகை, வீட்டில் தங்காமல் வெளியேறிவிட வசதியாக உள்ளது. இதற்கான முழுச் செலவும் எரிசக்தி நிறுவனமே ஏற்கிறது.

விவசாயத்திற்குத் தேவையான நீர் பாய்ச்ச மின் மோட்டார்கள் மற்றும் ஆயில் இன்ஜின்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் குறைந்த அழுத்தத்தில் அதிக அளவில் நீர் பாய வசதியாக உராய்வு குறைந்த ஃபுட்வால்வுகள் வழங்கப் படுகின்றன. இதற்கான செலவில் 75 சதம் அரசு ஏற்கிறது. இதுவரை அரூர் ஒன்றியத்தில் 740 நபர்கள் பயனடைந்துள்ளனர். உணவு சமைக்க சரியான முறையில் அடுப்புகள் அமைக்காத காரணத்தால் எரிபொருள் பெருமளவில் விரயமாகிறது. இதைக் கட்டுப்படுத்த 'பிரியாக்கினி' (எரிபொருள் சிக்கன உலோக அடுப்பு) என்ற அடுப்புகள் வழங்கப்படுகின்றன. இது எரி பொருளைச் சுமார் 20 சதம் சேமிக்க வழி செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் அரூர் ஒன்றியத்தில் 850 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். இதற்குரிய அரசு மானியம் 75 சதம் ஆகிறது.

இயற்கை நமக்களித்துள்ள வரப்பிரசாதமான சூரிய ஒளியைக் கொண்டு உணவு சமைக்கும் 6 அடுப்புகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இதற்கு அரசு ரூ.400 நிதி உதவி அளிக்கிறது. சம்பந்தப்பட்ட நபர் ரூ.650 செலுத்தினால் போதுமானது. ஓரளவு சக்தி படைத்தவர்கள் இதை விரும்புகின்றனர். இதன் தேவை தற்போது அதிகரித்துள்ளது.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களில் ஓரளவு வசதி படைத்தவர்களுக்கு நிலத்தை உழுவதற்கு உறுதுணையாகக் கலப்பைகள் பூட்டப்பட்ட, ஒரு டன் எடைக்குக் குறையாமல் பளு ஏற்றிச் செல்லும் பல நோக்கு வசதி கொண்ட மாடுகள் பூட்டப்பட்ட 5 வண்டிகள் கடந்த ஆண்டுகளில் 5 வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 6 வண்டிகள் வழங்கப்பட உள்ளன. இதற்கான மொத்த செலவினம் ரூ.75,000 ஆகிறது. இதில் 75 சதம் மானியமாக வழங்கப் படுகிறது.

பர்கூர் வட்டாரத்தில் நடப்பு நிதியாண்டில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

1. குழாய்க் கிணற்றில் காற்றாடி அமைத்து நீர் இறைத்தல்
2. வீட்டு உபயோகத்திற்கென 10 சூரிய ஒளி அடுப்புகள் 10 வழங்குதல்.
3. நீர் இறைக்க வசதியாக 200 உராய்வு குறைந்த ஃபுட்வால்வுகள் வழங்குதல்.
4. மேம்படுத்தப்பட்ட 1000 சூளா அடுப்புகள் அமைத்தல்
5. எரிபொருள் சிக்கனத்திற்கான 400 'பிரியாக் கினி' உலோக அடுப்புகள் வழங்குதல்.
6. வேளாண்மை உபயோகத்திற்கு நிலத்தில் 4 மருந்து தெளிக்கும் ஸ்பிரேயர் வழங்குதல்.

மேற்கண்ட செயல் திட்டங்களை நிறைவேற்றவும், அவைகளில் செயல்பாடுகளைப் பொது மக்களுக்கு விளக்கவும் மொத்தம் இவ்வாண்டு பர்கூர் ஒன்றியத்திற்கு மூன்று இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**கரிமவாயுத் திட்டம்**

இத்திட்டம், இம் மாவட்டத்தில் 1981-82-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த கரிமவாயுக் கலன்

அமைப்போர்க்கு கலன் கொள்ளளவுக்குத் தக்க வாறு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கரிம வாயுக் கலன்களைப் பயனடைவோர் சொந்தச் செலவிலோ அல்லது வங்கிக் கடன் மூலமாகவோ அமைத்துக் கொள்ளலாம். 1981 முதல் இன்று வரை இம்மாவட்டத்தில் 3,250 கலன்கள் அமைக் கப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டிற்குக் குறியீடு 250-க்கு இதுவரை 125 கரிம வாயுக் கலன்கள் அமைக்கப் பட்டுள்ளன.

கரிம வாயுக் கலன்கள் கே.வி.ஐ.சி., தீனபந்து, மற்றும் ஜனதா என மூன்று வகைப்படும். அவை களில் கே.வி.ஐ.சி. மற்றும் தீனபந்து வகை மிகச் சிறந்தது. கரிமவாயுக் கலன்கள் டர்ன்கீ அமைப் பாளர் உதவி கொண்டும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மூலமாகவும் அமைக்கப்பட்டு வரு கின்றன. அமைக்கப்பட்ட கரிம வாயுக் கலன்களில் ஏதாவது பழுது ஏற்படின் கலன்களைப் பழுது பார்க்க தொழில் நுட்ப உதவி, மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

விறகுக்காகக் காடுகளை அழிப்பதைத் தடுப் பதும் எரிபொருள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்ப தும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**சாண எரிவாயுவின் பலன்கள்:**

1. கரிமவாயுக் கலனிலிருந்து கிடைக்கும் வாயு எரித்துச் சமையல் செய்ய உதவுகிறது. வீடுகளைச் சுத்தமாகவும் வைத்திருக்கலாம்.

2. மாண்டில் பொருத்தி கரிம வாயுவைக் கொண்டு ஒளி விளக்கு எரிக்கலாம்.

3. கரிம வாயுவைக் கொண்டு டீசல் என்ஜின் களையும் இயக்கலாம்.

4. கரிம வாயுக் கலன்களில் வெளியேறும் சாணக்கரைசல் மறுபடியும் சக்திவாய்ந்த உரமாகப் பயன்படுகிறது- அமோக விளைச்சலுக்கும் உறு துணையாயிருக்கிறது.

கரிமவாயுக் கலன் கட்டி முடித்த பின்பு பராமரிப்புச் செலவும், எரிபொருள் செலவும் ஏற்படுவதில்லை.

**மேம்படுத்தப்பட்ட அடுப்புகள்**

இத்திட்டம் 1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு மேம்படுத்தப்பட்ட 4,000 அடுப்புகள் கிராமங்களில் பயிற்சி பெற்ற நபர்கள் மூலம் செயலாக்கப்படுகிறது. இவ்வடுப்பு (சுகாத் மாடல்) மண்ணினால் பல பாகங்களாகச் செய்து, சுட்டு, பின்பு பயனாளிகள் விரும்பும் இடத்தில் அமைத்துத் தரப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் திட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவல கங்கள் மூலமாகச் செயலாக்கப்படுகிறது. மேம் படுத்தப்பட்ட அடுப்பு ஒன்றுக்கு ரூ.62 செலவு செய்யப்பட்டு இத்தொகை முழுவதும் மானியமாக வும் வழங்கப்படுகிறது.



**நாகரிகம்**

நாகரிகம் என்ற சொல்லுக்கு, குஜராத்தி மொழியில் நல்ல நடத்தை என்று பொருள்.

*- அண்ணல் காந்தியடிகள்.*

இந்நிதியாண்டில் இம்மாவட்டத்திற்கு 5,000 குறியீட்டிற்கு இதுவரை 4,283 மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் இத்திட்டத்தினால் விறகு சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு, விறகுக் காகக் காடுகள் அழிக்கப்படுவது கணிசமாகத் தடுக்கப்படுகிறது. குறைந்த விறகில் வெப்பத்தை வீணாக்காமல் ஒரே அடுப்பில் விறகை எரித்து இரண்டு பாத்திரங்களில் ஒரே நேரத்தில் குறைந்த கால அளவில் சமையல் செய்யலாம்.

**அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றோரின் தொழில் வளர்ச்சித் திட்டம்**

மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் ஆதரவுடன் 1985-86-ஆம் முதல் இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாவட்டத்திலுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றவர் களை ஊக்கப்படுத்தி அவர்கள் சுய தொழில்கள் அமைக்க அனைத்து உதவிகளும் இத்திட்டத்தின் மூலம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 79 அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றவர்கள் பயனடைந்து தொழில் நிறுவனங்களை நிறுவியுள்ளனர்.

**வேலைவாய்ப்புப் பெருக்குத் திட்டம்**

பல்வேறு திறன் அபிவிருத்திப் பயிற்சிகளை அளித்து அவற்றின் மூலம் சுயவேலை வாய்ப்பை அடையச் செய்ய இத்திட்டம் 1990-91- ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 69 நபர்கள் திறன் அபிவிருத்திப் பயிற்சி பெற்று சுயவேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டில் 392 நபர்களுக்கு 12 துறைகளில் பயிற்சி அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்**

இம்மாவட்டத்தின் 4 வட்டாரங்கள் தவிர ஏனைய வட்டாரங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் மண்வளப் பாதுகாப்பு, நவீன முறை புன்செய் விவசாயம், தோட்டக்கலை, வனவளம், நீர்வளம் பெருக்குதல், பட்டு வளர்ச்சி முதலிய இனங்களின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.183 இலட்சத்திற்குப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை சுமார் ரூ.136 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காகும் செலவு மைய, மாநில அரசு களால் சமமாக வழங்கப்படுகின்றன. ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

